# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா
# அவர்களின் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# விதி 110–ன்கீழான அறிக்கைகள்

**(2011 - 2014)**

# பதினான்காவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உள்ளடக்கம்


| வரிசை எண் | நடவடிக்கைக் குறிப்பு நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| **2014** | | | |
| 1. | 19-2-2014 | முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யும் அமைச்சரவையின் முடிவை அறிவித்தல் | 7-11 |
| 2. | 14-7-2014 | எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் நவீன படப்பிடிப்புத் தளங்கள் அமைத்தல் | 12-13 |
| 3. | | அரசு மைய அச்சகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் நவீனமயமாக்குமதல் | 14-15 |
| 4. | 15-7-2014 | புதிய மனைப் பிரிவுகள், குடியிருப்புகள், அலுவலகக் கட்டடங்கள், பாரம்பரிய நகரங்களுக்கு மானியம் உள்ளிட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கான கட்டமைப்பு மேம்பாடு | 16-20 |
| 5. | 16-7-2014 | தமிழ்நாடு கிரிக்கெட் கிளப்பில் நடைபெற்ற விழாவிற்கு வேட்டி அணிந்து சென்ற நீதியரசர் மற்றும் வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுப்பு மீதான அரசின் நடவடிக்கை | 21-25 |
| 6. | 18-7-2014 | முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கை | 26-29 |
| 7. | 23-7-2014 | ஐந்து தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குதல், நாமக்கல் மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல் | 30-31 |
| 8. | | ஐந்து வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல், தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்குவதற்கான வலைதளம் உருவாக்குதல், 6 தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள் அமைத்தல் | 32-33 |

| | | | |
|---|---|---|---|
| **9.** | **24-7-2014** | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான திட்டங்கள் | 34-37 |
| **10.** | | தொழில் வளர்ச்சியை அதிகரித்து வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்கள் | 38-43 |
| **11.** | | கர்ப்பிணிப் பெண்கள், தாய்மார்கள், வளரிளம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நிறைவான ஊட்டச்சத்து வழங்கும் வகையில் அங்கன்வாடிகளை மேம்படுத்துதல் | 44-47 |
| **12.** | **25-7-2014** | தமிழ்நாட்டின் சாலைகள் மற்றும் பாலங்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 48-50 |
| **13.** | | மன வளர்ச்சி குன்றியவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் புதிய மறுவாழ்வுத் திட்டங்கள் | 51-52 |
| **14.** | | இளங்கோவடிகள் பெயரில் விருது, தமிழ்ச் செம்மல் விருது ஏற்படுத்துதல் மற்றும் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் அமைத்தல் | 53-54 |
| **15.** | **30-7-2014** | நடப்பு கல்வியாண்டில் 25 மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அதிகமுள்ள 128 குடியிருப்பு பகுதிகளில் 128 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல் மற்றும் பள்ளிகளை தரம் உயர்த்துதல் | 55-58 |
| **16.** | | விளையாட்டு மேம்பாட்டிற்கான சலுகைகள் மற்றும் திட்டங்கள் | 59-61 |
| **17.** | **31-7-2014** | புதிய பேருந்துகள், சிற்றுந்துகள் இயக்குதல், வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் தொடங்குதல் உள்ளிட்ட போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் திட்டங்கள் | 62-64 |
| **18.** | | புனல் மின் நிலையங்களை நவீனமயமாக்குதல், புதிய துணை மின் நிலையங்கள், மின் மாற்றிகள் நிறுவுதல் | 65-68 |
| **19.** | | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி மற்றும் விடுதி வசதிகளை மேம்படுத்துதல், ஆசிரியர் தேர்வுக்கு பயிற்சி அளித்தல் | 69-71 |

| | | | |
|---|---|---|---|
| **20.** | **1-8-2014** | புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்குக் கட்டட மற்றும் விடுதி வசதி, உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புதல், மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரகம் அமைத்தல் | 72-75 |
| **21.** | | கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கூட்டுறவு வங்கிகளை நவீனப்படுத்தி கிளைகள் துவங்குதல், புதிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் | 76-79 |
| **22.** | | அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் தொடங்குதல், சேமிப்புக் கிடங்குகள் மற்றும் நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுதல், உணவு தானிய பரிசோதனைக் கூடங்கள் நிறுவுதல், நுகர்வோருக்கான பயிற்சி மற்றும் ஆய்வு மையம் அமைத்தல் | 80-83 |
| **23.** | **4-8-2014** | புதிய அணைகள் கட்டுதல், புனரமைத்தல் மற்றும் வாய்க்கால்களைத் தூர் வாருதல் உள்ளிட்ட கூடுதல் பாசன வசதித் திட்டங்கள் | 84-88 |
| **24.** | **4-8-2014** | பால் பண்ணைகளின் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் தீவன உற்பத்தியைப் பெருக்குதல் | 89-90 |
| **25.** | | மீன்பிடி குறைவுக் காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்துதல், புதிய மீன் இறங்கு தளங்கள், மீன் குஞ்சுப் பண்ணைகள் அமைத்தல், மீன் வளத் துறை அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் | 91-93 |
| **26.** | **7-8-2014** | மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பகுதி சாகுபடிக்கு 15–8–2014 முதல் தண்ணீர் திறந்து விடுதல் | 94 |
| **27.** | | வணிக வரி மற்றும் பதிவுத் துறைக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள், வணிக வரி ஆணையர் அலுவலகத்தை மேம்படுத்துதல், ஒசூரில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைத்தல் | 95-96 |
| **28.** | | அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை அமைத்து அம்மா விதைகள் வழங்குதல் உள்ளிட்ட வேளாண்மைத் தொழில் மேம்பாட்டுத் திட்டங்கள் | 97-101 |

| | | | |
|---|---|---|---|
| **29.** | **8-8-2014** | தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பு மற்றும் நிதியம் நிறுவி விருதுகள் வழங்குதல், திட்ட மதிப்பீடுகள் செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம், ஒருங்கிணைந்த பண்ணை முறையை ஊக்குவித்தல் | 102-103 |
| **30.** | | புதிய குடிநீர்த் திட்டங்கள், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு வசதிகள், சென்னைக்கு மழைநீர் வடிகால் வசதி, உள்ளாட்சி அமைப்புகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை மற்றும் அம்மா மக்கள் சேவை மையங்கள் அறிமுகம் | 104-107 |
| **31.** | | குடிநீர் வழங்கல், குப்பை அகற்றல், புதிய கட்டடங்கள், பிளாஸ்டிக் தார்ச் சாலைகள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன், வறுமை ஒழிப்பு, உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல் உள்ளிட்ட ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | 108-111 |
| **32.** | **11-8-2014** | வேலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல் | 112 |
| **33.** | | தேனி மாவட்டத்தில் மாவட்ட சிறைச்சாலை அமைத்தல் மற்றும் சிறைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் | 113 |
| **34.** | | மாநில தகவல் தரவு மையத்தை மேம்படுத்துதல், மாணவர்களுக்கு இணைய பதிவேற்று சேவைகள், தமிழ் இணைய வழிக் களஞ்சியம் அமைத்தல், அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் மூலம் இணைய தள சேவைகள் வழங்குதல் | 114-116 |
| **35.** | | புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்குதல் | 117-118 |
| **36.** | | உயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் காடு வளர்ப்புத் திட்டங்கள், சரணாலயங்கள் அமைத்தல், வனப் பணியாளர்கள் பயிற்சி மேம்பாடு மற்றும் காலிப் பணியிடங்கள் நிரப்புதல் | 119-121 |
| **37.** | | குறு, சிறு சாய மற்றும் சலவைப் பட்டறைகளை ஒருமுகப்படுத்த குழுமம் அமைத்தல் | 122-123 |

| | | | |
|---|---|---|---|
| **38.** | **12-8-2014** | கட்டுமானத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்யும் பல்வேறு நலத் திட்டங்கள் | 124-127 |
| **39.** | | பட்டுக்கோட்டை நகராட்சியின் பொன் விழா ஆண்டையொட்டி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த **25** கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கீடு | 128 |
| **40.** | | **106** திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டம் விரிவாக்கம், திருக்கோயிலில் பணிபுரியும் தொகுப்பூதியப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்தல், திருக்கோயில்களில் திருப்பணி செய்ய உதவித் தொகை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் | 129-133 |
| **41.** | **12-8-2014** | அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளைப் பராமரிக்கும் வகையில் **16** பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம் அறிமுகம், பயிற்சி டாக்டர்களுக்கான உதவித் தொகை அதிகரிப்பு, ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் | 134-138 |

# பதினான்காவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

# 2014

## 1. முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய அமைச்சரவை முடிவு – 19.2.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முன்னாள் பாரதப் பிரதமர், திரு. ராஜீவ் காந்தி அவர்கள், 21–5–1991 அன்று, ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற, தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், கலந்து கொள்ள வந்தபோது படுகொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை குறித்த வழக்கு பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. தடா நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், நளினி, ஸ்ரீஹரன் என்கிற முருகன், சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், பேரறிவாளன் என்கிற அறிவு ஆகிய நான்கு பேரின் தூக்குத் தண்டனையை உறுதி செய்தும், 3 பேரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தும், மீதமுள்ள 19 பேரை விடுதலை செய்தும் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களும் உச்ச நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்தனர். இந்த மறு ஆய்வு மனுவினை விசாரித்த உச்ச நீதிமன்றம் அதனை தள்ளுபடி செய்து 8–10–1999 அன்று தீர்ப்பளித்தது.

இதனைத் தொடர்ந்து, மேற்கண்ட தூக்குத் தண்டனைக் கைதிகள் மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு 17–10–1999 அன்று கருணை மனுக்களை சமர்ப்பித்தார்கள். இந்த கருணை மனுக்கள் 27–10–1999 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் நிராகரிக்கப்பட்டன.

மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் ஆணையினை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனை கைதிகளால் வழக்குகள் தொடுக்கப்பட்டன. இவற்றை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், மனுதாரர்கள் தொடுத்த வழக்குகளை ஏற்று, கருணை மனுக்களை நிராகரித்த மேதகு ஆளுநரின் ஆணையைத் தள்ளுபடி செய்ததோடு, அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை பிறப்பிக்குமாறு மேதகு ஆளுநருக்கு 25–11–1999 அன்று உத்தரவு பிறப்பித்தது.

சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி, அன்றைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தலைமையில் 19–4–2000 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது:–

''தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட நான்கு கைதிகளில் ஒருவரான நளினியின் பெண் குழந்தை அனாதையாகி விடும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கிணங்க, நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும்; மற்றவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை முடிவெடுத்தது.''

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவிற்கு மேதகு ஆளுநர் அவர்கள் **21–4–2000** அன்று ஒப்புதல் அளித்தார். அதன்படி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட **4** நபர்களில், சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை முடிவினால் பாதிக்கப்பட்ட சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூன்று பேரும் மேதகு குடியரசுத் தலைவருக்குக் கருணை மனுக்களை அளித்தனர். இந்தக் கருணை மனுக்களை **28–4–2000** நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது.

**28–4–2000** அன்று தமிழக அரசால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின்மீது **11** ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்னர், **12–8–2011** நாளிட்ட கடிதத்தின்மூலம், மேதகு இந்திய குடியரசுத் தலைவர் இந்தக் கருணை மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்த மத்திய உள் துறை அமைச்சகம், இந்தத் தகவலை மேற்கண்ட கைதிகளுக்குத் தெரியப்படுத்துமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொண்டது. இதன் அடிப்படையில், இந்தக் கடிதத்தின் விவரம் சம்பந்தப்பட்ட கைதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில், பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகிய மூன்று பேரையும் தூக்குத் தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. பல்வேறு அரசியல் கட்சிகளும், பல்வேறு அமைப்புகளும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தின. தனது மகன் பேரறிவாளனை விடுவிக்குமாறு அவரது தாய் திருமதி அற்புதம் அம்மாள் அவர்கள் என்னை கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொண்டார். மேற்படி மூவரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க முடியாது என்று தனது தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்த முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியும், சட்ட நுணுக்கங்களை

ஆராயாமல், இவர்களைக் காப்பாற்ற நான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பத்திரிகைகள் வாயிலாக வேண்டுகோள் விடுத்தார்.

29–8–2011 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், திரு. கருணாநிதியின் இரட்டை வேடத்தை நான் தோலுரித்துக் காட்டினேன். மேலும், உச்ச நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மேதகு ஆளுநரோ அல்லது மேதகு குடியரசுத் தலைவரோதான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மன்னிப்பு அளிக்க முடியும் என்பதையும்; இவர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் மன்னிப்பு அளிக்க வேண்டும் எனக் கருதப்பட்டிருந்தால், 2000 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தான் அதற்கான முடிவு எடுத்திருக்க முடியும்; எடுத்திருக்க வேண்டும் என்பதையும்; அமைச்சரவையின் அறிவுரைப்படி மேதகு ஆளுநர் அவர்களால் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களாலும் மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், தூக்குத் தண்டனையை ரத்து செய்வதற்கோ, நிறுத்தி வைப்பதற்கோ மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதையும் எடுத்துக் கூறினேன். அதாவது, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அதே பொருள் தொடர்பான கருணை மனுவை மாநில ஆளுநர் பரிசீலிக்க வேண்டும் என மாநில அரசு கோர முடியாது என 1991 ஆம் ஆண்டே மத்திய அரசு தெளிவுரை வழங்கி உள்ளதையும் எடுத்துக் கூறினேன்.

இந்திய அரசமைப்புச் சட்ட பிரிவுக் கூறு 257 உட்பிரிவு (1)–ன்படி, கருணை மனு இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 72–ன்கீழ் குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்ட பின், அதே பிரச்சினையை மாநில ஆளுநர் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 161–ன்படி எடுத்துக் கொள்ள முடியாது என்றும், மீண்டும் குடியரசுத் தலைவர் தான் கருணை மனுவை மறுபரிசீலனை செய்ய இயலும் என்றும் மத்திய அரசு உத்தரவிட்டு இருந்ததையும் சுட்டிக் காட்டினேன்.

இந்திய அரசமைப்புச் சட்டப்படி எனது அரசின் இயலாமையை சுட்டிக்காட்டிய நானே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்ற நோக்கில், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், எனக்கு வரப் பெற்ற பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில்,

> "தமிழக மக்களின் உணர்வுகளுக்கும், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில், திருவாளர்கள் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன் மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு ஆகியோரின் கருணை மனுக்களை

மறுபரிசீலனை செய்து, அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேதகு இந்திய குடியரசுத் தலைவரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்மொழிந்தேன். என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தீர்மானத்தின்மீது 2½ ஆண்டுகளாக மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு 1½ ஆண்டுகள் வரை, அதாவது மார்ச் 2013 வரை மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் தி.மு.க. அங்கம் வகித்தது. இதன்மீது நடவடிக்கை எடுக்குமாறு திரு. கருணாநிதி மத்திய அரசை வலியுறுத்தினாரா? இல்லை, வலியுறுத்தவில்லை.

மத்திய அரசும், அதனைத் தாங்கிப் பிடித்திருந்த திரு. கருணாநிதியும் எந்த நடவடிக்கையையும் எடுக்கமாட்டார்கள் என்று தெரிந்த திருவாளர்கள் சாந்தன், ஸ்ரீஹரன் மற்றும் பேறிவாளன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனுக்களில், தங்களுடைய கருணை மனுக்கள் மீது முடிவு எடுக்க 11 ஆண்டு காலதாமதம் ஏற்பட்டதைக் கருத்தில் கொண்டும், கடந்த 23 ஆண்டுகளாக சிறையில் இருப்பதைக் கருத்தில் கொண்டும், தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர். பின்னர் இந்த வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டன. இதுகுறித்த விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற போது, இவர்களின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கக் கூடாது என்று மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் சார்பில் ஆஜரான மத்திய தலைமை வழக்குரைஞர் எடுத்துரைத்தார். இருப்பினும், இந்த மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம், மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களுடைய தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து 18–2–2014 அன்று தீர்ப்பளித்ததோடு, ஆயுள் தண்டனை என்பது வாழ்நாள் முழுவதும் சிறைவாசம் என்றும், எனினும் குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 432 மற்றும் 433A–ன்படி, அரசு எடுக்கும் தண்டனை மாற்றுதல் அல்லது தள்ளுபடி செய்தல் நடவடிக்கைக்குட்பட்டது என்றும் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு வெளிவந்தவுடன், இதுகுறித்து உடனடியாக நான் விரிவாக விவாதித்தேன். இந்த விரிவான விவாதத்திற்குப் பின், இன்று,

19–2–2014, காலை எனது தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் திருவாளர்கள் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன் மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு ஆகியோர் 23 ஆண்டுகளாக சிறைச்சாலையில் இருந்து வருவதைக் கருத்தில் கொண்டு, குற்ற விசாரணை முறைச் சட்டம் 432–ல் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அவர்களை உடனடியாக விடுதலை செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது. இதேபோன்று, ஏற்கெனவே ஆயுள் கைதியாக 23 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரையும் விடுதலை செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

இருப்பினும், இந்த வழக்கு மத்திய புலனாய்வு அமைப்பினால் புலனாய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் தடா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதால், குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 435–ன்படி, தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு குறித்து மத்திய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

எனவே, மத்திய அரசின் கருத்தினைப் பெறும் வகையில், திருவாளர்கள் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன், பேரறிவாளன் என்கிற அறிவு, திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரையும் விடுதலை செய்யலாம் என்ற தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசு 3 நாட்களுக்குள் தனது கருத்தினைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால், குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 432–ல் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, திருவாளர்கள் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன், பேரறிவாளன் என்கிற அறிவு, திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் விடுவிக்கப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*******

## 2. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் நவீன படப்பிடிப்புத் தளங்கள் அமைத்தல் – 14.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நவீனமயமாக்கத்தின் மூலம் நாட்டை முன்னேற்றப் பாதையில், அழைத்துச் செல்வதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், குறிப்பேடுகள், கையேடுகள் உள்பட, அரசுக்குத் தேவையான அனைத்து அச்சகத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பணியை அரசு மைய அச்சகம் மேற்கொண்டு வருகிறது.

182 ஆண்டுகள் பழமை வாய்ந்த, அரசு மைய அச்சகத்தின் பணிப் பளு அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும், பெரும்பாலான பணிகள் குறுகிய காலத்திற்குள் முடிக்க வேண்டியிருப்பதைக் கருத்தில் கொண்டும், அச்சகத்தின் இயந்திரப் பிரிவினை நவீனமயமாக்கும் வகையில் 6 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனித் தாள் பல வண்ண அச்சு இயந்திரம், 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கணினியிலிருந்து அச்சுத் தகடு தயாரிக்கும் இயந்திரம், 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி சேகரிப்பு இயந்திரம், 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திரை அச்சு இயந்திரம் என மொத்தம் 8 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் வாங்கி நிறுவப்பட்டு உள்ளன. இதே போன்று, 67 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய காகிதக் கிடங்கு கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், சென்னை, அரசு மைய அச்சகத்தில் எதிர்பாராது ஏற்பட்ட தீ விபத்தில் கட்டடங்களும், அச்சு இயந்திரங்களும் சேதமடைந்ததால், சீரமைப்பு நடவடிக்கையாக இயந்திரக் கொள்முதல் மற்றும் தொடர்புடைய பிற பணிகளுக்காக 19 கோடியே 7 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய், கட்டடப் பணிகளுக்காக 3 கோடியே 57 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 22 கோடியே 64 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 5 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள இந்த அச்சகத்தின் 84,000 சதுர அடிகள் கொண்ட பழமை வாய்ந்த சிவப்புக் கட்டடமானது, இந்த தீ விபத்தில் முழுவதுமாக எரிந்து சேதமடைந்துவிட்டதாலும், பணியாளர்கள் சிரமமின்றி பாதுகாப்புடன் பணிபுரிய நிரந்தரமானக் கட்டடம் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டும்; 21 கோடியே 59 லட்சம் ரூபாய் செலவில் புதிய நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை, அரசு மைய அச்சகத்தில் மேற்கொள்ளப்படும், அனைத்து அச்சுப் பணிகளும் ஒரே நேரத்தில், குறைந்த காலத்தில், விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால், அங்குள்ள அச்சகப் புத்தகம் கட்டும் பிரிவு அதாவது Binding Section மேம்படுத்தப்படுவது அவசியம் ஆகும். எனவே, அரசு மைய அச்சகத்தின் அச்சகப் புத்தகம் கட்டும் பிரிவிற்காக 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம் அதாவது, Automatic Sewing Machine for Binding வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை கூடுதல் உற்பத்தித் திறனுடன் அதிக நேர்த்தியாகவும், விரைவாகவும் புத்தகங்கள் கட்டும் பணியினை மேற்கொள்ள வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 3 அரசு மைய அச்சகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் நவீனமயமாக்குதல் – 14.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனிதன் நாகரிகம் அடைந்து உருவாக்கிய படைப்புகளில் உன்னத கலைப் படைப்பாக திகழும் திரைப்படம் இன்றைய மனித வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தினைப் பெற்றுள்ளதோடு மட்டுமல்லாமல், பல லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வாழ்வாதாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படத் துறையின் வளர்ச்சிக்காகவும், நலன்களுக்காகவும் நான் பல்வேறு சலுகைகளை அளித்துள்ளேன். நான் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினை நடத்திட தமிழ்நாடு அரசின் சார்பாக, 10 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கினேன். எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் 9 கோடியே, 50 லட்சம் ரூபாய் செலவில், உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் அதாவது, Animation and Visual Effects எனும் பாடப் பிரிவு தொடங்கப்பட்டு அங்கு மாணவர்கள் பயின்று வருகின்றனர். அங்குள்ள முன் காண் திரையரங்கம், அதாவது Preview Theatre, நவீன வசதிகளுடன் 99 லட்சம் ரூபாய் செலவிலும், படப்பிடிப்புத் தளம் 1 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவிலும் புனரமைக்கப்பட்டன. திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் ஏறத்தாழ 20 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில். மாறி வரும் டிஜிட்டல் தொழில்நுட்ப முறைகளால் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்கள் அதிகரித்துள்ளதால், படப்பிடிப்புத் தளங்கள் அதிக அளவில் தேவைப்படுகிறது என்றும், எனவே, புதிய படப்பிடிப்புத் தளங்களை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் தென்னிந்திய திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் காலியாக உள்ள 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதி நவீன வசதிகளுடன் கூடிய முழுவதும் குளிரூட்டப்பட்ட இரண்டு படப்பிடிப்புத் தளங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் புதிய படப்பிடிப்புத் தளங்கள் அமைவதன் மூலம் திரைப்படத் துறையினர் பயன் பெறுவதோடு மட்டுமல்லாமல், திரைப்படப் பயிற்சி பெறும் மாணவ மாணவியருக்கும் இது பெரும் வாய்ப்பாகத் திகழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 4. புதிய மனைப் பிரிவுகள், குடியிருப்புகள், அலுவலகக் கட்டடங்கள், பாரம்பரிய நகரங்களுக்கு மானியம் உள்ளிட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கான கட்டமைப்பு மேம்பாடு – 15.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வளர்ந்து வரும் மக்கள் தொகை மற்றும் நகர்மயம் ஆக்கல் ஆகியவற்றினை கருத்திற் கொண்டு, மக்களின் மகிழ்வான, வளமான, நலமான வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியத் தேவைகளில் மிகவும் முக்கியமான ஒன்றாக கருதப்படும் வீட்டு வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதிலும், அடிப்படை வசதிகளான குடிநீர், சுகாதார வசதி, கழிப்பிட வசதி, போக்குவரத்து வசதி, சாலை வசதி ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பிலும்; தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பிலும்; பல்வேறு குடியிருப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டு, ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் மக்களுக்கு ஒதுக்கப்பட்டு உள்ளன.

இதன் தொடர்ச்சியாக, கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

1. திருச்சி மாவட்டம், நாவல்பட்டில், திருச்சி – புதுக்கோட்டை நெடுஞ்சாலை இணையும் பகுதியில் அமைந்துள்ள 68.82 ஏக்கர் நிலப் பரப்பில், 20 கோடியே 53 லட்சம் ரூபாய் செலவில், அனைத்து வசதிகளுடன் கூடிய 1,360 பல்வேறு வகை மனைகள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக 690 மனைகளும், மத்திய வருவாய் பிரிவினருக்காக 475 மனைகளும், உயர் வருவாய் பிரிவினருக்காக 195 மனைகளும் உருவாக்கப்படும்.

2. தொலைநோக்குத் திட்டம்–2023–ஐ நிறைவேற்றும் முகத்தான், மைய மற்றும் மாநில அரசுகளின் குடிசைப் பகுதிகள் அற்ற நகரங்கள் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை மற்றும் இதர நகரங்களில் 825 கோடி ரூபாய் செலவில் 10,000 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில், மைய அரசின் பங்கு 50 விழுக்காடாகவும், மாநில அரசின் பங்கு 40 விழுக்காடாகவும், பயனாளிகளின் பங்கு வீட்டு கட்டுமான செலவில் மட்டும் 10 விழுக்காடாகவும் இருக்கும். கடந்த ஆண்டு

எனது உத்தரவின்படி கட்டடப் பரப்பு 397 சதுர அடியாக அதிகரிக்கப்பட்டது. தற்போது கட்டப்பட உள்ள குடியிருப்பின் கட்டுமானப் பரப்பு 400 சதுர அடியாக இருக்கும். மேலும், மின் விசிறிகள், மின் விளக்குகள் ஆகியவை பொருத்திக் கொடுக்கப்படும். இது தவிர, அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்று அமைப்புகள் மற்றும் சமூக கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

3. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினால் நொச்சிக்குப்பம் பகுதியில் கட்டப்பட்ட 534 குடியிருப்புகள் மிகவும் சிதிலமைடந்து இருப்பதாகவும், அவற்றை மீண்டும் கட்டித் தருமாறும் அப்பகுதியில் வசிக்கும் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்களின் கோரிக்கையினை ஏற்று, நொச்சிக்குப்பம் திட்டப் பகுதியில் 534 அடுக்குமாடிக் குடியிருப்புகளை 48 கோடியே 6 லட்சம் ரூபாய் செலவில் மாநில நிதியுதவியின் கீழ் கட்ட நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு குடியிருப்பும், 400 சதுர அடி கட்டட பரப்பில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, பால்கனி, குளியலறை, கழிப்பறை வசதிகளுடன், மின்சார விசிறி மற்றும் மின்சார விளக்குகள் ஆகியவற்றை கொண்டதாக இருக்கும். இக்குடியிருப்புகளுக்கு தெரு மின் விளக்குகள், குழாய் மூலம் குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர் அகற்று வசதிகள் அமைக்கப்படும். நியாய விலைக் கடைகள், பாலர் பள்ளிகள் போன்ற சமூக உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். கடலோரப் பகுதிகளுக்கான ஒழுங்குமுறை விதிகளின் படி ஒப்புதல், கலங்கரை விளக்க ஆணைக் குழுவின் ஒப்புதல் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதல் ஆகியவை பெறப்பட்ட பின் இந்தக் குடியிருப்புகள் கட்டப்படும்.

இக்குடியிருப்புகளில் வாழும் குடும்பங்கள் தங்களது விரிவாக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குடியிருப்புகள் கோரியதால் இக்குடியிருப்புகளை மீண்டும் கட்டும் பணிகளை கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ள இயலவில்லை. இந்தக் குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற்ற குடும்பங்களுக்கு மட்டும் இந்தப் பகுதியில் கட்டப்பட உள்ள புதிய குடியிருப்புகளில் ஒதுக்கீடு அளிக்கப்படும். இவர்களது விரிவடைந்த குடும்பங்களுக்கு ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப் பகுதியில் குடியிருப்புகள் வழங்கப்படும்.

4. மாநிலத்தின் செழுமையான பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாக்க இதுகாறும் 64 நகரங்கள் புராதன நகரங்கள் என அரசால் அறிவிப்பு செய்யப்பட்டு உள்ளது. இந்த புராதன நகரங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முன்னர் ஒவ்வொரு புராதன நகரத்திற்கும் தலா 50 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்பட்டு வந்தது. இதற்கான

மானியத் தொகை 2012–2013 ஆம் ஆண்டில் 1 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள 64 புராதன நகரங்களில் 60 புராதன நகரங்களுக்கு இதுகாறும் 16 கோடியே 82 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள புராதன நகரங்களான திருப்பரங்குன்றம், திருவட்டாறு, சுசீந்திரம் மற்றும் கொடுமுடி ஆகிய நகரங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக தலா ஒரு கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். இது மட்டுமல்லாமல், திருமுருகன்பூண்டி, கழுகு மலை, சுவாமி மலை, புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில், திருப்புனவாசல் மற்றும் திருபுவனம் ஆகிய ஆறு நகரங்கள் புராதன நகரங்களாக அறிவிக்கப்பட்டு, அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக தலா ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும். மொத்தத்தில், இந்த 10 நகரங்களுக்கும் 10 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. சென்னைப் பெருநகரப் பகுதிக்கான முதலாம் முழுமைத் திட்டத்தில் மறைமலைநகர் புதுநகர் திட்டம் ஒரு புதிய நகரமாக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் உருவாக்கப்பட்டு, 1,915 ஏக்கர் பரப்பளவில் பல கட்டங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

மறைமலை நகரைச் சுற்றியுள்ள பகுதியில் பெருகி வரும் வீட்டு மனைத் தேவையைக் கருத்தில் கொண்டு, கடம்பூர் கிராமத்தில் உள்ள 222 ஏக்கர் நிலப்பரப்பை அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் தன்னிறைவு பெற்ற குடியிருப்பு பகுதியாக மாற்றி அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் கீழ், திறந்த வெளியிடம், பொது உபயோகப் பகுதிகள் மற்றும் சாலைப் பகுதிகளுடன் கூடிய உயர் தர வருவாய் பிரிவு, நடுத்தர வருவாய் பிரிவு, குறைந்த வருவாய் பிரிவு மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த வருவாய் பிரிவு ஆகியோருக்கான குடியிருப்பு மனைகள் உருவாக்கப்படும். கடம்பூர் கிராமத்தில் 58 ஏக்கர் பரப்பளவில் உள்ள ஒரு பெரிய ஏரியை நீர் நிலையாகவே நிலை நிறுத்தி, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொழுது போக்கு வசதிகளை அபிவிருத்தி செய்து, சுற்றுச்சூழல் சமன்படுத்தப்படும்.

6. கோயம்பேட்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 63 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் பல அடுக்குமாடி அலுவலகக் கட்டிடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டடம் 1 லட்சத்து 9 ஆயிரத்து 840 சதுர அடி பரப்பளவில் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் நவீன வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று அடித்தளங்கள் + தொகுப்பு

+ 8 மாடிகளைக் கொண்ட கட்டடமாக, அதாவது 3 basement floors + Stilt floor + 8 floors கொண்ட கட்டடமாக அமையும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகம் மற்றும் இதர அரசு அலுவலகங்களுக்கு இந்தக் கட்டடம் பயன்படும்.

7. சென்னைப் பெருநகரப் பகுதியில் போக்குவரத்து அமைப்பினை மேம்படுத்தி நீடித்த நிலையான கட்டமைப்பினை அமைக்க உலக வங்கி நிதி உதவியுடன், மூன்றாம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெருகி வரும் வாகன போக்குவரத்தினால் பல்லாயிரக்கணக்கான பாதசாரிகள் சாலையினை பாதுகாப்பாகவும், எளிதாகவும் கடக்க, மேற்கண்ட ஆய்வில் பல சுரங்க நடைபாதைகள் தேவை என கண்டறியப்பட்டது. அவ்வாறு கண்டறியப்பட்ட சுரங்க நடைபாதைகளில், காமராஜ் சாலையில் காந்தி சிலை அருகில்; புரசைவாக்கத்தில் கங்காதீஸ்வரர் கோவில் தெரு; அயனாவரம் – கொன்னூர் நெடுஞ்சாலை; வடபழனி – என். எஸ். கே. சாலை; கோடம்பாக்கம் மீனாட்சி கல்லூரி சாலை; அரும்பாக்கம் உள்வட்டச் சாலையில் உள்ள மெட்ரோ இரயில் நிலையம் அருகில்; ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள ஆலந்தூர் என மொத்தம் ஏழு இடங்களில் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுரங்க நடைபாதைகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சுரங்க நடைபாதைகள், அடிப்படை கட்டமைப்பு நிதி அளிப்புடன் சென்னை மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளுடன் கலந்தாலோசித்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் முன்னுரிமை அடிப்படையில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

8. இரண்டாவது பெருந்திரள் துரித இரயில் திட்டம், இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசால் தென்னக ரயில்வேயின் பெருநகர போக்குவரத்து ரயில் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டது. இரண்டாவது பெருந்திரள் துரித இரயில் திட்டத்தில், மந்தைவெளி, கிரீன்வேஸ் ரோடு, கோட்டூர்புரம், கஸ்தூரிபாய் நகர், இந்திரா நகர், திருவான்மியூர், தரமணி, பெருங்குடி மற்றும் வேளச்சேரி ஆகிய ஒன்பது ரயில் நிலையங்கள் உள்ளன. இவை அனைத்தும், முடிக்கப்பட வேண்டிய சில இறுதிப் பணிகளுடன் இயங்கி வருகின்றன. இந்தத் திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கும் போதே, தமிழக அரசானது இரண்டாவது பெருந்திரள் துரித ரயில் திட்டத்தில் அமைந்துள்ள ரயில் நிலையங்களின் மேல் உள்ள திறந்த வெளியினை வணிக நோக்கத்திற்காக பயன்படுத்த திட்டம் தீட்டுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது. இதன்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் உரிய கலந்தாய்வாளர்களையும், கட்டிடக்கலை வல்லுநர்களையும், வணிக கட்டடங்களை திட்டமிடுவதற்காக நியமித்தது. ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் கலை நுணுக்கத்துடன் மேலும் மேம்படுத்தப்பட்ட

வசதிகள் கொண்ட பிரத்யேக வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகள் கொண்ட வணிக வளாகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வேளச்சேரி துரித ரயில் நிலையத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள வணிகப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஒப்பந்த ஆவணங்கள் உள்ளடக்கிய விரிவான சாத்தியக்கூறு அறிக்கை கலந்தாலோசகர் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில், வேளச்சேரி ரயில் நிலையத்தின் மேல் அலுவலக வளாகம் அமைப்பதற்கான, சாத்தியக்கூறு இருப்பதாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையின்படி, வேளச்சேரி பறக்கும் ரயில் நிலையத்தின் மேல் 1 லட்சத்து 11 ஆயிரம் சதுர அடி பரப்பில், இரண்டு தளம் கொண்ட அலுவலக வளாகம் சுமார் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான இந்த அரசின் நடவடிக்கைகள் மூலம், அனைத்துத் தரப்பு மக்களின் வீட்டு வசதி, அரசு அலுவலகங்களின் அலுவலக வசதி மற்றும் போக்குவரத்து வசதிக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 5. தமிழ்நாடு கிரிக்கெட் கிளப்பில் நடைபெற்ற விழாவிற்கு வேட்டி அணிந்து சென்ற நீதியரசர் மற்றும் வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுப்பு மீதான அரசின் நடவடிக்கை – 16.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெளிநாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் எல்லாம் தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி அணிந்து கலந்து கொள்வதற்கோ அல்லது உரையாற்றுவதற்கோ எவ்வித தடையும் இல்லாத சூழ்நிலையில், தமிழ்நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சியில் வேட்டி அணிந்து பங்கேற்க தனியார் மன்றம் தடை விதித்திருப்பது அரசமைப்புச் சட்டத்திற்கும், ஜனநாயக மரபுகளுக்கும், தனி நபர் உரிமைக்கும், தமிழ் கலாச்சாரத்திற்கும் எதிரான செயல்.

11.7.2014 அன்று மாலை சென்னை சேப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்தில், அதாவது கூயஅடை சூயனர ஊசஉைமநவ ஹளளடிஉயைவடிே ஊடரஇ–ன் கூட்ட அரங்கில், ஒரு பொது நிகழ்ச்சி, அதாவது சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் பொறுப்பு தலைமை நீதிபதி அவர்கள் எழுதிய புத்தகத்தின் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கு முன்னாள் தலைமை நீதியரசர்கள், நீதியரசர்கள், வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. னு.அரி பரந்தாமன் அவர்களும் மற்றும் அவரோடு சில மூத்த வழக்கறிஞர்களும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்திற்குள் செல்ல முயன்ற போது, வேட்டி அணிந்து இருந்தனர் என்ற ஒரே காரணத்தைக் காட்டி, அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு இருக்கிறது.

இந்தச் செயல் தமிழர்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் அவமதிக்கும் செயல் ஆகும்; கொச்சைப்படுத்தும் செயல் ஆகும். இதற்கு எனது கடும் கண்டனத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தான் இது போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சி அகற்றப்பட்டு 67 ஆண்டுகள் ஆகியும் இது போன்ற செயல்கள் நடைபெறுவது மிகவும் வேதனைக்குரியது.

இந்தப் பிரச்சனை 14.7.2014 அன்று தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்துக் கட்சியினரும் தங்களது மேலான கருத்துகளை தெரிவித்து இருக்கிறார்கள். இந்தச் செயலுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மன்ற விதிகளில் திருத்தம் செய்ய வேண்டும்

என்றும், இதற்காக சட்டம் கொண்டு வர வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் பேசி இருக்கிறார்கள். இந்த அவைக்கு வெளியேயும் சிலர் தங்கள் கருத்துகளை தெரிவித்து இருக்கிறார்கள்.

தி.மு.க. சார்பில் இந்த அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், "... இது குறித்து அரசு உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து, தமிழ் பாரம்பரியத்திற்குரிய அந்தப் பெருமையை நிலைநாட்டிட வேண்டும்" என்று தெரிவித்து உள்ளார்.

இந்தத் தருணத்தில் 2010-ஆம் ஆண்டு இந்த அவையில் நடைபெற்ற ஒரு விவாதத்தை இங்கே எடுத்துக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன்.

2010–2011–ஆம் ஆண்டிற்கான சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர், "... நம்முடைய சென்னை தலைநகரிலே உள்ள கிரிக்கெட் கிளப், போட் கிளப் போன்ற இடங்களுக்கு நாம் வேட்டி கட்டிச் சென்றால் அனுமதிப்பது கிடையாது. அப்படிப்பட்ட ஒரு தடை விதித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நாம் வேட்டி கட்டாமல் செல்ல முடியுமா? பீகாரில் இப்படித்தான் ஓர் ஓட்டலில் பீகார் உடை அணிந்து சென்றவர்களை தடுத்த காரணத்தினால், அந்த ஓட்டலையே மூடிவிட்டார்கள். எனவே, இதற்கு மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். ..." என்று பேசி இருக்கிறார்.

அதற்கு அப்போதைய துணை முதல்வர், அதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், "...வேட்டி கட்டுவதில் இருக்கின்ற பிரச்சனைப் பற்றி இங்கே பேசி இருக்கிறார். முதலில் அவர் தொடர்ந்து சட்டமன்றத்திற்கு வேட்டிக் கட்டிக் கொண்டு வர வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை நான் வைக்கிறேன்" என்று பதில் அளித்துள்ளார்.

இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தப் பிரச்சனை சுட்டிக் காட்டப்பட்டும், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத் தான்.

இன்னொரு சம்பவத்தையும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் முன்னாள் கௌரவ ஆலோசகர், 2007–ஆம் ஆண்டு சென்னை கிரிக்கெட் கிளப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றுவதற்காக சென்ற போது, வேட்டி அணிந்து இருந்தார் என்ற

காரணத்தைக் காட்டி அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இது குறித்து அப்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கு கடிதம் எழுதியதோடு, தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷனுக்கு எதிராக கையெழுத்து இயக்கத்தையும் அவர் நடத்தி இருக்கிறார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் எல்லாம் வெளி வந்தது. ஆனால், இதன் மீதும் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்தத் தருணத்தில் சர். பி. தியாகராயர் வாழ்க்கையிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தை உங்களிடையே நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சியின் தலைவராக சர். பி. தியாகராயர் இருந்த சமயத்தில் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்தார். அப்போது சென்னை மாகாண கவர்னராக இருந்தவர் லார்டு வில்லிங்டன்.

லார்டு வில்லிங்டன் அவர்கள் சர் தியாகராயரைப் பார்த்து, "சென்னை மாநகரின் முதல் பிரஜை என்கிற முறையில் நீங்கள் தான் இளவரசரை வரவேற்க வேண்டும்" என்றார். அதற்கு சர் தியாகராயரும் சம்மதம் தெரிவித்தார்.

அதன் பின்னர் சென்னை மாகாண கவர்னர் லார்டு வில்லிங்டன் சர் தியாகராயரை சந்தித்த போது, "இளவரசரைச் சந்திக்கின்ற போது நீங்கள் இன்னின்ன மாதிரி உடை தான் உடுத்திக் கொண்டு வர வேண்டும்" என்று நிபந்தனை போட்டார்.

அப்போது, சர். தியாகராயர் என்ன செய்தார் தெரியுமா? அரசாங்கத்துக்கு ஒரு பதில் எழுதினார்.

அந்தப் பதிலில், "என்னுடைய வெள்ளை வேட்டி, வெள்ளைக் கோட்டு, வெள்ளைத் தலைப்பாகை ஆடைகளோடு இளவரசர் என்னைப் பார்க்க விரும்பினால் நான் அவரை மனதார வரவேற்கிறேன். இந்த ஆடையுடன் நான் அவரைப் பார்க்க முடியாதென்று நீங்கள் முடிவெடுத்தால், இளவரசரை வரவேற்கிற பாக்கியம் எனக்கு இல்லை என்று நினைத்து அமைதி பெறுவேன். இளவரசரை வரவேற்பதற்காக நான் என்னுடைய வழக்கமான ஆடைகளை மாற்றிக் கொள்வதற்கில்லை" என்று உறுதிபடத் தெரிவித்தார் சர். தியாகராயர்.

பின்னர் என்ன நடந்தது தெரியுமா?

ஆங்கிலேய அரசே பணிந்து வந்தது. சர். தியாகராயர் தன்னுடைய வழக்கமான உடையிலேயே வேல்ஸ் இளவரசரை வரவேற்க அனுமதி வழங்கியது.

தன்னுடைய உறுதியான நடவடிக்கையால் ஆங்கிலேய அரசையே பணிய வைத்த பெருமைக்குரியவர் சர். தியாகராயர். ஆங்கிலேய அரசையே பணிய வைத்த நமக்கு மன்றங்கள் எம்மாத்திரம்?

இந்தப் பிரச்சனை குறித்த மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு பதில் அளித்து பேசிய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்று கூறினார்.

இந்தப் பிரச்சனை குறித்து நான் அரசு உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்தேன். தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றம் என்பது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு பதிவு செய்யப்படும் போது, அதற்கான துணை விதிகளை வகுத்து தமிழ்நாடு சங்கங்களின் பதிவாளருக்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றம் சமர்ப்பித்துள்ளது. அந்தத் துணை விதியில், உடை அணியும் முறைகள் குறித்து கீழ்க்காணுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**“10. DRESS REGULATION**

Persons will not be admitted into the Club premises if they are not decently dressed. Persons attired in coloured Bermudas, colour / multi colour lungies, cut banians / vests and / or wearing hawai chappals will not be permitted into THE TNCA CLUB.”

அதாவது, கண்ணியமான ஆடையை அணியாதவர்கள் கிளப்பிற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். வண்ண அரைக்கால் சட்டைகள், வண்ண மற்றும் பல வண்ண லுங்கிகள், கையில்லாத பனியன்கள், அரையங்கிகள் மற்றும் ஹவாய் காலணிகள் ஆகியவற்றை அணிந்து கொண்டு வருபவர்கள் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க கிளப்பிற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அந்த துணை விதியில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதில் வேட்டியை பற்றி குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, வேட்டி அணிந்தவர்களை சங்க கட்டட வளாகத்திற்குள் அனுமதிக்காத தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்தின் செயல்பாடு, தமிழர் நாகரிகத்தையும், தமிழர் பண்பாட்டினையும் இழிவுபடுத்துவதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்ற விதிகளுக்கும் முரணானதாகும். இது ஒரு sartorial despotism, அதாவது உடை தொடர்பான எதேச்சதிகாரம் ஆகும்.

இது குறித்து, தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்திற்கு விளக்கம் கேட்டு ஒரு கடிதம் அனுப்புமாறு தமிழ்நாடு அரசின் சங்கங்கள் பதிவாளருக்கு நான் உத்தரவிட்டு உள்ளேன்.

தமிழர் உடையான வேட்டி அணிந்து வருவதற்கு தடை விதிக்கும் இது போன்ற நடைமுறை சென்னையில் உள்ள சில கிளப்புகளில் உள்ளதாக தகவல்கள் வருகின்றன. இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், உரிய சட்ட முன் வடிவு நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதையும், அதன் அடிப்படையில் தமிழர் கலாச்சாரத்திற்கு எதிரான செயல்களில் இனி வருங்காலங்களில் மன்றங்கள் ஈடுபடுமேயானால், அந்த மன்றங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 6. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கை – 18.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என்ற தமிழக மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு எனது தலைமையிலான அரசு எடுத்த திடமான, உறுதியான, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மற்றும் உச்ச நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு முன்பு தமிழகத்தின் சார்பில் வைக்கப்பட்ட வலுவான வாதங்கள் மூலம் தமிழகத்திற்கு கிடைத்த நியாயமான தீர்ப்பினையடுத்து, மத்திய அரசின் ஒத்துழைப்போடு நேற்று, அதாவது, 17.7.2014 அன்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு மேற்பார்வை குழு எடுத்த முடிவினை அடுத்து; அடைப்பான்கள் அதாவது shutters கீழ் இறக்கப்பட்டன. இது தமிழ்நாட்டிற்கு கிடைத்த வெற்றி; தமிழக மக்களுக்கு குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கிடைத்த மகத்தான வெற்றி. இந்த நடவடிக்கை மூலம் 37 ஆண்டுகளுக்குப்பின் கிடைத்த வரலாற்று சிறப்பு மிக்க இந்த வெற்றி என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறது. இதன் மூலம், முல்லைப் பெரியாறு நதிநீர்ப் பிரச்சனையில் தமிழக மக்களின் உரிமை நிலைநாட்டப்பட்டு இருக்கிறது.

தேனி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு உயிர் நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணை குறித்து கேரள மற்றும் சென்னை உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் 2002 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டன. இந்த வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற போது, எனது அறிவுரையின் பேரில், எனது தலைமையிலான தமிழக அரசின் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட வலுவான வாதங்களை அடுத்து, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் எனவும்; அணையினை பலப்படுத்தும் எஞ்சிய பணிகளை மேற்கொள்ளலாம் எனவும்; இப்பணிகளை மேற்கொள்வதற்கு தமிழக அரசுக்கு கேரள அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும் 27.2.2006 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பலப்படுத்தும் பணிகள், மத்திய நீர்வளக் குழுமம் கூறியபடி முடிக்கப்பட்டவுடன் தனிப்பட்ட நிபுணர்கள் மேற்கொண்டு ஆய்வு நடத்தி, அணையின் நீர்மட்டத்தை உச்சமட்ட நீரளவான 152 அடிக்கு உயர்த்துவது குறித்து முடிவு செய்வார்கள் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரை வழங்கியது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பினை முற்றிலும் அவமதிக்கும் வகையில், கேரள அரசு, 2003ம் ஆண்டைய கேரளா நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டது. இந்த திருத்தச் சட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையின் உச்ச மட்ட நீரளவு 136 அடி என நிர்ணயம் செய்யப்பட்டது. கேரளா அரசின் இந்த சட்ட திருத்தம் செல்லத் தக்கது அல்ல என உத்தரவிடக் கோரி 31.3.2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

முல்லைப் பெரியாறு அணையின் வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்ற அரசமைப்பு பிரிவு, ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் அவர்களை தலைவராக கொண்டு; 5 நபர்களை கொண்ட ஒரு அதிகாரம் படைத்த குழுவினை அமைக்க உத்தரவிட்டது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க அரசின் முதலமைச்சர் திரு. கருணாநிதி இந்த குழுவில் தமிழகம் இடம் பெறாது என அறிவித்தார். தமிழகத்தின் சார்பில் இந்தக் குழுவில் பிரதிநிதியை நியமித்தால் தான் தமிழகத்தின் நலனை காப்பாற்ற முடியும் என நான் அறிக்கை வெளியிட்ட பின் தமிழகத்தின் சார்பில் ஒரு பிரதிநிதியை முந்தைய மைனாரிட்டி தி.மு.க அரசு நியமித்தது.

உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழு முன்பு தமிழக அரசின் சார்பில் நியாயமான, வலுவான, திறமையான வாதங்கள் வைக்கப்பட்டன. தமிழ்நாடு மற்றும் கேரள அரசின் சார்பில் வைக்கப்பட்ட வாதங்களை கருத்தில் கொண்டும்; ஆய்வுகளின் அடிப்படையிலும்; அதிகாரம் படைத்த குழு தனது அறிக்கையினை 25.4.2012 அன்று உச்ச நீதிமன்றத்திற்கு அளித்தது.

உச்ச நீதிமன்ற தலைமை நீதியரசர் தலைமையிலான 5 நீதியரசர்களை கொண்ட அரசமைப்பு அமர்வு தனது தீர்ப்பினை 7.5.2014 அன்று வழங்கியது. இந்த தீர்ப்பில், தமிழ்நாடு தாக்கல் செய்த சிவில் வழக்கு தீர்ப்பாணை அதாவது, Decreed ஆக்கப்பட்டது. கேரள அரசின், கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், 2006, அரசமைப்பு சட்டத்திற்கு முரணானது என்று உத்திரவிட்டதோடு; உச்ச நீதிமன்றம் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரையில் உயர்த்திக் கொள்ளலாம் என்ற தீர்ப்பிற்கு கேரள அரசு குறுக்கீடு ஏதும் செய்யக் கூடாது என்றும்; அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டவாறு தமிழ்நாடு அரசு பராமரிப்பு பணி மற்றும் வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. மேலும், கேரள அரசின் அச்சங்களில் உண்மை ஏதுமில்லை என்றாலும்; மத்திய நீர்வளக் குழுமம், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களின் சார்பில் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு அணையின் நீர்மட்டத்தை 142 அடி அளவுக்கு உயர்த்தப்படுவதை மேற்பார்வையிட வேண்டும் என்றும் இந்தத் தீர்ப்பில் கூறப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை நடைமுறைப்படுத்தும் வகையில், மூவர் குழுவை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாண்புமிகு பாரதப் பிரதமரை **3.6.2014** அன்று நான் நேரில் சென்று, டெல்லியில் சந்தித்து கோரிக்கை மனுவினை அளித்ததோடு; அதில் உள்ள அம்சங்களை மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினேன். என்னுடைய கோரிக்கையில் இருந்த நியாயத்தைப் புரிந்து கொண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஆவன செய்வதாக என்னிடம் உறுதி அளித்தார். அதன்படி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கேற்ப மேற்பார்வைக் குழுவை அமைப்பதற்கான ஆணையை **1.7.2014** அன்று மத்திய அரசு வெளியிட்டது.

இந்த ஆணை கிடைக்கப் பெற்றவுடன்; மேற்பார்வை குழு கூட்டம் உடனடியாக கூட்டப்பட வேண்டுமென்று மேற்பார்வைக் குழுவின் தலைவரை தமிழக அரசு கேட்டுக் கொண்டது. அதன் அடிப்படையில், இந்தக் குழுவின் முதல் கூட்டம் **8.7.2014** அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அந்த கூட்டத்திலேயே முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை **142** அடியாக உயர்த்துவதற்குரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. மேற்பார்வைக் குழுவின் இரண்டாவது கூட்டம் நேற்று, அதாவது, **17.7.2014** அன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உச்ச நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றும் வகையில் அணையின் நீர்மட்டத்தை **142** அடி வரை உயர்த்துவதற்கு முடிவு செய்யப்பட்டு; அவ்வாறு **142** அடி வரை நீரை தேக்கி வைப்பதற்கு ஏதுவாக அடைப்பான்கள், அதாவது shutters, நேற்றே இறக்கப்பட்டன.

தி.மு.க தலைவர் திரு. கருணாநிதி, மேற்பார்வைக் குழுவின் முதல் கூட்டம் நடைபெறுவதற்கு முதல் நாள் "இனி என்ன செய்யப் போகிறது இந்த அரசு?" என்ற தலைப்பில் மேற்பார்வைக் குழுவின் செயல்பாட்டுக்கு தடை விதிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்திடம் கேரள அரசு கேட்டுள்ளதே என்று உண்மைக்கு மாறாக தெரிவித்து; "தமிழக அரசு இந்தப் பிரச்சனையில் என்ன செய்யப் போகிறது ?" என்று கேள்வி கணையும் தொடுத்திருந்தார். அதற்கு நான் கேரள அரசு தடை கோரி எந்த மனுவினையும் தாக்கல் செய்யாத போது; கேரள அரசை தூண்டும் வகையில் திரு கருணாநிதி அறிக்கை வெளியிட்டதை கண்டித்தேன். மேலும் "தமிழகத்திலே திறம்பட செயல்படும் அரசு இருப்பதால் தான், முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழகத்திற்கு நியாயமான தீர்ப்பு கிடைக்கப் பெற்றது; மேற்பார்வைக் குழு அமைக்கப்பட்டது; மேற்பார்வைக் குழுக் கூட்டத்திற்கான நாளும் குறிக்கப்பட்டுவிட்டது; விரைவில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் **142** அடியாக நிச்சயம் உயர்த்தப்படும்" என்று தெரிவித்து இருந்தேன்.

நான் தெரிவித்து இருந்ததைப் போலவே, நேற்று அணையின் அடைப்பான்கள், அதாவது shutters கீழே இறக்கப்பட்டு 142 அடி வரை தண்ணீர் தேக்கி வைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை, தமிழகத்திற்கு, தமிழக மக்களுக்கு, கிடைத்த வெற்றி. “வெற்றி” என்பதை விட இது தமிழக மக்களுக்கு “வழங்கப்பட்ட நீதி” என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 7. ஐந்து தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குதல், நாமக்கல் மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல் – 23.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதாரம் சிறக்கவும்; வேலைவாய்ப்புகள் பெருகவும்; மக்கள் தேவைகள் பூர்த்தி அடையவும் வேண்டுமென்றால்; ஏட்டுக் கல்வியுடன் தொழிற் கல்வியும் அவசியம் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, தொழில் கல்வியை ஊக்குவிப்பதிலும்; தொழிற் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

எனது தலைமையிலான அரசால் வகுக்கப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை பூர்த்தி செய்ய தொழில் கல்வி படித்தவர்களும், தொழில் திறன் பெற்றவர்களும் தேவை. இதனைக் கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டு 10 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாகவும்; மாணாக்கர்களின் விருப்பத்தினை நிறைவு செய்யும் வகையிலும்; நடப்பாண்டில் திருச்சி மாவட்டத்தில் உள்ள மணிகண்டம்; விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சின்ன சேலம்; திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடையநல்லூர்; கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோவில்; மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலைப்பேட்டை ஆகிய 5 இடங்களில் உள்ள இளைஞர்கள் தொழிற் கல்வி பயின்று வேலைவாய்ப்பு பெற்று பயனடையும் வகையில், 40 கோடியே 4 லட்சம் ரூபாய் செலவில் 5 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் எனது தலைமையிலான அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் 15 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொடங்கியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிருக்கென, அம்பத்தூர், கிண்டி, புள்ளம்பாடி, கடலூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், நாமக்கல், நாகர்கோவில், ஆண்டிப்பட்டி மற்றும் கரூர் ஆகிய இடங்களில் 12 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த 3 ஆண்டுகளில் சொந்தக் கட்டடம் இல்லாத கடலூர் மற்றும் கரூர் மகளிர் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

2003–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நாமக்கல் மகளிர் அரசு தொழிற் பயிற்சி நிலையம் மட்டும் இன்று வரை வாடகைக் கட்டடத்தில் வசதி குறைவுடன் இயங்கி

வருவதாகவும், இதன் காரணமாக மகளிர் பயிற்சி பெறுவதில் அதிக சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்பதும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

மகளிர் சிரமமின்றி தொழிற் பயிற்சி பெறும் வகையில், நாமக்கல் மகளிர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆய்வுக்கூடம், வகுப்பறை, அலுவலக அறை, நூலக அறை ஆகிய வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், வருங்காலத்தில் தொழிற் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிக்க வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 8. ஐந்து வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல், தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்குவதற்கான வலைதளம் உருவாக்குதல், 6 தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள் அமைத்தல் – 23.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலை நாடுநர்களின் நலனைக் கருத்தில் கொண்டு; வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ய வருவோருக்கு போதிய வசதிகளை அளிப்பதிலும்; அவர்களுக்கு விரைந்து வேலைவாய்ப்புகளை வழங்குவதிலும்; தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் பாதுகாப்பினை மேம்படுத்துவதிலும்; அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளை அளிப்பதிலும் எனது தலைமையிலான அரசு கண்ணும் கருத்துமாக விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற தங்கள் கல்வித் தகுதிகளை பதிவு செய்வதற்கு 37 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 32 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. நான் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற போது, பெரும்பாலான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் இட நெருக்கடியில் செயல்பட்டு வருவது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இவற்றிற்கு ஒரு தீர்வு காணும் பொருட்டு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என முடிவு எடுத்தேன். இதன் அடிப்படையில், முதற்கட்டமாக 2011-2012–ஆம் நிதியாண்டில் 10 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும், 2012-13–ஆம் நிதியாண்டில் 5 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டது. தற்போது 18 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, 2014-2015–ஆம் நிதியாண்டில், ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு 1 கோடியே 65 லட்சம் ரூபாய் வீதத்தில், 8 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில்; காஞ்சிபுரம், விழுப்புரம், திருவாரூர், திருவள்ளூர் மற்றும் தருமபுரி ஆகிய ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன் கீழ், புதிய தொழிற்சாலைகளை பதிவு செய்து உரிமம் வழங்குதல் மற்றும் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட சுமார் 42,000 தொழிற்சாலைகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பித்தல் போன்ற

பணிகளில் நடைமுறையில் உள்ள சிரமங்கள் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. அரசு சேவைகள், தொழில் முனைவோருக்கு உரிய நேரத்தில் சென்றடைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, உரிமம் வழங்கும் பணி இனிமேல் வலை தளம், அதாவது Web Portal மூலம் மேற்கொள்ளப்படும் என்பதையும்; தொழில் வழி பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த விவரங்கள், கோட்பாடுகள் மற்றும் புதிய யுத்திகள் ஆகியவற்றையும் தொழிலாளர், தொழிற்சாலைகள் நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் வலை தளம் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றை செயல்படுத்தும் வகையில், 2 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கென பிரத்யேக வலை தளம் உருவாக்கப்படும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தொழிலாளர்களின் மருத்துவ சேவையினை மேம்படுத்தும் வகையில், 20 புதிய இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களைத் துவக்கியும்; 33 புதிய பகுதிகளை திட்டத்தில் சேர்த்தும்; 1 இலட்சத்து 83 ஆயிரத்து 537 தொழிலாளர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் திட்டப் பயன்கள் பெற எனது தலைமையிலான அரசு வழிவகை செய்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 205 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மூலம் காப்பீட்டாளர்களுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில், கூடங்குளம், நாரணமங்கலம், திருச்செந்தூர், ஓசூர் (சிப்காட்–II), நெய்வேலி மற்றும் சிவகாசி (நாரணபுரம்) ஆகிய 6 இடங்களில் 4 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக மருந்தகங்கள் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்ட செயலாக்கத்திற்காக 19 மருத்துவர்கள் உள்ளிட்ட 96 பணியிடங்கள் உருவாக்கப்படும். இதன் மூலம் 15,884 தொழிலாளர்கள் பயன் பெறுவர்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், அதிக வசதிகளுடன் காற்றோட்டமான சுற்றுச்சூழலில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்படவும், தொழிலாளர் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் வலை தளம் மூலம் அனைவரும் தெரிந்து கொள்ளவும், தொழிலாளர்கள் கூடுதல் மருத்துவச் சேவையினை பெறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 9. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான திட்டங்கள் – 24.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதார வளர்ச்சியின் உந்து சக்தியாகவும்; தொழில் முனைவோர் செயல் திறன் மேம்பாடு அடைவதற்கான நாற்றங்காலாகவும்; நிலைத்த வேலைவாய்ப்பினை வழங்கும் அட்சய பாத்திரமாகவும் விளங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை உருவாக்குவதில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்திற்கு அளிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் 31.3.2014 அன்றைய நிலவரப்படி 9.68 லட்சம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளன. இத்தொழில் நிறுவனங்களிலும், புதியதாக ஏற்படுத்தப்படும் தொழில் நிறுவனங்களிலும் தேவைப்படும் மனித ஆற்றலை வழங்கிடும் வகையிலும்; வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் "அம்மா திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி திட்டம்'' என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ், 18 முதல் 25 வயது வரையிலான பொறியியல், தொழிற் கல்வியியல், தொழில் பட்டயப் படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று வேலையில்லாத இளைஞர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்புடன் கூடிய பயிற்சி அளிக்கப்படும். இதன்படி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 6 மாதங்களுக்கான வேலை குறித்த பயிற்சியினை இளைஞர்களுக்கு அளிக்கும். பயிற்சி காலத்தில் தொழில் நிறுவனங்கள் மாதம் 5,000 ரூபாய் உதவித் தொகை வழங்கும். ஆறு மாத பயிற்சி முடிந்தவுடன், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 12,000 ரூபாயினை அரசு வழங்கும். 6 மாத பயிற்சிக்குப் பிறகு, பயிற்சி பெற்றவர்களின் திறமை, தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால், அதாவது National Skill Development Corporation-ஆல் அறியப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்தச் சான்றிதழ் பெறுவதற்கான கட்டணத்தையும் அரசு வழங்கும். ஆறு மாத பயிற்சி முடித்த இளைஞர்களை தொழில் நிறுவனங்கள் வேலைக்கு அமர்த்திக் கொள்ளும். வேலையில் சேர்த்துக் கொண்ட பின் வழங்கப்படும் ஊதியம் 5000 ரூபாய் அல்லது தொடர்புடைய சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் இவற்றுள் எது உயர்ந்ததோ அத்தொகை சம்மந்தப்பட்ட நிறுவனங்களால்

வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 25,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இதில் 30 சதவீதம் மகளிருக்கென ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்திற்காக 32 கோடியே 50 லட்சம் ரூபாயினை அரசு வழங்கும். இத்திட்டம், படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் தகுந்த ஊதியத்துடன் கூடிய பயிற்சியினை பெற்று வேலைவாய்ப்புகளை பெற வழி வகுக்கும்.

2. சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளவர்களை; குறிப்பாக படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை; சுய தொழில் முனைவோர்களாக ஆக்கும் வகையில் தமிழக அரசு உருவாக்கியுள்ள வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 1 லட்சம் ரூபாய் முதல் 5 லட்சம் ரூபாய் வரையிலான முதலீட்டில் தொழில் நிறுவனங்களை அமைக்க முன் வருவோருக்கு, திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காடு அல்லது அதிகபட்சம் 75,000 ரூபாய் என்ற அளவில் தற்போது அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மானியத்தை 25 விழுக்காடாக அதிகரித்து, அதிகபட்சம் 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 25 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

3. சிட்கோ நிறுவனம், அரசால் நிறுவப்பட்ட 35 தொழிற்பேட்டைகளையும்; சிட்கோவால் நிறுவப்பட்ட 62 தொழிற்பேட்டைகளையும் பராமரித்து வருகிறது. நடப்பாண்டில் மேலும் மூன்று தொழிற்பேட்டைகள் திண்டுக்கல் மாவட்டம் ஆர். கோம்பையில் 51.26 ஏக்கரிலும்; காஞ்சிபுரம் மாவட்டம் தண்டரையில் 43 ஏக்கரிலும்; மற்றும் கரூர் மாவட்டம் புஞ்சை காளக் குறிச்சியில் 54.27 ஏக்கரிலும் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூன்று தொழிற்பேட்டைகளுடன் சேர்த்து சிட்கோ நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ள தொழிற்பேட்டைகளின் எண்ணிக்கை 100 ஆக உயரும். மேற்கண்ட 3 இடங்களில் 148.53 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்படவுள்ள புதிய தொழிற் பேட்டைகளில் 23 கோடி ரூபாய் செலவில் தார் சாலைகள்; தெரு விளக்குகள்; குடிநீர் வசதி; பொது வசதி மையம் போன்றவை ஏற்படுத்தப்படும். இந்த தொழிற்பேட்டைகளில் வாகன உதிரி பாகங்கள்; பொது பொறியியல் அலகுகள்; பின்னலாடை தொழிற்சாலைகள் மற்றும் ஜவுளித் தொழிற்சாலைகள் என ஏறத்தாழ 345 தொழில் மனைகள் அமையப் பெற்று ஏறக்குறைய 10,000 பேர் வேலைவாய்ப்பினை பெறுவர். இந்தத் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான செலவினம் சிட்கோவின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

4. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக அதாவது, சிட்கோவின் மூலமாக, விழுப்புரம் மாவட்டம் காட்டு வன்னஞ்சூர்; தருமபுரி மாவட்டம் பர்வதனஹள்ளி; அரியலூர் மாவட்டம் மல்லூார்; மற்றும் நாமக்கல் மாவட்டம் வேட்டம்பாடி

ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகள் உருவாக்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த 4 தொழிற் பேட்டைகளில் 13 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை; மழைநீர் கால்வாய்; சிறு பாலம்; தெரு விளக்கு போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயில்; காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம்; சேலம் மாவட்டம் கருப்பூர்; திருச்சி மாவட்டம் வாழவந்தான் கோட்டை; மற்றும் மதுரை மாவட்டம் கப்பலூர் ஆகிய 5 இடங்களில் எனது ஆணைப்படி மகளிருக்கென தனியாக தொழிற் பூங்காக்கள் 358.44 ஏக்கர் பரப்பளவில் 1198 தொழில் மனைகளுடன் உருவாக்கப்பட்டு; 2001–ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றன. இத்தொழிலகங்களில் 9,100 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். மேற்கண்ட தொழிற் பூங்காக்களில், மகளிர் தொழில் முனைவோர்கள் தங்களது தொழில் நடவடிக்கைகளை போட்டித் திறனுடன் மேற்கொள்ள, தொழில்நுட்பம்; தொழில் திறன்; விற்பனை உதவி ஆகியவைகளை மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக, இந்த 5 மகளிர் தொழிற் பூங்காக்களில் உலகத் தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நேர்த்திமிகு மையத்தில் பொது காட்சியகம்; மற்றும் விற்பனை மையம்; பொது வியாபார மையம்; பொது கூட்ட அரங்கம்; பொது பயிற்சி கூடம்; நிர்வாக அலுவலகம்; வங்கி; குழந்தைகள் காப்பகம்; மற்றும் மருத்துவ மையம் போன்றவை அமையப் பெறும். ஒவ்வொரு மையமும் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் என மொத்தம் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் இவை அமைக்கப்படும். எனது தலைமையிலான அரசு இத்தொகையை மானியமாக வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. சென்னை கிண்டியிலுள்ள அரசு தொழில்நுட்ப பயிற்சி மையம், தொழிற்சாலைகளுக்கு தொழில் அறிவு மிக்க மனித ஆற்றலை உருவாக்கித் தரும் நோக்கத்துடன் கருவி மற்றும் அச்சு, அதாவது Tool and Die; குளிர்சாதனம் மற்றும் குளிர்பதனியல் கலையில் மூன்றாண்டு பட்டயப் படிப்பினை புது தில்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் ஒப்புதலுடன் நடத்தி வருகிறது. தற்போதுள்ள கட்டடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சிலின் ஒப்புதல் விதிகளுக்கு உரியதாக இல்லை. எனவே, 30,000 சதுர அடி பரப்பளவில் கூடுதல் கட்டடம் ஒன்று 9 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. டான்சி நிறுவனத்தின் கீழ், மர அறைகலன் உற்பத்திக்கென மட்டும் 9 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் பாரம்பரிய மர அறைகலன்களை மட்டும் தயாரிக்க முடிகிறது. தனியார் நிறுவனங்களுடன் போட்டி போடும் நோக்கத்துடனும்; தரமான பொருட்களை தயார் செய்து உரிய நேரத்தில் வழங்குவதற்காகவும்; ஒரு புதிய மர அறைகலன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை டான்சி நிறுவனத்தின் கீழ் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புதிய மர அறைகலன் உற்பத்தித் தொழிற்சாலை நவீன உபகரணங்களுடன் 3 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் சென்னை அம்பத்தூரில் உள்ள தொழிற்பேட்டையில் அமைக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், தொழில் வளம் மேலும் பெருகி; வேலைவாய்ப்புகள் அதிகரித்து; தமிழ்நாட்டின் பொருளாதாரம் உயர வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 10. தொழில் வளர்ச்சியை அதிகரித்து வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்கள் – 24.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்ப தகுதியுடன் கூடிய மனித வளம், தடையில்லா மின்சாரம், அமைதியான சட்டம்–ஒழுங்கு, வெளிப்படையான முறையில் எளிமையான அணுகுமுறை போன்ற தொழில் தொடங்கத் தேவையான, சாதகமான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், இலக்குகளுடன் கூடிய தொலை நோக்குத் திட்டம் 2023, தமிழ்நாடு தொழில் கொள்கை 2014, மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள் கொள்கை 2014, உயிரி தொழில்நுட்பக் கொள்கை 2014 ஆகியவைகளை எனது தலைமையிலான அரசு வகுத்துள்ளதன் காரணமாக, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் அதிகரித்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், கீழ்க்காணும் தொழில் வளர்ச்சித் திட்டங்களை அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கோயம்புத்தூர் பகுதியின் இட அமைப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளங்கள், சந்தை வாய்ப்புக்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, கோயம்புத்தூரில் அண்ணா பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான 10 ஏக்கர் நிலப்பரப்பில் 55 கோடி ரூபாய் செலவில் டைசல் பயோ பார்க்-III–ஐ டிட்கோ நிறுவனம் டைடல் பார்க் நிறுவனத்துடன் இணைந்து துவக்கும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டம் 500 அறிவியல் அறிஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினையும், 500 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளிக்கும்.

2. மருத்துவ உபகரணங்கள் தயாரிப்புத் துறையில் இந்தியாவின் மையமாக தமிழ்நாட்டினை உருவாக்கும் பொருட்டும், மருத்துவ தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டும், மருத்துவ தொழில்நுட்பத் தயாரிப்புகளின் இறக்குமதியை குறைத்து அதன் மூலம் மருத்துவச் செலவைக் குறைக்கும் நோக்கிலும், எச்.எல்.எல். லைப்கேர் லிமிடெட் என்கிற ஓர் இந்திய அரசு நிறுவனத்துடன் இணைந்து காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகில் 330 ஏக்கர் நிலபரப்பில் 130 கோடி ரூபாய் திட்ட செலவில் ஒரு மருத்துவப் பூங்கா டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மருத்துவப் பூங்கா இந்திய நாட்டில் முதன்மையான மருத்துவப் பூங்காவாக அமைவதோடு, மருத்துவ கருவிகள் மற்றும் உபகரணங்கள் மண்டலம், உயிரி தொழில்நுட்பம், உயிரி தகவல் மண்டலம், அடைகாப்பு வசதி மற்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மண்டலம் போன்ற உட்கட்டமைப்பு

வசதிகள் கொண்டதாகவும் அமையும். இப்பூங்காவில் அமைக்கப்படவுள்ள 100 தொழில் பிரிவுகளில், 30 தொழில் பிரிவுகள் பெரிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்காக அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 3000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் 5000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான ராமநாதபுரம் மாவட்டம், ராமநாதபுரம் மற்றும் திருவாடானை வட்டங்களில் தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம், அதாவது National Investment and Manufacturing Zone சுமார் 6,525 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மண்டலத்திற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், பணிகளை விரைவில் மேற்கொள்ள எனது தலைமையிலான அரசு முழு முயற்சிகளை மேற்கொள்ளும்.

4. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம் உப்பள வளாகத்தில் 500 ஏக்கர் அரசு நிலத்தில் 50 மெகாவாட் மின் திறன் கொண்ட சூரிய வெப்ப சலன மின் உற்பத்தியுடன் கூடிய 15 mld கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம் ஒன்று 1500 கோடி ரூபாய் செலவில் டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் ஏறத்தாழ ஆண்டிற்கு 190 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்திலிருந்து வெளியாகும் உப்பு நீரிலிருந்து உப்பை உற்பத்தி செய்ய தமிழ்நாடு உப்பு நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

5. மின்னணுவியல் துறையின் உட்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி ஆகியவைகளை தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்யும் நோக்கத்தோடு, மின்னணுவியல் உற்பத்தி வளாகம் ஒன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 527 ஏக்கர் பரப்பளவில் 920 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய அரசின் தேசிய மின்னணுவியல் கொள்கையின் அடிப்படையில், டிட்கோ மற்றும் G.M.R. Infrastructure நிறுவனம் ஆகியவை இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும். 527 ஏக்கர் நிலப்பரப்பில் 65 சதவிகித இடம் மின்னணுவியல் நிறுவனங்கள் நிறுவுவதற்கான உற்பத்தி சார்ந்த பகுதியாகவும், மீதமுள்ள இடம் உற்பத்தி சாரா பகுதியாகவும் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை மைய அரசு வழங்கியுள்ளது.

இத்திட்டம் சுமார் 7,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்ப்பதோடு, சுமார் 40,000 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை வழங்கும்.

6. பெரும் முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும், மாநிலத்தின் வேலைவாய்ப்பைப் பெருக்கும் வகையிலும், 2014–2015–ஆம் ஆண்டில் 190 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தின் வெவ்வேறு தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் சாலைகள், தண்ணீர் வசதி, தெரு விளக்குகள், கழிவு நீர் அகற்று வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும், அழிந்து வரும் வனங்களை உயிர்ப்பிப்பதும் அத்தியாவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் உள்ள 20 சிப்காட் தொழில் பூங்காக்களில் உள்ள சாலையோரங்களில் இரு புறமும் 10 மீட்டர் இடைவெளியில் 5 கோடி ரூபாய் செலவில் மரங்களை நட்டு அவற்றை சிறப்பாக பேணி வளர்க்க சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மரங்களை நடுவதற்கும், இவற்றை ஐந்து ஆண்டுகள் பராமரிக்கவும் வனத் துறையுடன் சிப்காட் நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும்.

8. சிப்காட் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று தொழில் வளாகங்கள் மற்றும் தொழில் பூங்காக்களில் உள்ள நீர் நிலைகளில் நிலத்தடி நீரை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் 6 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதையும், சிப்காட் தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் / வளர்ச்சி மையங்களில் உள்ள 42 கழிவு நீர் தொட்டிகள் ஒவ்வொன்றும் சுமார் 40 லட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் என்பதையும், நடப்பாண்டில் 10 கழிவு நீர் தொட்டிகள் 4 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. பெருகி வரும் கட்டுமானத் தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும், கட்டுமானத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையிலும், கட்டுமானத் தொழிலுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களுள் ஒன்றான சிமெண்ட் உற்பத்தியை பெருக்கும் வகையிலும், தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் காகித ஆலையிலிருந்து உருவாகும் சுண்ணாம்புக் கழிவு மற்றும் மின் உற்பத்தி நிலையத்தின் உலர் சாம்பல் ஆகியவற்றை பயன்படுத்தி நாளொன்றுக்கு 600 டன் சிமெண்ட் தயாரிக்கும் ஆலை ஒன்று 30.1.2013 அன்று என்னால் ஏற்கெனவே துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆலை 30 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கப்படும். இதன் மூலம் இந்த சிமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 600 மெட்ரிக் டன்னிலிருந்து 900 மெட்ரிக் டன்னாக உயரும்.

**10.** தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், இரு புறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் புதிய ஆலை ஒன்று 1,200 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 2,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் நிறுவப்படும் என இந்த மாமன்றத்தில் 7.5.2013 அன்று நான் அறிவித்தேன். அந்த ஆலையை நிறுவிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் உற்பத்தி செய்யும் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையிலிருந்து, விலை மதிப்பு கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் மையம் ஒன்று கரூர் மாவட்டம், மாயனூரில் 38.40 ஏக்கர் பரப்பளவில் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மையத்தில், நோட்டுப் புத்தகம், பாடப் புத்தகம், சிறிய அட்டை பெட்டி தயார் செய்தல் போன்ற காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டை சார்ந்த சுமார் 15 தொழிற்கூடங்கள் அமையப் பெற்று, சுமார் 500 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**11.** தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் மென்பொருள் தொழில்நுட்பப் பிரிவின் சேவை மையம், அந்நிறுவனத்தின் தற்போதைய தேவைக்கு ஏற்ப 12 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**12.** சர்க்கரை ஆலைகளை ஊக்குவிக்கும் விதமாக, கள்ளக்குறிச்சி–II மற்றும் தர்மபுரி, சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், தலா 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 45 கிலோ லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் ஆலைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் அந்த பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கரும்புப் பயிர் முழுமையாக பயன்படுத்தப்படும். கரும்பு கசண்டு மதிப்பு கூட்டப்பட்டு, எத்தனால் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிசாராயம் தயாரிக்கப்பட்டு ஆலைக்கு அதிக வருவாயும், லாபம் ஈட்டும் வாய்ப்பும் அதிகரிக்கும். இத்திட்டத்திற்குத் தேவைப்படும் 180 கோடி ரூபாயில், 50 சதவீதம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலமும், 40 சதவீதம் சர்க்கரை வளர்ச்சி நிதியிலிருந்தும், 10 சதவீதம் பங்கு மூலதனத்தின் மூலமும் ஈடு செய்யப்படும்.

**13.** அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் ஆலைகள் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு 90 லட்சம் லிட்டர் எத்தனாலையும், 1.65 கோடி லிட்டர் எரிசாராயத்தையும் உற்பத்தி செய்யும் திறனை இவ்வாலைகள் பெற்றுள்ளன. இவ்வாலைகளில் தண்ணீரை சேமிக்கும் நோக்கத்துடனும், மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை முழுமையாக பின்பற்றும்

நோக்கத்துடனும் நவீன சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சுத்திகரிக்கும் நிலையமானது, ஈரடுக்கு எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் அமைக்கப்படும். சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர், மறு சுழற்சி முறையில் மீண்டும் ஆலையில் பயன்படுத்தப்படுவதால் தண்ணீர் தேவை குறையும். ஆலை கழிவு நீர் வெளியேற்றம் முழுமையாக கட்டுப்படுத்தப்படும். இந்த நவீன சுத்திகரிப்பு நிலையம் ஒவ்வொன்றும் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 17 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

**14.** தண்ணீர் மற்றும் காற்றின் தரத்தினை மேம்படுத்தவும், மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை கடைபிடிக்கும் நோக்கத்துடனும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய காற்று கவனிப்பு அலகுடன், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பகம் மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பகம் ஆகியவை இணைக்கப்படும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துடன் ஏற்படுத்தப்படும் நேரடி தொடர்பு அமைப்பு, மின்னணு காட்சி முறையில் கண்காணிக்கும் வண்ணம் அமைக்கப்படும். இதன் மூலம் காற்று மற்றும் நீரிலுள்ள மாசு விவரங்கள் துல்லியமாக அறியப்படும். மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை முழுமையாக பின்பற்றவும், ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் நீர் மற்றும் காற்று மாசு விவரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும் இத்திட்டம் உதவும். இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு 5 கோடியே 51 லட்சம் ரூபாய் ஆகும்.

**15.** தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் குவாரிகள் மற்றும் சுரங்கங்களில் விரிவாக்கம் மற்றும் உற்பத்தி பணிகளுக்காக பளு தூக்கி இயந்திரங்கள், சுரங்க லாரிகள், அதாவது டிப்பர்கள், துளையிடும் இயந்திரங்கள், மண் வாரி இயந்திரங்கள் மற்றும் காற்றழுத்தி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்கள் நவீன முறையில் பெரிய பாறைகளிலிருந்து கற் துண்டங்களை வெட்டி எடுப்பதற்கும், அவற்றை கையாளுவதற்கும், கிரானைட் கழிவுகளை கையாளுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது, வாடகை இயந்திரங்களுக்கு செலவிடப்படும் தொகையினை குறைக்கும் வகையிலும், பழுது நீக்கும் நேரத்தை குறைக்கும் வகையிலும், புதிய இயந்திரங்களை வாங்கி, சுரங்கம் மற்றும் குவாரிகளில் பயன்படுத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வண்ணமும், விஞ்ஞான முறையில் மிகச் சிறப்பாக சுரங்கப் பணிகளை மேற்கொள்ளும் வகையிலும், 16 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவில் சொந்தமாக நவீன இயந்திரங்களான 11 மண் வாரி இயந்திரங்கள், 10 சுரங்க

லாரிகள், அதாவது டிப்பர்கள், மற்றும் 6 காற்றழுத்தி இயந்திரங்கள் ஆகியவை தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கென வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், முதலீடுகளை ஈர்த்து தொழில் வளர்ச்சியினை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மாசினை கட்டுப்படுத்தவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 11. கர்ப்பிணிப் பெண்கள், தாய்மார்கள், வளரிளம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நிறைவான ஊட்டச்சத்து வழங்கும் வகையில் அங்கன்வாடிகளை மேம்படுத்துதல்– 24.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கர்ப்பிணித் தாய்மார்கள், வளரிளம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நிறைவான ஊட்டச் சத்து, மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலை, சிசு இறப்பு விகிதம் குறைப்பு போன்ற குறிக்கோள்களை அடையும் வண்ணம், தமிழ்நாட்டில் உள்ள அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்கள் மூலம் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோர் என மொத்தம் 35 லட்சத்து 36 ஆயிரத்து 705 பேர் பயன் அடைந்து வருகின்றனர். இந்த அங்கன்வாடி மையங்கள் மூலம் மேலும் பல சலுகைகளையும், வசதிகளையும் தாய்மார்களும், குழந்தைகளும், ஏழை, எளிய குடும்பங்களும் பெறும் வண்ணம் கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. இந்த அங்கன்வாடி மையங்கள் மூலம் பயனடைந்து வரும் 6 மாதம் முதல் 60 மாதம் வரையிலான குழந்தைகள் குதூகலமான சூழலில் வளர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, அங்கன்வாடி மையங்களை ‘‘எழுச்சிமிகு முன் பருவ குழந்தை வளர்ச்சி மற்றும் கற்றல் மையங்களாக’’, அதாவது Vibrant Early Childhood Development and Learning Centre ஆக தரம் உயர்த்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதற்கட்டமாக, மொத்தமுள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில், 5,565 அங்கன்வாடி மையங்கள் 55 கோடியே 65 லட்சம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும். இதன் மூலம், 4 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பயனடைவார்கள். இவ்வாறு தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டு உள்ள அங்கன்வாடி மையங்களில் 100 சதுர அடி அளவில் கூடுதலாக ஓர் அறை கட்டுதல், குழந்தை நேய கழிப்பறைகளைக் கட்டுதல் மற்றும் சீரமைத்தல், தண்ணீர்த் தொட்டி அமைத்தல், கை கழுவும் தொட்டி, சமையலறைத் தொட்டி, காலணி அலமாரி, தண்ணீர் வடிகட்டி ஆகியவற்றை அமைத்தல், குழந்தைகளுக்கான வெளி விளையாட்டு சாதனங்கள், நாற்காலி மற்றும் மேசை, வாத்து மற்றும் குதிரை வடிவிலான ஆடும் நாற்காலி, புத்தகப் பை மற்றும் தண்ணீர் பாட்டில், புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை ஆகியவற்றை வழங்குதல், அங்கன்வாடி மையங்களில் வெள்ளை அடித்து சுவர் ஓவியம் வரைதல் மற்றும் சிறிய பழுதுகளை நீக்குதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. அங்கன்வாடி மையங்களில், அங்கன்வாடிப் பயனாளிகளுக்குத் தேவையான ஊட்டச் சத்து, சுகாதார சேவைகள், தடுப்பூசி உள்ளிட்ட மருத்துவ வசதிகள் ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன. காய்ச்சல் அறிகுறி உள்ள குழந்தைகளுக்கு காய்ச்சலின் அளவினை மின்னணு வெப்பமானி, அதாவது Thermometer மூலம் அறிந்து, பதிவு செய்து, அதற்கேற்றாற் போல் மருந்துகளை வழங்கினால் நலம் பயக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, மின்னணு வெப்பமானி, காயத்திற்கு கட்டும் துணியை வெட்டும் கத்திரிக்கோல், சுத்தப்படுத்தப்பட்ட காயத்திற்கு கட்டும் துணி, நுண் துளையிடப்பட்ட ஒட்டும் துணி, அதாவது Micropore, காயங்களுக்கான ஒட்டுப்பசைத் துணி, அதாவது Handyplast மற்றும் முதலுதவி கையேடு ஆகியன அடங்கிய முதலுதவிப் பெட்டிகள் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 54,439 அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

3. பணிக்குச் செல்லும் தாய்மார்கள், 5 வயது வரையுள்ள தங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதில் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்வதால், அக்குழந்தைகளுக்கு பராமரிப்பகங்களை அமைப்பது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள அங்கன்வாடி மையங்களை “மழலையர் பராமரிப்பகங்களாக” தரம் உயர்த்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதற்கட்டமாக பெரம்பலூர், கன்னியாகுமரி, சென்னை, புதுக்கோட்டை, திண்டுக்கல், காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி, சேலம், வேலூர், விழுப்புரம் ஆகிய 13 மாவட்டங்களில் மொத்தம் 211 அங்கன்வாடி மையங்கள் 2 கோடியே 31 லட்சம் ரூபாய் செலவில் மழலையர் பராமரிப்பகங்களாக தரம் உயர்த்தப்படும். இந்த “மழலையர் பராமரிப்பகங்கள்” முதற்கட்டமாக தேவைப்படும் இடங்களில் வாடகைக் கட்டடங்களில் முதன்மை அங்கன்வாடி மையங்களுடன் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இதன் மூலம், 211 அங்கன்வாடி மையங்களில் ஒரு மையத்திற்கு குறைந்த பட்சமாக 15 குழந்தைகள் என்ற எண்ணிக்கையில் மொத்தம் 3,165 குழந்தைகள் பயனடைவர். மேலும், இக்குழந்தைகளைக் கவனிக்கத் தேவைப்படும் விளையாட்டு பொருட்கள், பொம்மைகள், தொட்டில்கள், சுத்தம் செய்யத் தேவையான பொருட்கள், கூடுதலான படுக்கைகள், போர்வைகள், குழந்தைகளுக்கான அடையாள அட்டைகள் ஆகியன வழங்கப்படும். இது தவிர, மழலையர் பராமரிப்பகங்களுக்கு வரும் குழந்தைகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் இணை உணவு மற்றும் சத்துணவுடன், ஒரு நாளைக்கு, ஒரு குழந்தைக்கு 6 ரூபாய் செலவில் வருடத்தில் 300 நாட்களுக்கு, காலை உணவு, சிறு உணவு மற்றும் மாலை சிற்றுண்டி ஆகியவை வழங்கப்படும்.

4. நான் முதன் முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்ற 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், பெண் கல்வியை மேம்படுத்தவும், பெண் சிசுக் கொலையை ஒழிக்கவும், சிறு குடும்ப முறையை ஊக்கப்படுத்தவும் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தை 1992 ஆம் ஆண்டு தொடங்கினேன். 1.8.2011–க்குப் பிறகு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்து, ஆண் குழந்தை இல்லாதிருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் ஆரம்ப வைப்பீடாக 50,000/–ரூபாயும், குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்து, ஆண் குழந்தை ஏதும் இல்லாதிருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா 25,000/– ரூபாயும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு, பெண் குழந்தைக்கு 18 வயது நிறைவடைந்ததும் திரளான வட்டி விகிதத்துடன் கூடிய, நிலை வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை இரு திட்டங்களின் கீழ் முறையே 3 லட்சத்து 232 ரூபாய் மற்றும் 1 லட்சத்து 50 ஆயிரத்து 117 ரூபாய் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுகிறது. மேலும் இந்த திட்டங்களின் கீழ், தொகை வைப்பீடு செய்யப்பட்ட ஆறாவது ஆண்டிலிருந்து கல்விச் செலவுக்காக ஆண்டுதோறும் ஊக்கத் தொகை 1,800 ரூபாய் வரை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண் கல்வி முன்னேற்றம் அடைந்துள்ளதற்கும், பெண் குழந்தைகளின் இடை நிறுத்தல் குறைந்துள்ளதற்கும், பெண் குழந்தை பாலின விகிதம் அதிகரித்துள்ளதற்கும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் முக்கிய காரணியாக உள்ளது.

கூலித் தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள், தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர், கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், தங்கும் விடுதிகளில் பணிபுரிவோர், உணவகம், பெட்டிக் கடை நடத்துபவர்கள், தெரு வியாபாரிகள், தனியார் மழலையர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் போன்றோர் மாத வருமானம் சுமார் 5000/– ரூபாய் வீதம், ஆண்டு வருமானம் 60,000/– ரூபாய் வரை ஈட்டும் சாதாரண பிரிவைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையில், தற்போது நிர்ணயிக்கப்பட்ட திட்டம்–1–க்கான வருமான உச்ச வரம்பு 50,000/–ரூபாயையும், திட்டம்–2–க்கான வருமான உச்ச வரம்பு 24,000/– ரூபாயையும் அகற்றிவிட்டு, இரு திட்டங்களுக்கும் பொதுவாக 72,000/– ரூபாய் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படும். இதற்காக 31 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், பெண்கள், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்தவும், அவர்கள் அனைத்து வசதிகளையும் பெற்று ஊட்டச் சத்து நிறைந்தவர்களாக திகழவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 12. தமிழ்நாட்டின் சாலைகள் மற்றும் பாலங்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் – 25.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் வளர்ச்சி, வேளாண் வளர்ச்சி, குறைந்த நேரத்தில் விரைவான பயணம், எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பான பயணம் ஆகியவற்றின் அடித்தளங்களாக விளங்குபவை சாலைகள் மற்றும் பாலங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, சாலை உட்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு முழுவதும் மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 2,325 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பிலான சாலைகள், பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைக்கும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புதிதாக விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி எல்லைப் பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத் துறையின் 250 கிலோ மீட்டர் சாலைகளில் விளிம்பு வரை அகலப்படுத்தும் பணிகள், வடிகால் வசதியுடன் கூடிய நடைபாதைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கு மொத்தம் 1,033 கோடி ரூபாய் செலவு ஏற்படும். முதற்கட்டமாக, இந்த ஆண்டு 250 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. சென்னை பெருநகரில் பெருகி வரும் போக்குவரத்தின் தேவைகளை கருத்தில் கொண்டு, 185 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பில் மேடவாக்கம் மற்றும் கீழ்க்கட்டளையில் இரண்டு பல்வழிச்சாலை மேம்பாலங்களும்; 50 கோடி ரூபாய் மதிப்பில் தெற்கு உள் வட்ட சாலையில் வாகன சுரங்கப் பாதையும் ஜப்பான் பன்னாட்டு ஒருங்கிணைப்பு முகமையின் நிதியுதவியுடன் கட்டப்படும்.

3. 58 கோடி ரூபாய் மதிப்பில், பருத்திப்பட்டு, ராமாவரம் மற்றும் நொளம்பூர் அருகே மூன்று உயர்மட்ட பாலங்களும்; 12 கோடி ரூபாய் மதிப்பில் தாம்பரம் ரயில்வே நிலையத்திற்கு அருகில் நகரும் படிகட்டுகளுடன் கூடிய ஒரு நடை மேம்பாலமும் அமைக்கப்படும்.

4. ஒரகடம் தொழிற்பூங்கா பகுதியில் சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சிங்கப்பெருமாள் கோயில் – திருப்பெரும்புதூர் மாநில நெடுஞ்சாலையில், ஒரகடம் முதல் திருப்பெரும்புதூர் வரை ஆறு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, சிங்கபெருமாள் கோயில் முதல் ஒரகடம் வரை ஆறு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகள் 120 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

5. மதுரை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை பெருமளவு குறைக்கும் வகையில், மீனாட்சி மிஷன் மருத்துவமனை முதல் கப்பலூர் வரை 27 கிலோ மீட்டர் நீள மதுரை வட்டச் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி 200 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

6. போக்குவரத்து நெரிசல் மிகுந்த சேலம் மாநகர் ஐந்து சாலைகள் சந்திப்பு அருகே உயர்மட்ட பாலம் கட்டப்படும். இப்பணிக்காக நடப்பாண்டில் 275 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. பின்தங்கிய மாவட்டங்களான ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, ராமநாதபுரம் மாவட்டத்தில் 35 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலையும், விருதுநகர் மாவட்டத்தில் 15.6 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலையும் 100 கோடி ரூபாய் செலவில் மேம்பாடு செய்யப்படும்.

8. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் நகரை சுற்றியுள்ள சாலைகளில் மழைக்காலங்களில், நீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு 33 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பில் சாலைகள் உயர்த்தி அமைக்கப்படும்.

9. நாமக்கல் – திருச்செங்கோடு சாலை 140 கோடி ரூபாய் செலவில் நான்கு வழித் தடமாக மாற்றி அமைக்கப்படும்.

10. பாதசாரிகளின் பாதுகாப்பினை உறுதி செய்ய, அரக்கோணம் சுரங்கப்பாதை அருகே 66 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பில் ரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

11. கடலூர் மாவட்டத்தில் உள்ள புவனகிரி, கொள்ளிடம் ஆற்றின் இடது புற கரை சாலை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்திரம்பூர் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள வாணியாற்றின் குறுக்கே என 4 உயர்மட்ட பாலங்கள் 60 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

12. இதே போல், சேலம் நகரத்தில் திருவாக் கவுண்டனூர் சந்திப்பில் ஒரு பல் வழிச் சாலை மேம்பாலம் 50 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

13. மேலும், கோயம்புத்தூர் நகரத்தில் நஞ்சுண்டாபுரம் சந்திப்பு மற்றும் ரயில் நிலையம் சந்திப்பில் இரண்டு நகரும் படிக்கட்டுடன் கூடிய நடை மேம்பாலங்களும்; கரூர் நகரத்தில் பேருந்து நிலையம் அருகே ஒரு நடை மேம்பாலமும் 24 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

14. நகரங்களில் விபத்தை தடுக்கும் வண்ணம், அனைத்து சாலை பகுதிகளிலும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல், வடிவியல் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல், குறுகிய பாலங்களை அகலப்படுத்துதல், திறந்த

கிணறுகளில் விபத்து தடுப்பான்கள், மைய தடுப்பான்கள் அமைத்தல், சாலை சமிக்ஞைகள் அமைத்தல் போன்றவற்றிற்காக 1,130 கோடி ரூபாய் மதிப்பில் பணிகள் கண்டறியப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 400 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடப்பாண்டு மேற்கொள்ளப்படும்.

**15.** நபார்டு வங்கி கடனுதவியுடன், அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 300 கோடி ரூபாய் மதிப்பில் 100 ஆற்றுப் பாலங்கள் கட்டப்படும்.

**16.** இவை தவிர, சாலைகளின் மேலாண்மை மற்றும் பராமரிப்பு பணிகளை திறன்பட செயல்படுத்தும் வகையில், ராமநாதபுரம் மாவட்டம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை 5 ஆண்டுகளுக்கு மேம்படுத்தி, ஒருங்கிணைத்து பராமரிக்க 1,020 கோடி ரூபாய் மதிப்பில் பராமரிப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், அனைத்துத் தரப்பு மக்களின் போக்குவரத்து வசதியை மேலும் மேம்படுத்துவதுடன், நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றப் பாதையில் செல்லவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 13. மன வளர்ச்சி குன்றியவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் புதிய மறுவாழ்வுத் திட்டங்கள் – 25.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மன வளர்ச்சி குன்றியவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் மறுவாழ்வு அளிக்கும் வகையிலும், மாற்றுத் திறனாளிகளை மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக அனைவரும் அங்கீகரிக்கும் வகையிலும், நாட்டின் வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளின் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையிலும் எண்ணற்ற பல சீரிய திட்டங்களை எனது தலைமையிலான அரசு தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, கீழ்க்காணும் திட்டங்களை அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் தற்போது அரசின் நிதியுதவியுடன், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறைவிடம், உணவு, மருத்துவம் மற்றும் மறுவாழ்வு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் 9 லட்சத்து 14 ஆயிரத்து 800 ரூபாய் வீதம், மொத்தம் 1 கோடியே 62 ஆயிரத்து 800 ரூபாயினை 11 இல்லங்களுக்கும் ஆண்டுதோறும் அரசு மானியமாக வழங்கி வருகிறது. தற்போது மன நல காப்பகம் இல்லாத மாவட்டங்களிலிருந்து மீட்கப்படும், மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், வேறு மாவட்டத்தில் இயங்கும் மன நல காப்பகம் அல்லது மன நல மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார்கள். எனவே, இதனை தவிர்த்து அந்தந்த மாவட்டங்களிலிருந்து மீட்கப்படும் மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், அம்மாவட்டங்களிலேயே பயனடையும் வண்ணம் மீதமுள்ள 21 மாவட்டங்களில் மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 92 லட்சத்து 10 ஆயிரத்து 800 ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.
2. தமிழ்நாட்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோருக்கான தங்கும் வசதி, உணவு மற்றும் தொழிற் பயிற்சியுடன் கூடிய 31 இல்லங்கள் 21 மாவட்டங்களில் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்கள் மூலம் பெறப்படும் பராமரிப்பு மற்றும் பயிற்சிகள் பயனாளிகளின் பெற்றோர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் மிகப் பெரிய பயனாக உள்ளன. எனவே, இந்த இல்லங்களை மேலும் 11 மாவட்டங்களில் அதாவது

தருமபுரி, கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் ஆகிய ஆறு மாவட்டங்களில், ஆண்களுக்கான ஆறு இல்லங்களையும், விருதுநகர், அரியலூர், திருப்பூர், நீலகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் பெண்களுக்கான ஐந்து இல்லங்களையும் திறக்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்து உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், அரசுக்கு ஒரு இல்லத்திற்கு, ஆண்டுக்கு, 9 லட்சத்து 66 ஆயிரத்து 800 ரூபாய் என்ற வீதத்தில் 11 இல்லங்களுக்கு 1 கோடியே 6 லட்சத்து 34 ஆயிரத்து 800 ரூபாய் செலவினம் ஏற்படும்.

3. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ், 23 அரசு சிறப்புப் பள்ளிகளும், 54 அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில், விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஒரு நபருக்கு 650 ரூபாய் வீதம் உணவூட்டுச் செலவினம் வழங்கப்பட்டு வருகிறது. இச்சிறப்புப் பள்ளிகளில், தினசரி காலை வந்து மாலை வீடு திரும்பும் மாணவ, மாணவியருக்கு தற்போது மதிய உணவு வழங்கப்படுவதில்லை. எனவே, சத்துணவு திட்டம் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின், கட்டுப்பாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் விரிவு படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம், உத்தேசமாக 1733 மாணவ, மாணவியர் பயன்பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 38 லட்சத்து 99 ஆயிரத்து 250 ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள், மன நலம் பாதிக்கப்பட்டோர், மன வளர்ச்சி குன்றியோர் தங்கள் மாவட்டங்களில் உள்ள இல்லங்களில் சேரவும், சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர் சத்துணவுத் திட்டத்தின் பயனைப் பெறவும் வழிவகை செய்திடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 14. இளங்கோவடிகள் பெயரில் விருது, தமிழ்ச் செம்மல் விருது ஏற்படுத்துதல் மற்றும் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் அமைத்தல் – 25.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி’’ என்று தமிழரின் பழம் பெருமையைப் பற்றி புகழ்ந்து பேசுகிறது புறப்பொருள் வெண்பா மாலை. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தமிழ் மொழிக்கு பெருமை சேர்ப்பதிலும், தமிழ் மொழிக்கு பெருமை சேர்த்தவர்களை கௌரவிப்பதிலும் சிறப்பிப்பதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ் வளர்த்த சான்றோர்களான கம்பர், கபிலர், உ.வே. சுவாமிநாத அய்யர், உமறுப் புலவர், ஜி.யு. போப் ஆகியோர் பெயரில் புதிய விருதுகள் ஏற்படுத்தப்பட்டன. இது தவிர, சொல்லின் செல்வர் விருது, கணினித் தமிழ் விருது மற்றும் தமிழ்த் தாய் விருது ஆகிய விருதுகளும் ஏற்படுத்தப்பட்டு, தமிழ் மொழியின் சிறப்புக்கு மேலும் சிறப்பு சேர்த்த அரசு எனது தலைமையிலான அரசு.

‘‘யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை’’ என்று கம்பரையும், வள்ளுவரையும், இளங்கோவடிகளையும் போற்றிப் பாடினார் மகாகவி பாரதியார். இவர்களில், உலகப் பொது மறையாம் திருக்குறளை படைத்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெயரில் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் விருது அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. கம்பர் பெயரில் கடந்த ஆண்டு என்னால் விருது அறிவிக்கப்பட்டது. நடப்பாண்டு முதல், நெஞ்சை அள்ளும் “சிலப்பதிகாரம்’’ என்று போற்றப்படும் காலத்தை வென்ற காப்பியத்தைத் தந்த இளங்கோவடிகள் பெயரில் புதிய விருது வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளங்கோவடிகளின் நடையையொட்டி புதிய காப்பியம் படைப்பவருக்கோ அல்லது சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்புபவருக்கோ ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று இவ்விருது வழங்கப்படும். இளங்கோவடிகள் விருது பெறுபவருக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படும்.

இதே போன்று, தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களைக் கண்டறிந்து, அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் ‘‘தமிழ்ச் செம்மல்’’ என்ற விருது ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விருது பெறுபவருக்கு 25,000 ரூபாய் பரிசுத்

தொகையும், தகுதியுரையும் வழங்கப்படும். இவ்விருது, மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 32 பேருக்கு வழங்கப்படும்.

மேலும், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட உலகத் தமிழறிஞர்களின் கோரிக்கையினை ஏற்று முன்னாள் முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்களால் தஞ்சாவூரில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெருகி வரும் மாணவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டும், கட்டட வசதிகளின் தேவையைக் கருத்திற் கொண்டும், 15 கோடி ரூபாய் செலவில் இரண்டு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக, பழந்தமிழரின் சிறப்புக்களையெல்லாம் நாட்டுக்கு எடுத்துக் காட்டும் வகையில், சுடுமண் சிற்பம், சுதைச் சிற்பம் மற்றும் மரம், கல், உலோகம் ஆகியவற்றைக் கொண்டு படிமங்களாக வடிவமைத்த கலைப் பொருட்களைக் கொண்டு பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் தமிழ் மொழியை மேலும் வளர்க்கவும், தமிழ் ஆர்வலர்களை ஊக்குவிக்கவும், பழந்தமிழரின் வாழ்வியல் நெறிகள் குறித்து இன்றைய தலைமுறையினர் மட்டுமின்றி எதிர்கால தலைமுறையினரும், உலக மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 15. நடப்பு கல்வியாண்டில் 25 மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அதிகமுள்ள 128 குடியிருப்பு பகுதிகளில் 128 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல் மற்றும் பள்ளிகளை தரம் உயர்த்துதல் – 30.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செல்வத்துள் பெரும் செல்வம் ஆகிய கல்வியை அனைவரும் கற்று, கல்லாதவர்களே இல்லாத மாநிலம் தமிழகம் என்ற குறிக்கோளை அடையும் வகையில் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கல்வியின் அடித்தளமாக விளங்குவது தொடக்கக் கல்வி என்பதைக் கருத்தில் கொண்டு, நடப்புக் கல்வியாண்டில், 25 மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அதிகம் உள்ள 128 குடியிருப்புப் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புப் பகுதிகளில், தலா ஒரு தொடக்கப் பள்ளி வீதம் 128 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஓர் இடைநிலை ஆசிரியர் என மொத்தம் 256 ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இவ்வாறாக தொடங்கப்படும் தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவு சமைப்பதற்குத் தேவையான நவீன சமையலறை, குடிநீர் வசதியுடன் கூடிய கட்டடங்கள் மற்றும் கழிப்பிடங்கள் ஆகியவை ஏற்படுத்தித் தரப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு தோராயமாக 19 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. 2009 ஆம் ஆண்டைய குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின்படி, 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு ஒரு நடுநிலைப் பள்ளி அமைக்கப்பட வேண்டும். அதன்படி கடந்த மூன்று ஆண்டுகளில் 65 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 19 மாவட்டங்களில் 42 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக, நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு நிலை உயர்த்தப்படும் ஒவ்வொரு பள்ளிக்கும் 3 பட்டதாரி ஆசிரியர்கள் வீதம் 126 ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுவதோடு, ஒவ்வொரு பள்ளிக்கும் 3 கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு 9 கோடியே 28 லட்சம் ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும்.

3. கடந்த மூன்று ஆண்டுகளில், 760 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன. இதன் காரணமாக, சுமார் 1 லட்சத்து 6 ஆயிரம் மாணவ, மாணவியர் பயன் அடைந்துள்ளனர். நடப்புக் கல்வியாண்டில், 50 அரசு

நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமை ஆசிரியர் பணியிடம் வீதம் 50 தலைமை ஆசிரியர் பணியிடங்களும், 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் என மொத்தம் 300 ஆசிரியர் பணியிடங்கள் பணி நிரவல் மூலம் நிரப்பப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

4. கடந்த மூன்று ஆண்டுகளில் 300 அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. நிலை உயர்த்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையை மாற்றி, கூடுதலாக தமிழ், வரலாறு, பொருளாதாரம் மற்றும் வணிகவியல் ஆகிய பாடங்களுக்கும் சேர்த்து 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்புக் கல்வியாண்டில் 100 அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு நிலை உயர்த்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமை ஆசிரியர் பணியிடம் வீதம் 100 தலைமை ஆசிரியர் பணியிடங்கள், ஒன்பது முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 1000 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டொன்றுக்கு 31 கோடியே 82 லட்சம் ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும்.

5. வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியை தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படும் சமயத்தில், அவர்களது குழந்தைகள் தங்களது கல்வியை தொடர்ந்து கல்வி கற்கும் வகையில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியர், ஒவ்வொருவருக்கும் 50,000 ரூபாய் நிதி வழங்கும் திட்டம் என்னால் 2005 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் தொகை இனி 75,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச்

செலவுக்காகவும் மற்றும் பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தினால் அரசுக்கு 2 கோடியே 70 லட்சம் ரூபாய் கூடுதலாக செலவு ஏற்படும்.

6. அனைத்துப் பள்ளிகளிலும் 100 விழுக்காடு கழிவறை வசதி மற்றும் குடிநீர் வசதி இருக்க வேண்டும் என்பதற்காக கணக்கெடுப்பு பணி எனது தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்டு, கழிவறை வசதிகள் இல்லாத 2,057 பள்ளிகளுக்குக் கழிவறை வசதிகள் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. கழிவறைகளை கட்டிக் கொடுத்தால் மட்டும் போதாது. குழந்தைகளின் சுகாதாரம் கருதி அக்கழிவறைகளை சுத்தமாகப் பராமரிப்பதும் மிகவும் இன்றியமையாத பணி என்பதால், முதன் முறையாக, கழிவறைகளை பராமரிப்பதற்காக 160 கோடியே 77 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், 56 லட்சத்து 55 ஆயிரம் மாணவ, மாணவியர் பயனடைவார்கள்.

7. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தரமான கட்டணமில்லாக் கல்வி வழங்குவதோடு, விலையில்லா பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகம், புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி, வண்ணப் பென்சில்கள், கிரையான்கள், வரைபடப் புத்தகம், மடிக்கணினி, மிதிவண்டி, பேருந்து பயண அட்டை, சீருடை, காலணி, ஆகியவை விலையின்றி வழங்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவ, மாணவியரிடையே அழகாக எழுதும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, 1 ஆம் வகுப்பு முதல் 7-ம் வகுப்பு வரை பயிலும் 45 லட்சத்து 76 ஆயிரம் மாணவர்களுக்கு முதன் முறையாக கையெழுத்து பயிற்சி ஏடுகள் வழங்கவும், 1 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் 63 லட்சத்து 18 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது கலைத் திறன் மற்றும் கற்பனை வளத்தை ஊக்குவிக்கும் வகையில் ஓவியப் பயிற்சி ஏடுகள் வழங்கவும், 9 மற்றும் 10 ஆம் வகுப்பில் பயிலும் 10 லட்சம் மாணவ, மாணவியர்களுக்கு அறிவியல் பாடங்களுக்கான செயல்முறைப் பயிற்சி ஏடுகள் வழங்கவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென அரசுக்கு 5 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

8. தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளில் வாழும் நலிவடைந்த வகுப்பினைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் கல்வி வழங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில், நடப்பாண்டில், 500 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 5 உண்டு உறைவிடப் பள்ளிகள் நீலகிரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பள்ளிகளுக்கு 5 முழு நேர ஆசிரியர்கள் மற்றும் 3 பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்கென ஆண்டொன்றுக்கு 3 கோடியே 74 லட்சம் ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும்.

**9.** சமூக விழிப்புணர்வினை குழந்தைகளிடம் கொண்டு செல்லும் வகையில் பள்ளிக் கல்வித் துறையும், காவல் துறையும் இணைந்து பள்ளிகளில் போட்டிகள், விழிப்புணர்வு பேரணி, கிராம கல்வித் திருவிழா, ஊடகம் மற்றும் தொடர் குழு நடவடிக்கைகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன. நடப்பு கல்வி ஆண்டிலும் இத்திட்டம் **9** கோடியே **99** லட்சம் ரூபாய் செலவில் தொடரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**10.** குழந்தைகளுக்குத் தரமான கல்வி வழங்குவதோடு, கல்வி பயில்வதற்கேற்ற இனிய சூழல் தேவை என்பதை கருத்தில் கொண்டு தொடக்கக் கல்வித் துறையின் கீழ் இயங்கும், அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு **72** கோடியே **90** லட்சம் ரூபாய் செலவில், **1,175** கூடுதல் வகுப்பறைகளும், பெண் குழந்தைகளுக்கென தனியே **270** கழிப்பறைகளும் கட்டித் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**11.** **2013–14** ஆம் ஆண்டு **46,737** பள்ளி செல்லாக் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் **24,638** குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி தேவைப்படுகிறது என்பதை கண்டறிந்து, அதன் அடிப்படையில், **22** கோடியே **75** லட்சம் ரூபாய் செலவில் **9,641** குழந்தைகளுக்கு உறைவிட வசதியுடன் கூடிய சிறப்புப் பயிற்சியும், **14,997** குழந்தைகளுக்கு உறைவிட வசதியின்றி சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**12.** சிறப்புக் கவனம் தேவைப்படும் **1,26,641** குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற உள்ளடக்கிய கல்வியின் தொடர்ச்சியாக, **31** கோடியே **66** லட்சம் ரூபாய் செலவில் சிறப்புப் பயிற்சிகள், உதவும் உபகரணங்கள், அதாவது Assistive Devices ஆகியவை வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**13.** அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் **10, 11** மற்றும் **12** ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு பள்ளி வேலை நாட்கள், தேர்வுகள் போன்றவற்றை மாணவர்களும், பெற்றோர்களும் அறிந்து கொள்ளவும், ஆசிரியர்கள் வழங்கும் முக்கிய குறிப்புகளை குறித்து வைத்துக் கொள்ளவும் முதன் முறையாக பள்ளி நாட்காட்டியுடன் இணைந்த குறிப்பேடு, அதாவது School Diary with Calendar **3** கோடி ரூபாய் செலவில் நடப்புக் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், கல்லாதோர் இல்லாத மாநிலம் தமிழகம் என்ற இலக்கை அடைய வழி வகுக்கும்.

*******

## 16. விளையாட்டு மேம்பாட்டிற்கான சலுகைகள் மற்றும் திட்டங்கள் – 25.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளையாட்டு என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமல்லாமல், உடல் நலம், மன நலம் பேணுவதாகவும், வாழ்க்கைக்கு பயிற்சி அளிக்கும் களமாகவும் விளங்குகிறது. இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த விளையாட்டினை மேம்படுத்தும் வகையில் கடந்த மூன்றாண்டுகளில் எண்ணற்ற திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

மனதிற்கு மகிழ்ச்சி தரும் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

1. வேலூர் மற்றும் திருப்பூர் தவிர ஏனைய மாவட்ட தலைமையிடங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள், அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில், பெரும்பான்மையான விளையாட்டு வளாகங்கள் 15–20 ஆண்டுகள் பழமையானவை. சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்களில் முக்கிய புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு வளாகத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வீதம் 4 கோடி ரூபாய்; மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள விளையாட்டு வளாகங்களில் அவசர பழுதுகள் சரிபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக 1 கோடி ரூபாய் என மொத்தம் 5 கோடி ரூபாய் ஒரு முறை சிறப்பு மானியமாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, தற்போது திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல்லில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்களில் முக்கிய புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள தலா 80 லட்சம் ரூபாய் மற்றும் பிற மாவட்ட வளாகங்களில் அவசர பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள 80 லட்சம் ரூபாய் என மொத்தம் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
2. தற்போது 23 மாவட்டங்களில் 25 நீச்சல் குளங்கள் இயங்கி வருகின்றன. பெரும்பான்மையான நீச்சல் குளங்கள் 15–லிருந்து 20 ஆண்டுகள் வரை பழமையானவை. தண்ணீரை சரி சமமாக பராமரித்தல் மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலை பேணுதல் ஆகியவை நீச்சல் குளங்களை பராமரித்தலின் மிக முக்கிய அம்சங்கள் ஆகும். பெரும்பான்மையான இடங்களில் நீரை சுத்தப்படுத்தும் நீர் வடிப்பான்கள் நிறைவான அளவிற்கு செயல்படுவதில்லை. பயன்பாடு மற்றும் தேய்மானம் காரணமாக குளங்களிலுள்ள தரைத் தளம் மற்றும் சுற்றுச் சுவர்

உடைந்துள்ளன. எனவே இந்த நீச்சல் குளங்கள் 3 கோடி ரூபாய் செலவில் புனரமைப்பு செய்து, புதுப்பித்து பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. நீச்சல் குளத்திலுள்ள நீருக்கு ஓசோன் சுத்திகரிப்பு செய்யப்பட்டால் நீரின் தரம் அதிகமாக உயர்த்தப்படுவதுடன், அதற்காக ஆகும் செலவுகளையும் காலப் போக்கில் மிச்சப்படுத்தலாம் என்பதன் அடிப்படையில், வேளச்சேரி நீச்சல் குள வளாகம், செனாய் நகர், மதுரை, திருச்சி மற்றும் தஞ்சாவூரில் உள்ள நீச்சல் குளங்களில் நிறுவப்பட்டுள்ள வடிகட்டும் நிலையங்களை மாற்றி தலா 15 லட்சம் ரூபாய் வீதம் 75 லட்சம் ரூபாய் செலவில் ஓசோன் சுத்திகரிப்புடன் கூடிய புதிய வடிகட்டும் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, முதலமைச்சர் மாநில இளைஞர் விருது என்ற புதிய விருது உருவாக்கப்படும். 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று இவ்விருது வழங்கப்படும். இந்த முதலமைச்சர் மாநில இளைஞர் விருது, 50,000/– ரூபாய் ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கத்தை உள்ளடக்கியதாக இருக்கும்.

5. 2005 ஆம் ஆண்டு எனது ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட விளையாட்டு மற்றும் உடற் கல்விக்கான தனிப் பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகில் உள்ள மேலக்கோட்டையூரில் 125 ஏக்கர் பரப்பிலான பரந்த வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்தப் பல்கலைக்கழகத்தில், மாணாக்கர் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்களின் பயன்பாட்டிற்காக உலகத் தரம் வாய்ந்த வசதிகளை அளிக்கும் வகையில், 18 கோடியே 3 லட்சம் ரூபாய் செலவில் நூலக அறை, ஆய்வுக் கூடம், கூட்டரங்கம் மற்றும் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் ஆகியவை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமல்லாமல், பரந்து விரிந்த இந்தப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள நிர்வாக கட்டடம், விடுதிகள், பணியாளர் குடியிருப்புகள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய இடங்களுக்கு மாணாக்கரும், பணியாளர்களும் சென்று வர வசதியாக 2 கிலோ மீட்டர் இணைப்புச் சாலை அமைத்துத் தரப்படும்.

6. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சமூக மாற்றத்திற்கான முக்கிய காரணியாகவும், சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் பின்னணியில் இருப்பவர்களாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இளைஞர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஒருமித்த அணுகுமுறையை வழங்கும்

வகையிலும், தேசிய வளர்ச்சியில் அவர்கள் முழுமையாக பங்காற்றும் வகையிலும், மாநிலத்திற்கென ஓர் இளைஞர் கொள்கை வகுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், இளைய சமுதாயத்தினரின் உடல் நலமும், மன நலமும் மேலும் உறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 17. புதிய பேருந்துகள், சிற்றுந்துகள் இயக்குதல், வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் தொடங்குதல் உள்ளிட்ட போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் திட்டங்கள் – 31.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் போக்குவரத்து சேவையினையும், போக்குவரத்து சேவையினை செவ்வனே புரிந்து வரும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் மேம்பாட்டினையும் உயர்த்தும் உன்னதமான திட்டங்களை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்திலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் திறமையான மற்றும் தேவையான போக்குவரத்து வசதியினை பொது மக்களுக்கு வழங்குவதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், செயல் திறன் மற்றும் நிர்வாக மேலாண்மையில் பல்வேறு சாதனைகளை அகில இந்திய அளவில் படைத்துள்ளன. இப்போக்குவரத்துக் கழகங்கள் பொதுமக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சாதாரண வகைப் பேருந்துகளுடன், விரைவுப் பேருந்துகள், தாழ்தள சொகுசுப் பேருந்துகள், சொகுசுப் பேருந்துகள், அதிசொகுசுப் பேருந்துகள், அதிநவீன சொகுசுப் பேருந்துகள் மற்றும் குளிர்சாதனப் பேருந்துகள் போன்ற பல்வேறு வகைப் பேருந்துகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் நாளொன்றுக்கு 91.20 லட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்கு பேருந்துகளை இயக்கி அதன் மூலம் இரண்டு கோடியே பத்து லட்சம் பயணிகள் குறைந்த செலவில் நிறைவான பயணம் செய்திடும் வகையில், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் திறம்பட செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களால் போக்குவரத்துக் கழகங்களின் சேவை மகத்தானதாக போற்றப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டு காலத்தில், 1,476 புதிய வழித் தடங்கள் துவக்கி வைக்கப்பட்டதோடு, 4,649 புதிய பேருந்துகள், 712 புனரமைக்கப்பட்ட பேருந்துகள் மற்றும் 107 சிற்றுந்துகள் வாங்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. தமிழக போக்குவரத்துத் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மாநிலம் முழுவதும் 20,684 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளை நவீனப்படுத்தும் வகையில், பல ஆண்டுகளுக்கு மேல் இயக்கப்படும் பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிய பேருந்துகளை இயக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 2014 – 2015-ஆம் ஆண்டில், 253 கோடியே 80 லட்சம்

ரூபாய் செலவில் 1,200 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின், மோட்டார் வாகன விபத்துகள் இழப்பீடு வழங்காமையால், நீதிமன்றங்களால் ஜப்தி செய்யப்பட்ட பேருந்துகளை மீட்பதற்காக 38 கோடியே 91 லட்சம் ரூபாயினை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு எனது தலைமையிலான அரசு வழங்கியுள்ளது. 23.7.2014 அன்று போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நீதிமன்றங்களால் ஜப்தி செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி பேசினார்கள். இது குறித்து அரசு உயர் அதிகாரிகளிடம் விவாதித்ததில், விபத்துக்கான இழப்பீட்டுத் தொகையான 39 கோடியே 73 லட்சம் ரூபாயினை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் செலுத்தாததால் 544 அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் ஜப்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்த 544 அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளை மீட்கும் வகையில், 39 கோடியே 73 லட்சம் ரூபாயினை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணமாக எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகர மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், போக்குவரத்து இணைப்பில்லா பகுதிகளிலிருந்து அருகிலுள்ள பேருந்து நிலையம், ரயில் நிலையம் மற்றும் விமான நிலையத்தை இணைக்கும் வகையில் 100 சிற்றுந்துகள் வாங்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்காக இயக்கப்பட்டு வருகின்றன. இதற்கு சென்னை மாநகர மக்களிடையே ஏகோபித்த வரவேற்பு இருப்பதை கருத்தில் கொண்டும், பெருகி வரும் மக்கள் தொகையை கணக்கில் கொண்டும், மேலும் 100 புதிய சிற்றுந்துகள் 16 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, சென்னை மாநகரில் உள்ள, பல்வேறு வழித் தடங்களில் இயக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட தலைநகரங்களுக்கு இணையாக சில மாவட்டங்களின் இதர பகுதிகளில் மக்கள் தொகை, தொழில் வளர்ச்சி, வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவை அதிகரித்துள்ளன. இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள், ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம், புதிய வாகனம் பதிவு செய்தல் போன்ற பணிகளுக்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு செல்ல 15 கிலோ மீட்டர் முதல் 40 கிலோ மீட்டர் வரை பயணம் செய்ய வேண்டி உள்ளது. இதனை களையும் வகையில், 2 கோடியே 79 லட்சம் ரூபாய் செலவில், மண்மங்கலம், உசிலம்பட்டி, திருத்தணி மற்றும் செய்யார் ஆகிய பகுதிகளில் புதிய பகுதி அலுவலகங்கள் உருவாக்கப்படும் என்பதையும்,

சிதம்பரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்கள், 1 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், பொதுமக்கள் நெரிசலின்றி, குறித்த நேரத்தில் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு சென்றடையவும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு வெகு விரைவில் சென்று வரவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 18. புனல் மின் நிலையங்களை நவீனமயமாக்குதல், புதிய துணை மின் நிலையங்கள், மின் மாற்றிகள் நிறுவுதல் – 31.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“எங்கும் மின்சாரம், எதிலும் மின்சாரம்” என்ற அளவுக்கு, வேளாண்மை, தொழில்கள், தொழிற்சாலைகள், ரயில் போக்குவரத்து, மருத்துவமனைகள், அலுவலகங்கள், இல்லங்கள் என அனைத்தும் மின்சாரமயமாகி இருக்கின்ற சூழ்நிலையில், தமிழ்நாட்டின் மின் நிறுவு திறனை கணிசமாக அதிகரித்துள்ளதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, மின் திட்டங்களை தீட்டி, அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் பணியில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

2011–ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற போது, தமிழகத்தின் மின் தேவை 12000 மெகாவாட்டாக இருந்தது. ஆனால், மின் உற்பத்தி மற்றும் கொள்முதல் மூலம் 8,000 மெகாவாட் மின்சாரம் மட்டுமே கிடைத்து வந்தது. அதாவது, 4,000 மெகாவாட் மின் பற்றாக்குறை நிலவியது. இந்தப் பற்றாக்குறையினை போக்கும் வகையில், ஆமை வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த அனல் மின் திட்டங்கள் முடுக்கி விடப்பட்டன. இதன் காரணமாக கடந்த மூன்றாண்டுகளில் வல்லூர், மேட்டூர் மற்றும் வட சென்னையில் 5 அனல் மின் உற்பத்தி அலகுகள் கட்டி முடிக்கப்பட்டு 2,500 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தி திறன் நிறுவப்பட்டு, அவை வணிக ரீதியாக மின் உற்பத்தி செய்து வருகின்றன. மேலும், நடுத்தர கால கொள்முதல் அடிப்படையில் 500 மெகாவாட் மின்சாரம் ஜுன் 2013 முதல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இது தவிர, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நீண்ட கால அடிப்படையில், 2014–2015 ஆம் ஆண்டிலிருந்து 15 ஆண்டுகளுக்கு, 3,330 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுடன் கொள்முதல் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த 3,330 மெகாவாட் மின்சாரத்தில், 224 மெகாவாட் மின்சாரம் தற்போது கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. வரும் ஆகஸ்ட் 2014 முதல் 1,000 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். மீதமுள்ள மின்சாரம் வரும் 2015–2016 ஆம் ஆண்டிலிருந்து பெறப்படும்.

நான் எடுத்த பகீரத முயற்சிகளின் விளைவாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 24.6.2014 அன்று 13,775 மெகாவாட் உயர் அளவு தேவையை நிறைவேற்றியுள்ளது. மேலும், 20.6.2014 அன்று 294 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கி சாதனை படைத்துள்ளது.

இது மட்டுமல்லாமல், தமிழகத்தில் மேலும் பல புதிய மின் திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன. தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் தேசிய அனல் மின் கழகத்தின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டத்தின் மூன்றாவது அலகு வரும் ஆகஸ்ட் மாதம் வணிக ரீதியாக மின் உற்பத்தியைத் தொடங்கும். 500 மெகாவாட் திறன் கொண்ட தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் கூட்டு முயற்சித் திட்டத்தின் முதல் அலகு வரும் அக்டோபர் மாதத்திலும், 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டாம் அலகு 2015 மார்ச் மாதத்திலும் வணிக ரீதியாக மின் உற்பத்தியை துவங்க இருக்கின்றன. இத்திட்டத்திலிருந்து தமிழகத்திற்கு கிடைக்கும் பங்கு 387 மெகாவாட் ஆகும்.

கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முதல் அலகு 1,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறனை 7.6.2014 அன்று எட்டியுள்ளது. இந்த அலகிலிருந்து தமிழகத்திற்கு கிடைக்கும் பங்கு 462 மெகாவாட் ஆகும். கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து தமிழகத்திற்கு கூடுதல் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் பாரதப் பிரதமரைக் கேட்டுக் கொண்டதன் பலனாக, மத்திய அரசின் ஒதுக்கப்படாத அளவிலிருந்து தமிழகத்திற்கு 100 மெகாவாட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக, இந்த திட்டத்தில் தமிழகத்திற்கு 562 மெகாவாட் மின்சாரம் கிடைத்து வருகிறது. 1,000 மெகாவாட் திறன் கொண்ட கூடங்குளம் அணு மின் நிலையத்தின் இரண்டாம் அலகு இந்த ஆண்டு இறுதியில் மின் உற்பத்தியைத் தொடங்கும். இதில், தமிழகத்தின் பங்கு 463 மெகாவாட் ஆகும்.

மேலும், 2014–2015 ஆம் ஆண்டில் தலா 250 மெகாவாட் திறன் கொண்ட நெய்வேலி பழுப்பு நிலக்கரி விரிவாக்கத் திட்டம் நிலை–2ன் இரண்டு அலகுகள் மின் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்திற்கு கிடைக்கும் பங்கு 230 மெகாவாட் ஆகும்.

நடப்பு நிதியாண்டில் உற்பத்தித் தொடங்கவிருக்கின்ற புதிய மின் திட்டங்கள் மற்றும் நீண்ட கால அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும் மின்சாரம் மற்றும் ஜுன் முதல் செப்டம்பர் வரை அதிக அளவில் கிடைக்கும் காற்றாலை மின்சாரம் ஆகியவற்றை கணக்கில் கொண்டு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் உயர் மின் அழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் 1.6.2014 முதல் எனது தலைமையிலான அரசு நீக்கியுள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் அனைத்து நுகர்வோருக்கும் தடையற்ற மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இவற்றின் தொடர்ச்சியாக, கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழகத்தின் புனல் மின் நிலையங்கள் காலை மற்றும் மாலை நேரத்தில் உள்ள உச்ச மின் தேவையை நிறைவேற்ற துணை புரிகின்றன. இப்புனல் மின் நிலையங்கள் பல்லாண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவை என்பதால், அவற்றை புனரமைத்து நவீனப்படுத்துவது மிகவும் அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, புனல் மின் நிலையங்கள் படிப்படியாக புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, மேட்டூர் மற்றும் பாபநாசம் புனல் மின் நிலையங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. பெரியார் புனல் மின் நிலையம் புனரமைக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 43 ஆண்டுகளாக இயங்கி வருகின்ற கோவை மாவட்டத்திலுள்ள சோலையார் புனல் மின் நிலையம்–1–ன் இரு அலகுகளையும் புதுமைப்படுத்தி நவீனமயமாக்கும் பணி மற்றும் இவ்வலகுகளின் நிறுவுத் திறனை தலா 35 மெகாவாட்டிலிருந்து 42 மெகாவாட்டாக அதிகரிக்கும் பணி ஆகியவை 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. நுகர்வோருக்கு தடையற்ற தரமான மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்றால், கூடுதல் மின் உற்பத்திக்கு ஏற்ப மின் தொடரமைப்பு மற்றும் பகிர்மானம் ஆகியவற்றின் கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மிகவும் அவசியம். மூன்றாவது முறையாக எனது தலைமையிலான அரசு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, கடந்த மூன்று ஆண்டுகளில் 134 துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, நடப்பு நிதி ஆண்டில் 60 துணை மின் நிலையங்கள் மற்றும் 2,500 சுற்று கிலோ மீட்டர் உயர் அழுத்த மின் வழித்தடப் பாதைகள் 5,284 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 60 துணை மின் நிலையங்களில், மூன்று 400 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள், ஒன்பது 230 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள், முப்பத்தியெட்டு 110 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள், பத்து 33 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள் அடங்கும்.

3. இது தவிர, சென்னை மாநகரின் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மேலும் இரண்டு 230 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள் 338 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இவற்றில், மேற்கு மாம்பலத்தில் 92 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு துணை மின் நிலையமும், போரூரில் 245 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு துணை மின் நிலையமும் அமைக்கப்படும்.

4. தமிழ்நாட்டில் அபரிமிதமாக கிடைக்கும் சூரிய மின் சக்தியை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் சூரிய மின் சக்திக் கொள்கையை நான் 20.10.2012 அன்று வெளியிட்டேன். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கடந்த மூன்று ஆண்டுகளில் 102 மெகாவாட் நிறுவுத் திறன் கொண்ட 49 சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையங்கள் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் தொடங்கப்பட்டு, சூரிய மின் சக்தி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இது தவிர, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 708 மெகாவாட் அளவிற்கு சூரிய மின் சக்தி உற்பத்தி செய்ய தொழில் முனைவோருக்கு இசைவுக் கடிதங்களை வழங்கியுள்ளது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் கட்டப்படும் 60,000 பசுமை வீடுகளுக்கு சூரிய மின் சக்தி வசதி அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 20,000 தெரு விளக்குகள் சூரிய மின் சக்தி வசதியுடன் பொருத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமையகத்தில், மேற்கூரையில் அறுபது கிலோவாட் சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையத்தை 30.12.2013 அன்று நான் தொடங்கி வைத்தேன். வீட்டு மேற்கூரைகளில் சூரிய மின் சக்தி தயாரிக்கும் நிலையங்களை நிறுவுவதற்காக ஒரு கிலோவாட் சூரிய மின் சக்தி நிறுவுத் திறனுக்காக 20,000 ரூபாய் மானியத்தை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இதுவரை 1708 வீடுகளுக்கு மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, மாநிலத்தின் தென் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள சூரிய மின் சக்தி மூலம் கிடைக்கும் மின்சாரத்தை மின் தொடரமைப்பில் சேர்ப்பதற்காக ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் 400 கிலோவோல்ட் துணை மின் நிலையம் 435 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம் முத்துராமலிங்கபுரத்தில் 230 கிலோவோல்ட் துணை மின் நிலையம் 47 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் அமைக்கப்படும்.

5. மின் தொடரமைப்பை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல் மின் பகிர்மானக் கட்டமைப்பை செம்மைப்படுத்தினால் தான் நுகர்வோருக்கு சீரான மின்சாரம் கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, இந்த நிதியாண்டில் 28,000 மின் விநியோக மாற்றிகள் 660 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும்.

6. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த மூன்று ஆண்டுகளில் 30 லட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக நடப்பு நிதியாண்டில் மேலும் 10 லட்சம் மின் இணைப்புகள் வழங்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மக்கள் உயர்வுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 19. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி மற்றும் விடுதி வசதிகளை மேம்படுத்துதல், ஆசிரியர் தேர்வுக்கு பயிற்சி அளித்தல் – 31.7.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக ரீதியாக பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார முன்னேற்றம் பெறுவதற்கு அடிப்படையாக விளங்குவது கல்வி என்பதால், அவர்கள் கல்வியில் வளர்ச்சி பெறுவதற்கு தேவையான அனைத்து சலுகைகளையும், உகந்த சூழலையும் உருவாக்கும் வண்ணம் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**1)** 10 மற்றும் 12–ஆம் வகுப்பு முடித்த மாணவ மாணவியர்கள் தொழில்நுட்பக் கல்வி பயில ஏதுவாக, கடலூர் மாவட்டம், நந்தனார் ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும் இரு தொழில்நுட்பக் கல்லூரிகள் 24 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**2)** 10–ம் வகுப்பு முடித்த மாணவ மாணவியர்கள் தொழிற் பயிற்சி பெற ஏதுவாக, திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் 10 கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**3)** ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு, சரி விகித உணவுப் பட்டியலில் உள்ளபடி உணவு வழங்கப்பட்டு வருகிறது. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகள் உரிய நேரத்தில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு செல்லும் வகையிலும், ஒரே நேரத்தில் சூடான உணவு தயாரித்து பரிமாற வழிவகை செய்யும் வகையிலும், 150 மாணாக்கர்களுக்கு மேல் தங்கியுள்ள 200 விடுதிகளுக்கு 8 கோடியே 82 லட்சம் ரூபாய் செலவில் நீராவி கொதி கலன்கள் அதாவது Electric Steam Boilers வாங்கி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**4)** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில், தங்கி பயிலும் மாணாக்கர்களுக்கு சூடாகவும், சுவையாகவும்

இட்லி தயாரித்து வழங்கும் வகையில், 1 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவில் 1,577 நீராவி இட்லி குக்கர்கள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**5)** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு பாய் மற்றும் போர்வை வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் 4 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவில் உறையுடன் கூடிய தலையணை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**6)** மலைப் பகுதிகளில் உள்ள பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மழைக் காலங்களில் பள்ளிகளுக்கு நனையாமல் செல்ல ஏதுவாக அனைவருக்கும் 2 கோடி ரூபாய் செலவில் தலா ஒரு ரெயின் கோட்டும், குளிர் காலங்களில் மாணவ, மாணவியரின் உடல் நலத்தை பாதுகாக்கும் வகையில் அனைவருக்கும் 1 கோடியே 8 லட்சம் ரூபாய் செலவில் தலா ஒரு கம்பளிச் சட்டையும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**7)** தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதால் 2014–2015 ஆம் கல்வி ஆண்டில், பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு விடுதிகள், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய எட்டு மாவட்டங்களில் தலா ஒன்று வீதம் 8 விடுதிகள் என மொத்தம் 10 கல்லூரி விடுதிகள் 2 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**8)** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளில், பயன்பாட்டில் உள்ள குழல் விளக்கு, மின் விசிறி மற்றும் தண்ணீர்க் குழாய் ஆகியவற்றினை பராமரிக்க ஒரு விடுதிக்கு ஆண்டொன்றுக்கு 15000/– ரூபாய் வீதம் 1647 விடுதிகளுக்கு 2 கோடியே 47 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**9)** B.Ed., படித்து வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 906 பழங்குடியினப் பட்டதாரிகளுக்கு, அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற ஏதுவாக, 66 லட்சம் ரூபாய் செலவில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் வாயிலாகவும், ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற 500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் B.Ed. பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்ற 500 ஆதி திராவிடர்களுக்கு

ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற வழிவகை செய்யும் வகையில்; 55 லட்சம் ரூபாய் செலவில் தனியார் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்படும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் கல்வியில் தேர்ச்சி பெற்று, அதன் மூலம் சமூக பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 20. புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்குக் கட்டட மற்றும் விடுதி வசதி, உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புதல், மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரகம் அமைத்தல் – 1.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டை வளப்படுத்துவதிலும், மக்களை மேம்படுத்துவதிலும், அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது உயர் கல்வி என்பதைக் கருத்திற் கொண்டு, உயர் கல்வியை அனைத்துத் தரப்பினரும் கற்பதற்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

உயர் கல்வி பயிலுவதை மேலும் ஊக்குவிக்கும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1) 665 கல்வியியல் கல்லூரிகளின் இணைப்புடன், ஆராய்ச்சிப் பட்டப் படிப்பினையும் நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், தற்காலிகமாக காமராஜர் சாலையில் அமைந்துள்ள லேடி விலிங்டன் கல்லூரி வளாகத்தில் மிகுந்த இட நெருக்கடிக்கிடையே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த இட நெருக்கடியை களையும் பொருட்டு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூரில் உள்ள காரப்பாக்கம் கிராமத்தில் 10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்கு பல்கலைக்கழகத்திற்கான கல்வியியல் வளாகமும் நிர்வாக வளாகமும் 95 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) தமிழ்நாட்டிலுள்ள மாணவ, மாணவியர் குறிப்பாக கிராமப்புற பகுதியைச் சார்ந்த, சமூக பொருளாதார நிலைகளில் பின்தங்கிய மாணவ, மாணவியர் உயர் கல்வியை பெறும் வகையில், கடந்த மூன்றாண்டுகளில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்; அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, மயிலாடுதுறை மற்றும் சீர்காழி சட்டமன்ற தொகுதி மக்களின் கோரிக்கைக்கிணங்க, மயிலாடுதுறையில் 'மணல்மேடு' என்னுமிடத்தில் புதியதாக இரு பாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடப்பாண்டு முதல் துவங்கப்படும்.

3) தமிழகத்தை தொழிற் கல்வியில் முதன்மை மாநிலமாக திகழச் செய்ய வேண்டும் என்ற லட்சியத்துடன் செயல்பட்டு வரும் எனது தலைமையிலான அரசு, இந்தியாவில் உள்ள முன்னணி தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழும் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் மண்டல மையங்கள் மற்றும்

உறுப்புப் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்குச் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 150 கோடி ரூபாய் நிதியை அளித்து, அதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு, சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் முதன்மை வளாகத்தில் பயிலும் இளநிலை மாணவ, மாணவியர்களுக்கென புதிய மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள்; குரோம்பேட்டை, Madras Institute of Technology-க்கு என நிருவாகக் கட்டடம் மற்றும் அங்கு பயிலும் இளநிலை மாணவியர்களின் வசதிக்கென புதிய விடுதிக் கட்டடங்கள் ஆகியவை 30 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4) கல்லூரிகளை துவக்குவதோடு மட்டுமல்லாமல், மாணவ, மாணவியருக்கு தரமான கல்வியினை அளிக்க தகுதியான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 1,623 பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்புவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதே போன்று, 2013–14 ஆம் கல்வியாண்டில் பதவி உயர்வு, பணி ஓய்வு ஆகியவற்றால் ஏற்பட்ட காலிப் பணியிடங்கள் மற்றும் புதிய பாடப் பிரிவுகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் சேர்த்து மொத்தமாக, 1,112 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5) திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் 10 மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அதே போல், கோயம்புத்தூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் 8 மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு மண்டல அலுவலகங்களில் அதிக மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளதால், நிர்வாக வசதிக்காக திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தை இரண்டாக பிரித்து தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், நாகப்பட்டினம்; ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கி தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் உருவாக்கப்படும். இவ்வலுவலகம் மன்னர் சரபோஜி அரசு கலை கல்லூரி வளாகத்தில் செயல்படும். மேலும் கோயம்புத்தூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து, சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கி தர்மபுரியில் ஒரு மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் உருவாக்கப்படும்.

இவ்வலுவலகம் அரசுக் கலை கல்லூரி வளாகத்தில் செயல்படும். இதன் தொடர்ச்சியாக, வேலூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினம் 3 கோடியே 22 லட்சம் ரூபாய் ஆகும்.

6) இந்தியாவின் அறிவுத் தலைநகரமாகவும், புதுமைத் தளமாகவும் தமிழகத்தை மாற்றுவது தான் எனது அரசின் குறிக்கோளாகும். தற்போதுள்ள எண்ணியல் தொழில்நுட்ப யுகத்தில், உயர் கல்வித் துறையின் 13 பல்கலைக்கழகங்களில், நூலகம் சார்ந்த தகவல்கள், ஆராய்ச்சி மற்றும் பாடப் பொருள்களை இணைய தளம் மூலம் இணைத்து அண்ணா பல்கலைக்கழகத்திலும், தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்திலும் மின் தொடர்பு நூலக களஞ்சியங்களை இணைய தள வசதியுடன் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மின்–நூல்கள், மின்–இதழ்கள், ஒளிப் படங்கள் மற்றும் அனைத்து பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகியவற்றை, மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து எளிதில் பெற இத்திட்டம் வழிவகை செய்யும். அனைத்து பல்கலைக்கழகங்களும், அவற்றில் இணைவு பெற்ற கல்லூரிகளும், இந்த களஞ்சியத்துடன் இணைக்கப்படும். உலகளாவிய அறிவு வளங்களை எளிதில் பரிமாறிக் கொள்ள வகை செய்யும் இத்திட்டம் 1 கோடியே 86 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

7) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணவ மாணவியருக்கும் தரமான கல்வியை அளிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் சிறப்பான சூழ்நிலையில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில் 93 அரசு / பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு 100 கோடி ரூபாயை அரசு வழங்கியுள்ளது. தற்போது திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் அதிக வாடகை செலுத்தி செயல்பட்டு வருகின்றன. இதனை தவிர்க்கும் பொருட்டும் பணியாளர்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் நல்லதொரு சூழ்நிலையில் பணி புரிவதற்கென இம்மூன்று அலுவலகங்களுக்கும் மொத்தமாக 24,300 சதுர அடி பரப்பளவில் 4 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.

8) தமிழ்நாட்டின் மொத்த சேர்க்கை விகிதத்தினை, அதாவது Gross Enrolment Ratio-வை உயர்த்தும் பொருட்டும், கிராமப்புறம் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவ, மாணவியர் உயர் கல்வி பெறும் பொருட்டும், கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 797 புதிய பாடப் பிரிவுகள்

அறிமுகப்படுத்தப்பட்டன. இப்பாடப் பிரிவுகளில் 10,204 மாணவ மாணவியர்கள் சேர்ந்து பயனடைந்துள்ளனர். இதன் காரணமாகவும், மொத்த சேர்க்கை விகிதம் 38.2 ஆக உயர்ந்துள்ளது. இதே போன்று 2014–15 ஆம் கல்வியாண்டில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 26 இளங்கலை பாடப் பிரிவுகள், 23 முதுகலை பாடப் பிரிவுகள், 62 M.Phil பாடப் பிரிவுகள் மற்றும் 52 Ph.D. பாடப் பிரிவுகள் என மொத்தம் 163 பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், உயர் கல்வி வளம் அடைவதோடு தமிழ்நாடும் வளர்ச்சி அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 21. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கூட்டுறவு வங்கிகளை நவீனப்படுத்தி கிளைகள் துவங்குதல், புதிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் – 1.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தனி மனிதனுக்காகச் சமூகமும், சமூகத்திற்காகத் தனி மனிதனும்'' என்ற கூட்டுறவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கூட்டுறவு இயக்கங்களை வலுப்படுத்துவதிலும், முன்னேற்றம் அடையச் செய்வதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மக்கள் நலத் திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி வரும் கூட்டுறவு இயக்கங்களை மேலும் மேம்படுத்தும் வகையில் கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் நலன்களுக்காக பணியாற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும், கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்கங்கள் ஆகியவை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்களில் பணியாற்றும் சுமார் 60,000 பணியாளர்கள், தங்களுக்கு இது நாள் வரை மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அதாவது Health Insurance Scheme ஏதும் செயல்படுத்தப்படவில்லை எனவும், அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்ற ஒன்றினை தங்களுக்கும் அளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்துள்ளனர். இவர்களின் கோரிக்கையினை ஏற்று, அரசு ஊழியர்களுக்காக தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மருத்துவ காப்பீட்டுத் திட்டம், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 60,000 பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கென ஆண்டுதோறும் செலுத்தப்பட வேண்டிய காப்பீட்டுக் கட்டணமான 12 கோடியே 54 லட்சம் ரூபாயினை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் சரி சமமாக ஏற்றுக் கொள்வார்கள்.

2. தமிழ்நாட்டில் கூட்டுறவு கடன் அமைப்பின் அடித்தளமாக 4530 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பயிர்க் கடன், நகைக் கடன், வைப்பு நிதி திரட்டுதல், பொது விநியோகத் திட்டப் பொருட்களை விநியோகம் செய்திடும் நியாய விலைக் கடைகளை திறம்பட நடத்துதல் உள்பட பல்வேறு இன்றியமையாப் பணிகளை செய்து வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை நவீனப்படுத்திட வேண்டியது அவசியமாகிறது. பிற வங்கிகளில் உள்ளது போல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் முகப்புத் தோற்றத்தை

பொலிவூட்டுதல், நவீன வங்கிக் கூடங்கள் அமைத்தல், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு பெட்டக வசதி ஏற்படுத்துதல், வாடிக்கையாளர்களுக்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் பொது மக்களிடமிருந்து அதிக அளவில் வைப்பு நிதியினை திரட்டும் வகையில் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 2014–15 ஆம் ஆண்டில் 6 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் நவீனமயம் ஆக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தமிழ்நாட்டில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 783 கிளைகளுடன் குறுகிய கால கூட்டுறவு கடன் அமைப்பின் முக்கிய அங்கமாக செயல்பட்டு வருகின்றன. இந்த வங்கிகள் பொது மக்களிடமிருந்து வைப்பு நிதியினை திரட்டி, அதன் மூலமாக இணைப்புச் சங்கங்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. வாடிக்கையாளர்களின் அடித்தளத்தை அதிகரிக்க, இந்த வங்கிகளுக்கு நவீன வசதிகள் கொண்ட சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டியது அவசியமாகும். பாதுகாப்பு பெட்டக வசதி, பாதுகாப்பு கதவுகளுடன் கூடிய பாதுகாப்பு அறை, நவீன வங்கிக் கூடங்கள், சிறந்த உட்கட்டமைப்பு வசதி, பொலிவுடன் கூடிய வெளிப்புறத் தோற்றம், குளிர்சாதன வசதி, இருக்கை வசதி ஆகியவற்றை உள்ளடக்கிய சொந்தக் கட்டடங்கள் ஏற்கெனவே 14 மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 25 கிளைகளுக்கு 6 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, அவற்றிற்கு பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, சொந்த அடிமனைகள் கொண்டுள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளின் 18 கிளைகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் 12 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. தமிழ்நாட்டில் கூட்டுறவு கடன் அமைப்பில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, 46 கிளைகளுடனும், 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 783 கிளைகளுடனும் மற்றும் 120 நகரக் கூட்டுறவு வங்கிகள் 183 கிளைகளுடனும் பொது மக்களுக்கு பல்வேறு வங்கிச் சேவைகளை வழங்கி வருகின்றன. தமிழகத்தில் அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளும், இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்று மைய வங்கியியல் தீர்வு முறையிலான வங்கியியல் சேவையினை, அதாவது, CORE Banking Services-ஐ அளித்து வருகின்றன. 2011–12 ஆம் ஆண்டில் மத்திய கூட்டுறவு வங்கிகளில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 புதிய கிளைகள் துவக்கப்பட்டன. இதற்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதாலும், கூட்டுறவு வங்கிகளில் சேவைக் கட்டணம் மற்ற வங்கிகளை ஒப்பிடும் போது குறைவாக உள்ள காரணத்தினாலும், வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருவதன்

காரணத்தினாலும், புதிய கிளைகளை துவக்கிட வேண்டும் என்ற கோரிக்கை பொது மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, அனைத்து பகுதி மக்களுக்கும் கூட்டுறவு வங்கிகளின் சேவையை விரிவாக்கம் செய்திட ஏதுவாக, 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 19 மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள், 2 நகரக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் என மொத்தம் 21 புதிய கிளைகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தற்போது முழுவதுமாக கணினிமயம் ஆக்கப்பட்டு, பல்வேறு சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, இணைய தள வங்கிச் சேவையை, அதாவது Net Banking Facility-ஐ 2.8.2012 முதல் தனது வாடிக்கையாளர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, இணைய தள வங்கிச் சேவையினை பெற்று வரும் வாடிக்கையாளர்களுக்கு இணைய தளம் மூலம் சென்னை மாநகராட்சி, ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற 300க்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு பணம் செலுத்தும் வசதியினை 23.1.2013 முதல் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் இணைய தள வங்கிச் சேவையினை பயன்படுத்தி, வாடிக்கையாளர்கள், தாங்களாகவே வைப்புக் கணக்கினை துவக்கும் வசதியினையும், அதாவது Online Deposit Opening Facility-ஐயும் அளித்து வருகிறது. வணிக வங்கிகளுக்கு இணையாக, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் அளிக்கப்படும் இவ்வகையான சேவைகளால் வங்கி வாடிக்கையாளர்கள் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர். இதனைத் தொடர்ந்து, வாடிக்கையாளர்கள் தங்கள் கைபேசி மூலமாக வங்கிப் பணிகளை சிரமமின்றி மேற்கொள்ள ஏதுவாக 1 கோடி ரூபாய் செலவில் கைபேசி வங்கியியல் சேவை, அதாவது Mobile Banking Facility தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் அறிமுகப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. மலைவாழ் மக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவதற்காக, 1977 ஆம் ஆண்டு, பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கப்பட்டன. இச்சங்கங்கள் மலைவாழ் மக்களுக்கு கடன் வழங்குதல், இடு பொருட்கள் வழங்குதல், விவசாய விளைப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் பொது விநியோகத் திட்டம் போன்ற பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள 19 பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களில் தற்போது 96,332 பழங்குடியினரும், 17,477 பழங்குடியினர் அல்லாதோரும் உறுப்பினர்களாக உள்ளனர். பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் மலைவாழ் பழங்குடியின மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களான

தேன், சாமை, வரகு, மற்றும் புளி ஆகியவற்றை கொள்முதல் செய்து அவற்றிற்கு பொதுவான வணிக முத்திரையிட்டு, அவர்களின் வருமானத்தை, அதிகரிக்கச் செய்யும் வகையில் விற்பனை செய்யும் திட்டம் 2013–14 ஆம் ஆண்டு முதல் துவக்கப்பட்டு, இத்திட்டத்தில், 30.6.2014 வரை 21 லட்சத்து 70 ஆயிரத்து 169 ரூபாய் மதிப்பிலான தேன், சாமை, புளி மற்றும் வரகு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் உள்ள மசினகுடி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பந்தலூர் வட்டத்தில் இருந்து 70 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதாலும், கோத்தகிரி வட்டம் 100 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதாலும், பந்தலூர் வட்டத்தில் உள்ள எருமாடு மற்றும் நெலாக்கோட்டை ஊராட்சிகளுக்கு உட்பட்ட சுமார் 3,032 தொல் பழங்குடியின குடும்பங்களும், கோத்தகிரி வட்டத்திலுள்ள 65 கிராமங்களுக்கு உட்பட்ட சுமார் 6,272 பழங்குடியின குடும்பங்களும், சங்கத்தின் சேவையை பெற முடியவில்லை. இதே போன்று தருமபுரி மாவட்டத்தில், சித்தேரியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சித்தேரி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயல் எல்லையில், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தைச் சார்ந்த 5 வருவாய் கிராமங்களும், 37 குக்கிராமங்களும், அரூர் வட்டத்தைச் சார்ந்த 15 வருவாய் கிராமங்களும், 19 குக்கிராமங்களும் உள்ளன. இங்குள்ள 2,341 மலைவாழ் குடும்பங்கள் சித்தேரி செல்ல 75 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டி இருக்கிறது.

பழங்குடியின மக்களுக்குத் தேவையான இடுபொருட்கள் மற்றும் இதர சேவைகள் அவர்களின் கிராமங்களுக்கு அருகிலேயே கிடைத்திடும் வகையில், நீலகிரி மாவட்டத்தில் பந்தலூர் வட்ட தொல்பழங்குடியினர் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கோத்தகிரி வட்ட மலைவாழ் பழங்குடியினர் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்; மற்றும் தருமபுரி மாவட்டத்தில், சிட்டிலிங்கி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய புதிய 3 மலைவாழ் பழங்குடியினர் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், கூட்டுறவு அமைப்புகளின் சேவைகள் எளிதில் மக்களுக்கு கிடைக்கவும், கூட்டுறவுப் பணியாளர்களின் வாழ்வு மேம்பாடு அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 22. அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் தொடங்குதல், சேமிப்புக் கிடங்குகள் மற்றும் நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுதல், உணவு தானிய பரிசோதனைக் கூடங்கள் நிறுவுதல், நுகர்வோருக்கான பயிற்சி மற்றும் ஆய்வு மையம் அமைத்தல் – 1.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் தமிழக மக்களுக்கு உணவுப் பாதுகாப்பினை வழங்குவதிலும், நுகர்வோருக்கு தேவையான பொருட்கள் சரியான அளவில், நியாயமான விலையில், தரமானதாக கிடைப்பதை உறுதி செய்வதிலும், நுகர்வோரின் குறைகளை களைவதற்கான அமைப்புகளை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கினை வகிக்கும் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினை எனது தலைமையிலான அரசு செவ்வனே செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, உணவுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதோடு, விலைவாசி உயர்விலிருந்தும் தமிழக மக்கள் ஓரளவு பாதுகாக்கப்படுகின்றனர்.

மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினை மேலும் மேம்படுத்தும் விதமாக, கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கூட்டுறவு நிறுவனங்கள் சார்பில் 114 பல்பொருள் அங்காடிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 23 அமுதம் பல்பொருள் அங்காடிகள் என மொத்தம் 137 அங்காடிகள் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன. பல்பொருள் அங்காடிகள் விரிவுபடுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 37 கோடியே 17 லட்சம் ரூபாய் செலவில் 300 ‘அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்’ தமிழகமெங்கும் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான அரிசி ஆலைகளிலிருந்து தவிடு உப பொருளாக கிடைக்கிறது. தற்போது இந்த தவிடு, ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் தனியாருக்கு விற்கப்படுகிறது. தமிழ்நாட்டில் சமையல் எண்ணெய் தேவை அதிகரித்துள்ளதாலும், தவிட்டிலிருந்து எடுக்கப்படும் சமையல் எண்ணெய் பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதாலும், நவீன அரிசி ஆலையிலிருந்து உப பொருளாகக் கிடைக்கும் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்க திருவாரூர் மாவட்டத்தில் 140 மெட்ரிக் டன் திறன் கொண்ட தவிட்டு எண்ணெய் ஆலை 16 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவிட்டு எண்ணெய் சமையல் பயன்பாட்டிற்கு மட்டுமல்லாமல், சோப்பு

மற்றும் அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்க, உப பொருளாகவும் பயன்படும். எண்ணெய் நீக்கப்பட்ட தவிடு கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படும்.

3. உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை முறையாக சேமித்து வைக்கும் வகையில், கடந்த 3 ஆண்டுகளில் 552 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5,53,950 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 116 சேமிப்பு கிடங்குகள் அமைக்க ஆணையிடப்பட்டு, இதுவரை 81,450 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 4.73 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமாக மேலும் கூடுதல் கிடங்குகள் அமைப்பதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு; 84,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 39 புதிய கிடங்குகள் 112 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளின் கொள்ளளவு 8.36 லட்சம் மெட்ரிக் டன்னாக உயரும்.

4. விவசாயிகளின் நலன் காக்கும் பொருட்டு, காவேரி பாசனப் பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், ஏனைய இடங்களில் கூட்டுறவு நிறுவனங்களும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்கின்றன. 2014–15 ஆம் ஆண்டிற்கு காவேரி பாசனம் அல்லாத பகுதிகளில் நெல் கொள்முதல் செய்ய தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நெல் கொள்முதல் நிலையங்களில் போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததை கருத்தில் கொண்டு; சென்ற ஆண்டு சூரிய ஒளி வாங்கி வசதி, நெல் தூற்றும் இயந்திரம் மற்றும் உலர் கலன் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு, அதற்கான கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. இதே போன்று, நடப்பாண்டிலும், விவசாயிகளின் சிரமத்தை குறைக்கும் வகையில், விளைவிக்கும் இடங்களுக்கு அருகிலேயே 35 கோடி ரூபாய் மதிப்பில் 100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றில் 75 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் காவிரி பாசனப் பகுதிகளிலும், இதர 25 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் திருவண்ணாமலை, காஞ்சிபுரம், ஈரோடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் கட்டப்படும்.

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகம் ஆகியவை கொள்முதல் செய்யும் நெல், கோதுமை ஆகியவற்றை சேமித்து வைக்கும் நிறுவனமாகவும், சிறு, குறு விவசாயிகளிடமிருந்து உணவு தானிய வகைகளான அரிசி, நெல், வேர்க்கடலை, பருத்தி, பருப்பு வகைகள், கம்பு, மக்காச் சோளம், கேழ்வரகு போன்ற விளை பொருட்களை விவசாயிகள் சேமித்து வைக்கும் நிறுவனமாகவும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் விளங்குகிறது. விவசாயிகள் மற்றும் வணிகர்கள், தங்களுடைய விவசாயப் பொருட்களை விஞ்ஞான ரீதியில் சேமித்து வைத்து தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு சரக்குக் கட்டணத்தில் 30 சதவிகிதம் தள்ளுபடி மற்றும் அனைத்து வங்கிகளிடமிருந்து 7 சதவிகித வட்டியில் விவசாயப் பொருட்களின் மதிப்பில் 75 சதவிகிதம் பொருள் இருப்பு மீதான கடனைப் பெறுவதை கிடங்குகள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் அங்கீகரித்துள்ளது. இதற்காக தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 36 கிடங்குகள் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு, தரச் சான்றிதழ் பெறப்பட்டு, மேற்படி கிடங்குகள் மூலம் மாற்றத் தக்க சேமிப்பு கிடங்கு ரசீதுகள், அதாவது Negotiable Warehouse Receipts வழங்குவதை கிடங்குகள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் அங்கீகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மற்றும் வணிகர்கள் இருப்பு வைக்கும் பொருட்களுக்கு அனைத்து வங்கிகளிலும் மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள் மூலம் கடன் வசதி பெற இயலும். மேற்படி மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை பெறுவதற்கு, பொருட்களின் தரம், ஈரத் தன்மை, வகைப்பாடு ஆகியவற்றை விஞ்ஞான ரீதியில் பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. எனவே ஸ்ரீரங்கம், திருச்சி, திருவாரூர், ஈரோடு, ஆரணி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய விஞ்ஞான ரீதியிலான பரிசோதனைக் கூடங்கள் 7 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

6. தமிழக அரசு உணவு பாதுகாப்பை அளிப்பதுடன், உணவுப் பொருள்கள் தரமானதாக, உண்பதற்கு தகுதியானதாக உள்ளதா என்பதை உறுதி செய்யவும், உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கும் கலப்படப் பொருட்கள் ஏதேனும் உள்ளதா என்பதை கண்டறியவும் தேவையான பயிற்சிகளை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அளிக்க ஏதுவாக ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அமைக்க காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டத்தில் உள்ள 3.03 ஏக்கர் நிலம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில், புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிப்படையில், Centre for Consumer Education Research, Teaching, Training and Testing நிறுவனம் ஓர் ஆய்வகத்தை கட்டுவதற்காகவும், பயிற்சி அளிப்பதற்காகவும் 10 கோடியே 31 லட்சம் ரூபாய் செலவில் 14,750 சதுர அடி நிலப்பரப்பில், கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு

மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின், ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு தமிழக அரசின் பங்கீடாக 40 சதவிகிதத் தொகையான 4 கோடியே 12 லட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், குறைந்த விலையில், நிறைவான மற்றும் தரமான சேவையினை பொதுமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் பெற வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 23. புதிய அணைகள் கட்டுதல், புனரமைத்தல் மற்றும் வாய்க்கால்களைத் தூர் வாருதல் உள்ளிட்ட கூடுதல் பாசன வசதித் திட்டங்கள் – 4.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயற்கை ஆதாரங்களுள் முதன்மையானதாக விளங்கும் நீரினை முறையாக பயன்படுத்தும் வகையில், பாசனக் கட்டமைப்புகளை பராமரித்து, புதிய பாசனத் திட்டங்களை உருவாக்கி, அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கியப் பங்கினை வகிக்கும் பொதுப் பணித் துறை வாயிலாக எனது தலைமையிலான அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி உள்ளது.

பொதுப் பணித் துறை மூலம் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் நான் அறிவிப்பதில் பெருமை அடைகிறேன்.

1) மழைக்காலங்களில் காவேரியில் வரப் பெறும் வெள்ள நீரைத் திருப்பி விடுவதற்காக, கொள்ளிடம் ஆறு பிரதானமாக ஒரு வெள்ள நீர்ப் போக்கியாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆற்றில், கீழணை, அதாவது Lower Coleroon Anicut தவிர, எந்த ஒரு பாசன கட்டுமானமும் இல்லாததால், மழைக் காலத்தில் கிடைக்கும் வெள்ள நீர் கீழணைக்கு கீழ் புறம் சென்று கடலில் வீணாக கலக்கிறது. இதனைத் தடுக்கும் வகையில், இந்தப் பகுதியில் ஒரு தடுப்பணை கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பல்வேறு தரப்பினர் வைத்துள்ளனர்.

இந்த கோரிக்கையை ஏற்று, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், ஆதனூர் – குமாரமங்கலம் கிராமங்களுக்கு இடையே கீழணையின் கீழ் புறம், 0.6 TMC அடி கொள்ளளவு கொண்ட தலை மதகுகளுடன் ஒரு கதவணை, அதாவது Barrage 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பெட்டவாய்த்தலை கிராமத்தில் உய்யகொண்டான் வாய்க்காலின், தலை மதகில் உள்ள மண் போக்கி, அதாவது Sand Vent மற்றும் திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட பாலக்கரை பகுதியில் உள்ள உய்யகொண்டான் வாய்க்கால் ஆகியவை 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அரியாற்றின் குறுக்கே உள்ள வடசேரி அணைக்கட்டு, பிராட்டியூர் அணைக்கட்டு, அரியாவூர் அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால், புங்கானூர் அணைக்கட்டு, இனாம்குளத்தூர் அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால், மணப்பாறை வட்டம் அரியாற்றின் குறுக்கே உள்ள 7 அணைக்கட்டுகள் மற்றும் சமுத்திரம் மரவனூர் ஏரிகள் 16 கோடியே 85 லட்சம் ரூபாய்

செலவிலும்; திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கொத்தமங்கலம் ஆற்றின் குறுக்கே உள்ள கொத்தமங்கலம் அணைக்கட்டு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சி மாவட்டம், திருவெறும்பூர், முசிறி மற்றும் துறையூர் வட்டங்களில் உள்ள 3 ஏரிகள் 2 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புனரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தவிர, திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேலணையின் கீழ்புறம் காவேரி ஆற்றின் வலது கரையை பாதுகாக்கும் பணி 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

3) தேனி மாவட்டத்தில் உள்ள 18 ஆம் கால்வாயானது, வைரவனார் அணைக்கட்டின் மேற் புறம் அமைந்துள்ள தலை மதகிலிருந்து துவங்கி சுமார் 14 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு பாசன வசதி அளித்து வருகிறது. இந்தக் கால்வாயை, உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள ரெங்கனாதபுரம் கிராமத்தில் உள்ள சுத்த கங்கை ஓடையிலிருந்து கூவலிங்க ஆறு வரை நீட்டித்து கோட்டக்குடி ஆறுடன் இணைக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரி வருகின்றனர். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, 18 ஆம் கால்வாயினை சுத்த கங்கை ஓடையிலிருந்து கூவலிங்க ஆறு வரையில் நீட்டித்து, கோட்டக்குடி ஆற்றுடன் இணைக்கும் திட்டம் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அளுந்தூர் கிராமம் அருகே கொத்தமங்கலம் வாரியின் குறுக்கே 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; லால்குடி வட்டம், இருதயபுரம் கிராமம் அருகே நந்தியாற்றின் குறுக்கே 4 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; மேலரசூர் கிராமம் அருகே, மானோடையின் குறுக்கே 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் வட்டம், சிறுமருதூர் கிராமம் அருகே, பங்குனி வடிகாலின் குறுக்கே 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; ஸ்ரீதேவி மங்கலம் கிராமம் அருகே, உப்பாற்றின் குறுக்கே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருப்பத்தூர் கிராமம் அருகே, சண்முகாநதி ஓடையின் குறுக்கே 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம், வேம்பனூர் கிராமம் அருகே, வெள்ளாற்றின் குறுக்கே 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், குமாரவாடி கிராமம் அருகே, கண்ணூத்து ஓடையின் குறுக்கே 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; சமுத்திரம் கிராமம் அருகே, மாமுண்டியாறு ஆற்றின் குறுக்கே 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; கருப்பூர் கிராமம் அருகே, கோரையாறு ஆற்றின் குறுக்கே 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; கே. பெரியப்பட்டி கிராமம் அருகே, உப்பாறு வாரியின் குறுக்கே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; பொன்னனியாற்றின் குறுக்கே 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், தண்டலைப் புதூர் கிராமம் அருகே, அய்யாறு ஆற்றின் குறுக்கே

4 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருத்தியமலை கிராமம் அருகே, திருத்தியமலை ஆற்றின் குறுக்கே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திண்ணக்கோணம் கிராமம் அருகே, அய்யாறு ஆற்றின் குறுக்கே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், கொல்லம்பட்டி கிராமம் அருகே, குண்டாறு ஆற்றின் குறுக்கே 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், கும்பக்குடி கிராமம் அருகே, காட்டாற்றின் குறுக்கே 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம், 32 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக 17 தடுப்பணைகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5) தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமத்தில் புது அணை, ஒட்டணை, குடமுருட்டி அணை, பிரம்பு அணை முக்காவூர் பிரிவணை, கெங்குவார்பட்டி கிராமத்தில் உள்ள வைரவன் அணைக்கட்டின் வழங்கு வாய்க்கால் ஆகியவை 7 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், சிலமலை, சில்லமரத்துப்பட்டி, தொம்புச்சேரி, பொட்டிபுரம் கிராமங்களில் உள்ள எரமன்குளம் அணைக்கட்டு, தம்பிரான்குளம் அணைக்கட்டு, அம்மாகுளம் அணைக்கட்டு, எலுப்ப மரத்து அணைக்கட்டு, சென்னைய கௌண்டன்பட்டி மற்றும் போசிகௌண்டன் அணைக்கட்டு, போடி கிராமத்தில் உள்ள சாமி வாய்க்கால் அணைக்கட்டு ஆகியவை 3 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், குன்னூர் கிராமத்தின் அருகே உள்ள குன்னூர் அணைக்கட்டின் வரத்துக் கால்வாய் 8 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புனரமைக்கப்படும். இது தவிர, தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபாளையம் மற்றும் கோகிலாபுரம் கிராமத்தில் உள்ள தாமரைக்குளம் வரத்து கால்வாய் மற்றும் அதன் கண்மாய் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும்.

6) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு கிராமம் அருகே உள்ள பரப்பலாறு அணை 1974 ஆம் ஆண்டு 200 மில்லியன் கனஅடி கொள்ளளவு நீர் தேக்கி வைக்க கட்டப்பட்டது. இந்த நீர்த்தேக்கமானது மலை சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளதால், வண்டல் மண் படிந்து, தற்போது அணையின் கொள்ளளவு 120 மில்லியன் கனஅடியாக குறைந்துள்ளதன் காரணமாக, குடிநீருக்கும், விவசாயத் தேவைக்கும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த அணையின் நீர் பரப்புப் பகுதியில், தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அசல் கொள்ளளவுக்கு மீளக் கொண்டுவரும் திட்டம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்தில் உள்ள நரசிங்கபுரம் ராஜா வாய்க்கால், கொடகனாற்றின் கிளை நதியான பெரியாற்றின் குறுக்கே அமைந்துள்ள அணைக்கட்டின் வலது புறக் கரையில் இருந்து தொடங்கி, 3,950 மீட்டர் தூரம் ஓடி, தாமரைக்குளம், போலசமுத்திரம், வாடிகுளம், செங்கட்டான் குளம், சொட்டான் குளம், பள்ளக் குளம், பெரியகுளம், கொங்கறு குளம், மன்னவராதி கண்மாய் மற்றும் புளியங்குளம், அத்திகுளம் ஏந்தல், ரங்கசமுத்திரம் ஆகிய குளங்களுக்கு, பாசன பயன் அளிக்கிறது. இவ்வாய்க்கால் தூர்ந்துவிட்டதால், நேரடி ஆயக்கட்டுகள் மற்றும் குளங்களுக்குத் தேவையான நீர் வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, இவ்வாய்க்காலில் மேற்பூச்சு மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8) ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், பவானி ஆற்றின் குறுக்கே மிகப் பழமையான கொடிவேரி அணைக்கட்டு உள்ளது. இந்த அணைக்கட்டிலிருந்து பிரியும் தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை கால்வாய்கள் சுமார் 100 வருடத்திற்கு முன்பே அமைக்கப்பட்டுள்ளன. 77 கிலோ மீட்டர் நீளமுள்ள தடப்பள்ளி கால்வாய் 17,654 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளித்து வருகிறது. 32 கிலோ மீட்டர் நீளமுள்ள அரக்கன்கோட்டை கால்வாய் 6,850 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளித்து வருகிறது. இக்கால்வாய்களின் படுகை மட்டம் வண்டல் படிவங்களால் தூர்ந்து போய் இருப்பதாலும், நீர் கசிவு அதிகமாக இருப்பதாலும், பவானிசாகர் அணையிலிருந்து விடுவிக்கப்படும் நீர் கடைமடை பகுதிக்கு முழுமையாக சென்றடைவதில்லை. இந்தக் கால்வாய்களின் செயல்திறனை அதிகப்படுத்தும் வகையில், முதற்கட்டமாக, தலைமதகு பகுதியில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்பூச்சு மற்றும் புனரமைக்கும் பணிகள் நடப்பாண்டில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9) பெரியாறு பிரதான கால்வாய், பெரியாறு வைகை வடிநிலத்தில் அமைந்துள்ளது. இந்த கால்வாய் 58 கிலோ மீட்டர் பயணித்து 12 பிரிவு வாய்க்கால் மற்றும் 64 கிளை வாய்க்கால் மூலம் 68,334 ஹெக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கிறது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு சீரமைப்பு பணிகள் செய்யப்பட்ட இக்கால்வாய்களின் மேற்பூச்சு சிதிலம் அடைந்து, நீர் கடத்தும் திறன் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், கடைமடைப் பகுதிக்கு போதிய நீர் சென்றடைவதில்லை. என்னுடைய அரசின் விவேகத்துடன் கூடிய சீரிய முயற்சியால் முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டம், தற்காலிகமாக குறைக்கப்பட்ட 136 அடியிலிருந்து முதற்கட்டமாக 142 அடி வரை உயர்த்தப்பட்டுள்ளது. இந்தக் கூடுதல் நீரை உரிய வகையில் பயன்படுத்த பெரியாறு பிரதான கால்வாயின் கிளைக் கால்வாய்களை புனரமைப்பு செய்வது மிக

அவசியமாகிறது. முதற்கட்டமாக, மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள 1–வது பிரிவு வாய்க்கால், 2–வது பிரிவு வாய்க்கால், 3–வது பிரிவு வாய்க்கால் 4–வது பிரிவு வாய்க்கால், 12–வது பிரிவு வாய்க்கால் மற்றும் பெரியார் நீட்டிப்பு கால்வாய் ஆகியவற்றில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்பூச்சு மற்றும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10) திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டத்திலுள்ள கண்டலேறு பூண்டி கால்வாய் 177.105 கிலோ மீட்டர் நீளத்தில், கிருஷ்ணா நதி நீரை, சென்னை மாநகர குடிநீர் தேவைக்காக கொண்டு வர அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில், இக்கால்வாயின் நீளம் 25.275 கிலோ மீட்டர் ஆகும். மழையினால், இக்கால்வாயில் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டு, மண் சரிவுகள் ஆங்காங்கே ஏற்பட்டுள்ளன. இதனால் இக்கால்வாயின் நீர் கடத்தும் திறன் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இந்த சரிவுகளை சரி செய்து கரைகளை பலப்படுத்த 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொத்தத்தில் 670 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பில் என்னால் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் மூலம் ஆயக்கட்டு நிலைப்படுத்தப்பட்டு, கூடுதல் பாசன வசதி ஏற்படுத்தப்படுவதால் வேளாண் உற்பத்தி அதிகரித்து, வேளாண் பெருங்குடி மக்கள் வாழ்வு சிறக்க வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 24. பால் பண்ணைகளின் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் தீவன உற்பத்தியைப் பெருக்குதல் – 4.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், சமூக பொருளாதார மாற்றங்களை உருவாக்குவதிலும், வேலைவாய்ப்புகளை தோற்றுவிப்பதிலும் முக்கியப் பங்காற்றி வரும் சத்துள்ள உணவான பாலின் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலை கிடைக்கவும், நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் தங்கு தடையின்றி நியாயமான விலையில் கிடைக்கவும் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

பால் உற்பத்தித் தொழிலை ஊக்கப்படுத்துவதன் மூலம் ஏழை விவசாயிகளின் பொருளாதார நிலை உயர்ந்து, அவர்தம் வாழ்வு வளம் பெறும் என்பதை கருத்தில் கொண்டு எனது தலைமையிலான அரசு இரண்டாம் வெண்மை புரட்சிக்கு வித்திட்டு பால் உற்பத்தியை பெருக்குவதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாக, அதிக பால் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக விளங்குகிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நாளொன்றுக்கு 20 லட்சம் லிட்டர் என்று இருந்த ஆவின் பால் கொள்முதல் தற்போது 2013–2014–ல் நாள் ஒன்றுக்கு 23.22 லட்சம் லிட்டர் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, பால் பண்ணைகளின் கட்டமைப்பை அதிகரித்து பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் நலனுக்காகவும், கால்நடை தீவன பயன்பாட்டை ஊக்கப்படுத்தவும் கீழ்க்காணும் பணிகள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு இணையத்தின் மூலம் 46 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

1) சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களின் இயந்திர தளவாடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த புதிய பால் குளிரூட்டும் இயந்திரங்கள், பால் கொள்கலன்கள், பாட்டில்களில் நெய் நிரப்பும் தானியங்கி இயந்திரம், மின்ஆக்கி, பால் பதப்படுத்தும் இயந்திரங்கள், கொழுப்பு பிரித்தெடுக்கும் இயந்திரங்கள், பால் சமன்படுத்தும் இயந்திரங்கள், பிளாஸ்டிக் டப்புகள் சுத்தம் செய்யும் இயந்திரங்கள், பால் பாக்கெட்டுகள் மீது, உரிய விவரங்களை அச்சிடும் வெப்பமாற்று முறை உபகரணங்கள், அதாவது Thermal transfer for overprinting equipment ஆகியவை 35 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். இதன் மூலம் சுமார் 2 லட்சத்து 26 ஆயிரத்து 432 பால் உற்பத்தியாளர்களும், 5 லட்சத்து 13 ஆயிரத்து 138 பால் நுகர்வோர்களும் பயனடைவார்கள்.

2) தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் இடையே கால்நடை தீவனப் பயன்பாட்டை ஊக்கப்படுத்தும் வகையில், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் தீவன தொழிற்சாலை 10 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் விரிவாக்கப்பட்டு, தீவன உற்பத்தி திறன் நாளொன்றுக்கு 150 டன் என்ற அளவிற்கு உயர்த்தப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 4 லட்சத்து 29 ஆயிரம் உறுப்பினர்கள் பயனடைவார்கள்.

மேற்கூறிய எனது தலைமையிலான அரசின் முனைப்பான திட்டங்கள், தமிழகத்தில் பால் உற்பத்தியை பெருக்கவும், விவசாயிகள் கூடுதலான பயன்களைப் பெற்று நன்மை பெறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 25. மீன்பிடி குறைவுக் காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்துதல், புதிய மீன் இறங்கு தளங்கள், மீன் குஞ்சுப் பண்ணைகள் அமைத்தல், மீன் வளத் துறை அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் – 4.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவை பொதுமக்களுக்கு அளிப்பதிலும், மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதிலும், வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் மீன்பிடித் தொழிலை பெருக்கும் வகையில், புதிய மீன் பிடி துறைமுகங்கள் அமைத்தல், மீன் இறங்கு தளங்கள் அமைத்தல், கடலோர நகரங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைத்தல், உள்நாட்டு மீன் வளத்தை அதிகரித்தல், மீன் விற்பனையை ஊக்குவித்தல் மற்றும் சந்தையை நவீனப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதிலும், மீனவர் நலத் திட்டங்களை, செயல்படுத்துவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், மீன் உற்பத்தியையும் மேலும் மேம்படுத்தும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும், தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும், மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவர்களுக்கு 1,800/–ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையில், மத்திய, மாநில அரசுகள் மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகை தலா 600/– ரூபாய் ஆகும். இத்திட்டத்திற்கான தனது பங்குத் தொகையை 600/– ரூபாயிலிருந்து 900/– ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மாநில அரசின் பங்குத் தொகையும் 600/– ரூபாயிலிருந்து 900/– ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய, மாநில அரசுகளின் பங்குத் தொகையுடன், பயனாளிகளின் பங்குத் தொகையான 900/– ரூபாயையும் சேர்த்து, கடல் மீனவர்களுக்கு மீன்பிடி குறைவு கால நிவாரணமாக 2,700/–ரூபாய் வழங்கப்படும். சுமார் 2 லட்சத்து 10 ஆயிரம் கடல் மீனவர்கள் பயனடையும் இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 6 கோடியே 30 லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2. கடல் மீனவ மகளிருக்கு தமிழக அரசு 1,800/– ரூபாய் நிவாரணமாக வழங்கி வருகிறது. இதில் பயனாளி பங்குத் தொகை 600/– ரூபாய் மற்றும் மாநில அரசு பங்குத் தொகை 1,200/– ரூபாயாகும். கடல் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையை உயர்த்தி

வழங்குவது போல்; கடல் மீனவ மகளிருக்கும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கும் வகையில், மீனவ மகளிருக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகையான 1,800/– ரூபாய் 2,700/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதில் பயனாளியின் பங்குத் தொகை 900/– ரூபாயாகவும், மாநில அரசின் பங்குத் தொகை 1,800/–ரூபாயாகவும் இருக்கும். சுமார் 1 லட்சத்து 90 ஆயிரம் கடல் மீனவ மகளிர் பயனடையும் இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 11 கோடியே 40 லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

3. தமிழ்நாட்டில் தற்போது 7 மீன்பிடி துறைமுகங்களும், 19 மீன் இறங்கு தளங்களும் உள்ளன. மேலும் 4 இடங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்களும், 11 இடங்களில் மீன் இறங்கு தளங்களும் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், கோவளத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம் இரையுமன் துறையில் 7 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் தூத்தூரில் 4 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 17 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும். இந்த மீன் இறங்கு தளங்கள் சுமார் 1,500 மெட்ரிக் டன் மீன்களை சுகாதாரமான முறையில் விரைவாக கையாளப் பயன்படுவதுடன் 625 மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்தவும் வழி வகுக்கும். இதன் மூலம் இப்பகுதிகளைச் சார்ந்த சுமார் 8,300 மீனவர்கள் பயன் பெறுவர்.

4. மீன் குஞ்சு உற்பத்தியை பெருக்கி அதன் மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை பெருக்குவதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடும் வகையில், 2014–2015 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டத்தில், பரங்கிப்பேட்டை, ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணை, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் மற்றும் தேனி மாவட்டத்தில் வைகை அணை ஆகிய 4 இடங்களில் உள்ள அரசு மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் 17 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

5. மீன் வளத் துறை அலுவலகங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் பொருட்டு, 2014–2015 ஆம் ஆண்டில் ராமநாதபுரத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மீன் வளத் துறை துணை இயக்குநர் அலுவலகம், ராமநாதபுரம் மாவட்ட மீன் வளப் பணிகளை செயல்படுத்த வடக்கு மற்றும் தெற்கு என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ள இரண்டு மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் மீன்பிடி உட்கட்டமைப்பு பணிகளை செயல்படுத்தி வரும் மீன்பிடி துறைமுக, உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஆகிய 4 அலுவலகங்களுக்கும் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

இதைப் போலவே, நாகப்பட்டினத்தில் இயங்கி வரும் மீன் வளத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகம், மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகம், மீன் பிடி துறைமுக செயற் பொறியாளர் அலுவலகம் மற்றும் உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஆகிய 4 அலுவலகங்களுக்கும் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். ஆக மொத்தம் 3 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு ஒருங்கிணைந்த மீன் வளத் துறை அலுவலகங்கள் ராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினத்தில் கட்டப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் திட்டங்களின் மூலம் மீன் உற்பத்தி பெருகி, மீனவர்கள் நிறைவான பயன்களைப் பெற்று வாழ்வில் வளம் பெறுவர் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 26. மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பகுதி சாகுபடிக்கு 15–8–2014 முதல் தண்ணீர் திறந்து விடுதல் – 7.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உணவினை அளித்து, நல் வளங்களை வழங்கி, விவசாயிகளின் விடிவெள்ளியாக திகழும் காவேரி நீர் மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்கு, நீர் இருப்பினை பொறுத்து, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்திலோ அல்லது அதற்கு பின்னரோ திறந்து விடப்படும்.

இந்த ஆண்டு ஜூன் 12–ஆம் தேதி அன்று மேட்டூர் அணையின் நீர்மட்டம் 44.40 அடியாக இருந்ததாலும், தென் மேற்கு பருவமழை 5.6.2014 அன்று கர்நாடகா – கேரளா நீர்பிடிப்பு பகுதிகளில் துவங்கி பின்னர் குறைவடைந்ததாலும், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக இருந்ததாலும், மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்காக ஜூன் 12 அன்று தண்ணீர் திறந்துவிட இயலவில்லை.

தற்போது கர்நாடகா–கேரளா மாநிலங்களில், காவேரி நீர்பிடிப்புப் பகுதிகளில், தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து தொடர் மழை பெய்து வருவதால், கர்நாடகத்தில் உள்ள முக்கிய அணைகளான ஹாரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி ஆகியன முழு கொள்ளளவை எட்டி வருகின்றன. கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகளிலிருந்து அதிக அளவில் தண்ணீர் வெளியேற்றப்படுவதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து 6.8.2014 மாலை நிலவரப்படி 93.24 அடியாக, அதாவது 56.432 டி.எம்.சி. அடியாக உயர்ந்துள்ளது. தொடர்ந்து மேட்டூர் அணைக்கு கணிசமான நீர் வந்து கொண்டிருக்கிறது.

காவேரி நீர்பிடிப்புப் பகுதியில் தென்மேற்கு பருவமழை மேலும் நன்றாக இருக்கும் என்பதை எதிர்நோக்கியும், தற்போது மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பை கருத்திற் கொண்டும், இந்த வருடம் வடகிழக்கு பருவமழை இயல்பானதாக இருக்கும் என்பதை கருத்திற் கொண்டும், சுமார் 12 லட்சம் ஏக்கர் பரப்பளவில் காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, 15.8.2014 முதல் பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீர் வீணாகாமல், காவேரி, வெண்ணாறு மற்றும் கல்லணை கால்வாய் பாசனப் பகுதிகளில் உள்ள கிளை ஆறுகள் மற்றும் வாய்க்கால்கள் ஆகியவற்றிற்கு நீரைப் பகிர்ந்து அளிக்கவும், ஏரிகளில் நீரை சேமிக்கவும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 27. வணிக வரி மற்றும் பதிவுத் துறைக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள், வணிக வரி ஆணையர் அலுவலகத்தை மேம்படுத்துதல், ஒசூரில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைத்தல் – 7.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வளர்ச்சித் திட்டங்களையும், நலத் திட்டங்களையும் செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரத்தை தரும் ஆணிவேராக விளங்கக் கூடிய வணிக வரித் துறை மற்றும் பத்திரப் பதிவுத் துறையை செம்மைப்படுத்தவும், சீராக்கவும் தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறைகளின் மூலம் கிடைக்கும் வருவாயினைப் பெருக்கும் வகையிலும், பணியாளர்கள், வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கூடுதல் வசதிகளை அளிக்கும் வகையிலும், கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. வணிக வரித் துறை அலுவலகங்களுக்கு வருகை புரியும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடும் வகையிலும், பணியாளர்கள் பணிபுரிவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையிலும், கடந்த மூன்று ஆண்டுகளில் 45 கோடியே 4 லட்சம் ரூபாய் செலவில் 67 அலுவலகங்களை உள்ளடக்கிய 33 கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 11 கட்டடங்கள் இதுவரை என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில், சென்னை நகரில் 70 வணிகவரி அலுவலகங்களை உள்ளடக்கிய அனைத்து வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த இரண்டு வணிக வரி அலுவலகங்கள் 60 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. காவல் துறை, போக்குவரத்துத் துறை, வருவாய் துறை, வணிக வரித் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய துறைகளின் சார்பில் தனித் தனியே சோதனைச் சாவடிகள் செயல்படுவதன் காரணமாக, சரக்கு வாகனங்களை சரிவர சோதனைக்கு உட்படுத்த இயலாமல் போகிறது. இதனால் அரசுக்கு வரி இழப்பு ஏற்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, 120 கோடி ரூபாய் செலவில் வணிக வரித் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து அனைத்து துறைகளுக்கான ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி ஒன்று ஒசூரில் நிறுவப்படும்.

3. தற்போது, வணிக வரி ஆணையர் அலுவலகம், சென்னை எழிலகத்தில் நான்காம் தளத்தில் இயங்கி வருகிறது. அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள்

திறம்பட பணியாற்றவும், வணிக வரித் துறையை கணினிமயம் ஆக்குவதற்கும் வணிகவரி ஆணையர் அலுவலகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, 7,965 சதுர அடி பரப்பிலான வணிகவரி ஆணையர் அலுவலகம் 1 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

4. பாரம்பரியமிக்க துறையான பதிவுத் துறை அலுவலகங்கள் அனைத்தும் தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதைக் கருத்திற்கொண்டு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், கடந்த மூன்று ஆண்டுகளில், 104 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் 216 அலுவலகங்களை உள்ளடக்கிய 156 கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்னை, காஞ்சீபுரம், திருப்பூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஐந்து இடங்களில் 10 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 5 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் மற்றும் தனித் தனியாக 25 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள், அலுவலகப் பணியாளர்கள், வணிகர்கள், பொதுமக்கள் என அனைவரும் பயனுற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 28. அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை அமைத்து அம்மா விதைகள் வழங்குதல் உள்ளிட்ட வேளாண்மைத் தொழில் மேம்பாட்டுத் திட்டங்கள் – 7.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மண் வளத்தை மேம்படுத்துதல், நவீன உத்திகளை கையாளுதல், விதை, நுண்ணூட்டச் சத்து, உரங்கள் ஆகியவை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்தல், பயிர்க் கடன் வழங்குதல், தீவிர சாகுபடி முறை, நுண்ணீர் பாசனத் திட்டம், நெல் நடவு இயந்திரங்கள், களை எடுக்கும் கருவிகள் ஆகியவற்றை மானிய விலையில் வழங்குதல் போன்றவற்றின் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. இதன் காரணமாக, 2013–14 ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 110.65 லட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் நிலையை தமிழ்நாடு எய்தி மீண்டும் ஒரு வரலாற்றுச் சாதனையை படைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் முதன்மைத் தொழிலாகவும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்தும் வகையில், கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. இடு பொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட விவசாயப் பணிகள் மற்றும் அறுவடைக்கு பிந்தைய செயல்பாடுகள் ஆகியவற்றில் மகளிருக்கு பயிற்சி வழங்கும் "அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டம்" 113 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் 770 "பண்ணை மகளிர் குழுக்கள்" அமைத்து, உரிய கடன் வசதி மற்றும் சுழல் நிதி வழங்கப்படும்.

2. தமிழக விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை அதிகளவில் உபயோகிப்பதை ஊக்குவிக்கும் வகையில், அரசு விதைப் பண்ணைகள், விதை உற்பத்தி செய்யும் நிலையங்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரை ஒருங்கிணைத்து, உரிய பணியாளர்களை நியமித்து, 156 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை ஒன்று ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு உற்பத்தி செய்யப்படும் தரமான, சான்று பெற்ற விதைகள் "அம்மா SEEDS" என்ற பெயரில் "அம்மா சேவை மையம்" விற்பனை வாயில்கள் மூலம் நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

3. வேளாண்மைக்கான ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும், அதிகரித்து வரும் வேளாண் கல்விக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், கிராமப்புற இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் பயன் பெறும் வகையிலும், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை, தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் 150 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

4. தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தியை மேலும் பெருக்கும் வகையில், 16 கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில், ''விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை'' செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்படி, 'விவசாய உற்பத்தியாளர் குழுக்கள்' அமைக்கப்படும்.

மேலும், ''பண்ணை பயிர் மேலாண்மைத் திட்டம்'' என்னும் தகவல் தொழில் நுட்பம், தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும் நீட்டிக்கப்படும். தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைத் திட்டத்துடன் பண்ணைப் பயிர் மேலாண்மைத் திட்டமும் இணைக்கப்படும். மேலும், உற்பத்தியாளர் குழுக்களுக்கு லாபகரமான விலை கிடைக்க இக்குழுக்களை இணைத்து ஒன்பது விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்கப்படும்.

இவையன்றி, மாவட்ட அளவிலான வேளாண் விரிவாக்க அலுவலர்களையும் ஊக்குவிக்கும் வகையில், சாதனை புரியும் விவசாயிகளுக்கும், சிறந்த முறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கும் மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்படும். இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட, துறை அலுவலர்களுக்கு 143 பழைய வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

5. பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் நவீனத் தொழில்நுட்பங்களை வழங்கவும், முக்கிய இடுபொருட்கள், வேளாண் கருவிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகளை இருப்பு வைத்து வழங்கவும், செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் வாயிலாக விவசாயிகளுக்கு விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்து செயல்பாடுகளுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கவும், அனைத்து பயனாளிகளையும் ஒருங்கிணைத்து பன்முக செயல்பாட்டு முனையமாக திகழவும், கருத்துக் காட்சி, விவசாயிகள் பயிற்சி அறை, இடுபொருள் இருப்பு வைத்து விநியோகிக்கும் வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் 50 வட்டாரங்களில் 75 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

6. வேளாண் தொழிலாளர்கள் தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில், வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க 212 கோடி ரூபாய்

அளவுக்கு எனது தலைமையிலான அரசு மானியம் வழங்கியுள்ளது. சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களுக்குத் தேவையான அனைத்து வகையான வேளாண் கருவிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு நியாயமான வாடகைக்கு வழங்கவும், இந்த இயந்திரங்களை பழுது நீக்கவும் பொது மற்றும் தனியார் பங்கேற்புடன் 385 வட்டாரங்களிலும் 'வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மற்றும் இயந்திரங்கள், பழுது நீக்கும் சேவை மையங்கள்' 126 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

7. வேளாண்மையில், குறிப்பாக தோட்டக்கலையில் விளை பொருட்கள் விரைவில் வீணாகும் தன்மை கொண்டவை. இவற்றை பதப்படுத்துவதால், வேளாண் விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பு குறைக்கப்படுவதுடன், விவசாயிகளுக்கு சீரான விலையும், நுகர்வோருக்கு ஆண்டு முழுவதும் பதப்படுத்திய, பக்குவப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களும் கிடைக்கும். எனவே, அரியலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், ராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் சேலம் ஆகிய 10 மாவட்டங்களில், அம்மாவட்டத்திற்கு உகந்த வகையில் அரசு அல்லது பொது மற்றும் தனியார் துறை அல்லது கூட்டு நிறுவனங்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தனியார் தொழில் முனைவோர் மூலம் "வேளாண் பதப்படுத்தும் மாதிரித் தொழிற்சாலை" 25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு இதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

8. பயறு உற்பத்தியில் தன்னிறைவு அடைய ஏதுவாக, சாகுபடி பரப்பினை உயர்த்த துவரைப் பயிர் சாகுபடி ஓர் இயக்கமாகச் செயல்படுத்தப்படும். துவரை சாகுபடியை அதிகரிக்க பல்வேறு உத்திகள் கடைபிடிக்கப்படுவதுடன், துவரை சாகுபடி செய்யும் விவசாயிகள் குழுக்கள் அமைத்து, அக்குழுக்களை விவசாயிகள் உற்பத்தியாளர்கள் அமைப்பாக ஒருங்கிணைத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறை மூலம் அரசே நியாயமான விலைக்கு துவரையினை கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். துவரை பயறுக்கான இச்சிறப்புத் திட்டம் 55 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

9. காலநிலை மாற்றம், குறைந்து வரும் இயற்கை வளங்கள் மற்றும் வளர்ந்து வரும் போட்டி சூழல் போன்றவற்றால் வேளாண்மையில் ஏற்படும் பின்னடைவுகளை எதிர்கொண்டு நிலைத் தன்மையை ஏற்படுத்தும் வகையில், நடப்பு ஆண்டில் வேளாண் ஆராய்ச்சியின் மூலம் 28 கோடி ரூபாய் செலவில் 6 இனங்களில் மகத்துவ மையங்கள் உருவாக்கப்படும். இதன்படி, கோயம்புத்தூரில் மூலக் கூறு மரபியல் மகத்துவ மையம் ஒன்றும்; செட்டிநாட்டில் மானாவாரி பண்ணைய மகத்துவ மையம் ஒன்றும்; திருச்சிராப்பள்ளியில், மண் வள மகத்துவ மையம் ஒன்றும், மதுரையில் புதுமை ஆய்வு

மகத்துவ மையம் ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் பண்ணை மகளிர் அறிவு மேம்பாட்டு மையம் ஒன்றும், பட்டுக்கோட்டையில் எண்ணெய்ப் பனை மகத்துவ மையம் ஒன்றும் உருவாக்கப்படும்.

10. சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீடித்த வேளாண் பணிகளை மேம்படுத்துவதற்காக வேலூர், ஈரோடு, தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒரு கிராமம் வீதம், கிராமம் ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் செலவில், 5 மாதிரி இயற்கைக் கிராமங்கள் உருவாக்கப்படுவதோடு, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையை வலுப்படுத்தும் நோக்கோடு 150 சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மாதிரி கிராமங்களும், அதாவது Eco-Friendly Integrated Pest Management Villages அமைக்கப்படும். மேலும், 7 புதிய திரவ உயிர் உர உற்பத்தி ஆய்வகங்கள் அமைக்கப்படுவதுடன், அங்கக உரங்களின் சத்துக்களை ஆய்வு செய்வதற்கு 2 புதிய ஆய்வகங்கள் அமைக்கப்படும். இதுவன்றி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயற்கை பண்ணைய பணிகளை தரப்படுத்தி இயற்கை பண்ணையத்தில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆய்வக வளாகமும் 22 கோடியே 47 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

11. நவீன வேளாண்மையில் விதைப்பு முதல் அறுவடை மற்றும் சந்தைப்படுத்துதல் வரையிலான பல்வேறு வேளாண் பணிகளுக்கு திறன் மேம்பாட்டுடன் கூடிய மனித வள ஆற்றல் அவசியமாகிறது. எனவே, மனித வள ஆற்றலை அதிகரிக்கும் வகையில் வேளாண் திறன் மேம்பாட்டு மையம் ஒன்று துவக்கப்படும். இதன் மூலம் வரும் 10 ஆண்டுகளில் 20 கோடி ரூபாய் செலவில் 10 ஆயிரம் கிராமப்புற இளைஞர்களுக்கு 1 வருட சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படும்.

12. விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், விலை கட்டுப்படி ஆகாத பட்சத்தில், சேமித்து வைத்து நல்ல விலை வந்தவுடன் விற்பனை செய்வதற்கும், ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மிக முக்கிய பங்காற்றி வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் மற்றும் நாயுடுமங்கலம் வட்டங்களில் தலா ஒன்றும், விழுப்புரம் மாவட்டம் திருநாவலூரில் ஒன்றும் என மொத்தம் மூன்று இடங்களில் புதிய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் அமைக்கவும், நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தில் இயங்கி வரும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு புதிய கட்டடம் கட்டவும் 2 கோடியே 38 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

13. மரபு சாரா எரிசக்தியை ஊக்கப்படுத்துவதில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதுடன், பாசன நீர் இறைக்கும் பம்புகள், வேளாண் பொருட்களை உலர்த்துவது மற்றும் பதப்படுத்துவது ஆகியவற்றையும் செயல்படுத்திடலாம். சூரிய சக்தி மூலம் இயங்கும் விவசாய மோட்டார் பம்பு செட்டுகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு எனது அரசால் வழங்கப்பட்டு உள்ளன. 2013–14ஆம் ஆண்டில் சூரிய கூடார மிளகாய் உலர்த்தி அமைப்புகள் 40 லட்சம் ரூபாய் செலவில் மிளகாய் பயிரிடும் 20 குழுக்களுக்கு வழங்கப்பட்டன. சூரிய சக்தி பயன்பாட்டினை விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்கள் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில், 50 விழுக்காடு மானியத்தில் சூரிய கூடார உலர்த்திகள் படிப்படியாக நிறுவப்படும். முதல் கட்டமாக 2014–2015 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் மதிப்பில் 100 சூரிய கூடார உலர்த்திகள் நிறுவப்பட்டு, வேளாண் பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல் மற்றும் விற்பனை வசதியுடன் உரிய முறையில் இணைக்கப்படும். இதற்காக கடன் வசதி தேவைப்படும் விவசாயிகளுக்கு கூட்டுறவு துறை மூலம் உரிய கடன் வழங்க ஆவன செய்யப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள், விவசாய உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கவும், விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 29. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பு மற்றும் நிதியம் நிறுவி விருதுகள் வழங்குதல், திட்ட மதிப்பீடுகள் செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம், ஒருங்கிணைந்த பண்ணை முறையை ஊக்குவித்தல் – 8.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற இலக்கினை அடையும் வகையில், 'தொலைநோக்குத் திட்டம், 2023–ஐ தீட்டி, அதை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, திட்டம் மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் சார்பாக கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் புத்தாக்க பண்பாட்டை வளர்ப்பதற்காக, அரசுத் துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கு, மாநில திட்டக் குழுவில் "தமிழ் நாடு புத்தாக்க முயற்சிகள்" அதாவது Tamil Nadu Innovative Initiative என்ற ஓர் அமைப்பு நிறுவப்படும். முதற்கட்டமாக, இந்த அமைப்பு அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை வளர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இது படிப்படியாக அரசுத் துறை அல்லாத நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்படும். புத்தாக்க முயற்சிகளுக்கு பரிசுகள் வழங்கும் திட்டமும் உருவாக்கப்படும். இதற்கென "மாநில புத்தாக்க நிதியம்" என்ற ஒரு நிதியம் ஏற்படுத்தப்படும். புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு இந்த நிதியத்திலிருந்து நிதி வழங்கப்படும். இந்த நிதியத்திற்கு ஆண்டுதோறும் 150 கோடி ரூபாய் வழங்கப்படும். சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு "மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது" என்ற பெயரில் விருதுகளும் வழங்கப்படும்.

2. சிறந்த ஆளுமை என்பது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் அவற்றின் குறிக்கோள்களை எய்தியுள்ளனவா என ஆராய்ந்து, அதன் அடிப்படையில் கொள்கைகளை வகுப்பது ஆகும். எனவே, நடைமுறையில் உள்ள திட்டங்களை கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் ஏதுவாக, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மேலும் வலுப்படுத்தப்படும். தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களில் இடைக்கால திருத்தங்களை மேற்கொள்ளவும், வருங்காலத்தில் சிறப்பான மற்றும் அதிக பயன் அளிக்கக் கூடிய திட்டங்களை உருவாக்கவும் இது உதவிகரமாக இருக்கும். இதற்காக, அமெரிக்காவிலுள்ள, உலக அளவில் மிகச்சிறந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமான மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் Massa chusetts Institute of Techology- MIT-யில் செயல்படும் ஜமீல் – வறுமை குறித்த செயல்

ஆராய்ச்சி ஆய்வகம் Jameel – Poverty Action Lab – அமைப்புடன் இந்த அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளும். பள்ளிக் கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு மற்றும் சத்துணவு ஆகிய முக்கியத் துறைகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை மதிப்பீடு மற்றும் திறன் மேம்பாடு செய்ய உலக அளவில் புகழ்பெற்ற சிறந்த பொருளாதார வல்லுநர்கள் மற்றும் சமூக விஞ்ஞானிகள் ஈடுபடுத்தப்படுவர். இதற்காக, நடப்பு நிதியாண்டில் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. ஒருங்கிணைந்த பண்ணை முறை, வேளாண்மையையும், அதனைச் சார்ந்த தொழில்களையும் ஒன்றிணைத்து விவசாயிகளின் வருமானத்தை பெருக்க வகை செய்கிறது. மேலும் இது வேளாண்மையின் உப பொருட்களை சிறந்த முறையில் பயன்படுத்தவும், ஒரு தொழிலின் கழிவுப் பொருட்களை அடுத்த தொழிலுக்கு இடுபொருளாக பயன்படுத்தி உற்பத்தியையும் லாபத்தையும் அதிகரிக்கவும் வழிவகை செய்கிறது. எனவே, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள வேப்பூர் வட்டாரம், நாமக்கல் மாவட்டத்திலுள்ள மல்ல சமுத்திரம் வட்டாரம், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கயத்தாறு, கோவில்பட்டி; ஒட்டப்பிடாரம், புதுார் மற்றும் உடன்குடி வட்டாரங்கள், மதுரை மாவட்டத்தில் கள்ளிகுடி வட்டாரம், தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு வட்டாரங்கள் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் கொரடாச்சேரி மற்றும் கோட்டூர் வட்டாரங்களைச் சேர்ந்த மிக ஏழ்மை நிலைமையில் உள்ள 750 விவசாயிகள் பயன்பெறும் வகையில் 8 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பண்ணை முறையை ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பண்ணை குட்டைகள் அமைத்தல், மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு உற்பத்தி ஆகியவற்றுக்காக மானிய உதவி அளிக்கப்படும். மேலும், ஒருங்கிணைந்த பண்ணை முறையை பின்பற்றத் தேவையான பயிற்சியும் இத்திட்டத்தின் மூலம் அளிக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், நடைமுறையில் உள்ள திட்டங்கள் மேம்பாடு அடையவும், விவசாயிகளின் வருமானம் பெருகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 30. புதிய குடிநீர்த் திட்டங்கள், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு வசதிகள், சென்னைக்கு மழைநீர் வடிகால் வசதி, உள்ளாட்சி அமைப்புகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை மற்றும் அம்மா மக்கள் சேவை மையங்கள் அறிமுகம் – 8.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள அனைத்து இல்லங்களிலும் தரமான குடிநீர், குழாய் மூலம் கிடைக்கப்பட வேண்டும் என்ற நிலையை எய்துவதையும், திடக் கழிவு மேலாண்மைத் திட்டங்களை அனைத்துப் பகுதிகளிலும் செயல்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு, அதற்கேற்ப குடிநீர் மற்றும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில், கீழ்க்காணும் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டங்களை, இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தேனி மாவட்டம், வடுகபட்டி பேரூராட்சி மற்றும் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 60 ஊரகக் குடியிருப்புகளுக்கு, வைகை அணையினை நீர் ஆதாரமாகக் கொண்டு 72,945 மக்கள் பயன்பெறும் வகையில் 20 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருப்புவனம், மானாமதுரை, கண்டனூர், நாட்டரசன்கோட்டை, கோட்டையூர், புதுவயல், கானாடுகாத்தான் மற்றும் பள்ளத்தூர் ஆகிய 8 பேரூராட்சிகள் மற்றும் 2,297 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு, 5 லட்சத்து 7 ஆயிரத்து 775 மக்கள் பயன்பெறும் வகையில் 1,160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம், பத்மநாபபுரம் மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் 2 லட்சத்து 78 ஆயிரத்து 570 மக்கள் பயன்பெறும் வண்ணம், 169 கோடி ரூபாய் மதிப்பில், பொதுவான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 9 ஊராட்சிகளைச் சார்ந்த 185 ஊரகக் குடியிருப்புகளுக்கு பவானி ஆற்றினை, நீர் ஆதாரமாகக் கொண்டு 80,997 மக்கள் பயன்பெறும் வகையில் 42 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் மற்றும் நம்பியூர் ஒன்றியங்கள், காரப்பாடி மற்றும் 5 ஊராட்சிகளைச் சார்ந்த 88 ஊரகக் குடியிருப்புகளுக்கு பவானி ஆற்றினை நீர்

ஆதாரமாகக் கொண்டு 18,731 மக்கள் பயன்பெறும் வகையில் 11 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் நகராட்சி, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் மற்றும் புளியங்குடி நகராட்சிகளிலுள்ள 2 லட்சத்து 81 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், 267 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். ஆக மொத்தம், 6 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் 1,672 கோடியே ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இதே போன்று, பேரூராட்சிகளுக்கு என காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம் மற்றும் கருங்குழி பேரூராட்சிகளுக்கு 11 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47,502 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், திருச்சி மாவட்டம் கல்லக்குடி, புள்ளம்பாடி மற்றும் முசிறி பேரூராட்சிகளுக்கு 15 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 57,800 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், நாமக்கல் மாவட்டம் மோகனூர் மற்றும் பொத்தனூர் பேரூராட்சிகளுக்கு 7 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35,600 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், கரூர் மாவட்டத்திலுள்ள கிருஷ்ணராயபுரம் பேரூராட்சிக்கு 2 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12,020 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி மற்றும் தேவதானப்பட்டி பேரூராட்சிகளுக்கு 16 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 49,000 மக்கள் பயன்பெறும் வகையிலான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், என மொத்தம் 53 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்வதற்கு முன்பிருந்த பகுதிகளுக்கென 159 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடந்த 2012–ஆம் ஆண்டு பில்லூர் இரண்டாவது தனி குடிநீர்த் திட்டத்தினை நான் துவக்கி வைத்தேன். இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு சுமார் 125 எம்.எல்.டி. மற்றும் சிறுவாணி குடிநீர் திட்டம் மூலம் நாளொன்றுக்கு 75 எம்.எல்.டி. குடிநீர் கிடைத்துக் கொண்டு இருப்பதை கருத்தில் கொண்டு, சீரான அழுத்தத்துடன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் கிடைக்கும் வகையில், குடிநீர் விநியோகத் திட்டம் 451 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கழிவு நீரை மறு சுழற்சி செய்து குடிநீர் அல்லாத பிற தேவைக்கு பயன்படுத்துவதை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து ஊக்குவிக்கிறது. வட சென்னையை

ஒட்டியுள்ள மணலி மற்றும் மீஞ்சூர் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கு 2030 ஆம் ஆண்டிற்கான தண்ணீர் தேவை நாளொன்றுக்கு 75 மில்லியன் லிட்டர் என கண்டறியப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து வட சென்னை பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின்சார வாரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கு கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் 255 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5. கடந்த 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியுடன் 42 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டதை அடுத்து, இந்தியாவிலேயே நான்காவது மிகப் பெரிய மாநகராட்சியாக சென்னை மாநகராட்சி விளங்குகிறது. இவ்வாறு விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி, சென்னையை உலகத் தரம் வாய்ந்த நகரமாக உருவாக்க, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தினை அறிவித்து கடந்த மூன்று ஆண்டுகளில் 1,500 கோடி ரூபாய் நிதியினை எனது தலைமையிலான அரசு ஏற்கெனவே வழங்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக மழைக் காலங்களில் மழைநீர் தேங்காத வண்ணம் சிறந்த வடிகால் வசதிகளை ஏற்படுத்தி வெள்ளப் பெருக்கினால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பினைத் தடுக்க ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்காக 4,034 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்திட்டத்தின் மூலம், சிறிய கால்வாய்களில் உள்ள மழைநீர் பெரிய கால்வாய்களை சென்றடைந்து இயற்கை நீர்வழித் தடங்கள், கால்வாய்கள் மற்றும் நதிகள் வழியாக வங்காள விரிகுடா கடலை சென்றடையும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு 1,101 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடையாறு மற்றும் கூவம் ஆறுகளின் வடிநிலத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

6. திடக்கழிவு மேலாண்மை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகப் பெரும் சவாலாக உள்ளது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் திடக் கழிவு மேலாண்மையை அறிவியல் ரீதியாக செயல்படுத்த தேவையான நிலம் கிடைப்பதில் பல்வேறு தடைகள்

உள்ளன. தற்பொழுது உள்ள குப்பை கிடங்குகள் நிரம்பி அதனால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டினை கருத்தில் கொண்டு, இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில், ஒரு புதிய முயற்சியாக மண்டல அளவிலான ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் முதற்கட்டமாக நடப்பாண்டில் திருச்சிராப்பள்ளி, திருப்பூர், தூத்துக்குடி, வேலூர் ஆகிய மாநகராட்சிகளிலும் நாகர்கோவில் நகராட்சியிலும் மண்டல அளவிலான ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், **631** கோடியே **39** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**7.** அலுவலர்கள் அலுவல் நிமித்தமாக வெளி இடங்களுக்கு சென்றுவிடும் நேர்வில், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்கள் அலுவலர்களை சந்திக்க இயலாமல் போய்விடுகிறது. இந்த இடர்பாட்டை தவிர்க்க, வாரத்தில் ஒரு நாள் மாநகராட்சிகளில் உள்ள மண்டல அலுவலகங்களிலும், நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் பிறப்பு இறப்பு சான்றிதழ், வர்த்தக உரிமம், பாதாள சாக்கடை குழாய் இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு, தொழில் வரி விதிப்பு, சொத்து வரி கேட்பு, கட்டட அனுமதி, பெயர் மாற்றம், காலிமனை வரி விதிப்பு, வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு சான்றிதழ் ஆகியவை கோரும் விண்ணப்பங்களின் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில், “அம்மா மக்கள் சேவை மையம்” நடத்தப்படும். இந்த மையத்தில் ஒவ்வொரு புதன் கிழமையிலும் மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் முறையே உதவி ஆணையாளர்கள், ஆணையர்கள், செயல் அலுவலர்கள் பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, அவற்றின் மீது ஆய்வு செய்து, மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்கு ஏற்ப ஆணை வழங்க நடவடிக்கை எடுப்பார்கள். அனைத்து விண்ணப்பங்களையும் கணினியில் பதிவு செய்து, ஒவ்வொரு கோரிக்கை மனுவிற்கும் விண்ணப்பதாரர்களுக்கு முறையான பதில் வழங்க ஏற்பாடு செய்யப்படும். இப்பணி முறையாக நடப்பதை உறுதி செய்ய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும், மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அந்தந்த துறை தலைவர்கள் வலைதளம் மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம் அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு காலவிரயம் இன்றி குறைந்த செலவில் சென்றடைவது உறுதி செய்யப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், மக்களின் அடிப்படை வசதிகள் மேலும் மேம்படவும், பொதுமக்களின் குறைகள் தீரவும் வழி வகுக்கும்.

*******

## 31. குடிநீர் வழங்கல், குப்பை அகற்றல், புதிய கட்டடங்கள், பிளாஸ்டிக் தார்ச் சாலைகள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன், வறுமை ஒழிப்பு, உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல் உள்ளிட்ட ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 8.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது ஊரகப் பகுதிகளின் வளர்ச்சியில் தான் இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்த எனது தலைமையிலான அரசு, ஊரகப் பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது.

நடப்பாண்டில், ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்காணும் திட்டங்களை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானதாக விளங்கும் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு செயலாற்றும் எனது அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாக மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்தல், கைப் பம்பு மற்றும் சிறு மின் விசைப் பம்புகள் அமைத்தல், ஏற்கெனவே உள்ள குடிநீர் ஆதாரங்களை சீரமைத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில், 40 கோடி ரூபாய் செலவில் 1,000 புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல், 45 கோடி ரூபாய் செலவில் 3,000 சிறு மின் விசைப் பம்புகள் அமைத்தல், 6 கோடி ரூபாய் செலவில் 1,000 கைப் பம்புகள் அமைத்தல், 10 கோடி ரூபாய் செலவில் பழுதாகியுள்ள 10,000 ஆழ்துளைக் கிணறுகளை புனரமைத்தல் என மொத்தம் 101 கோடி ரூபாய் செலவில் ஊரகப் பகுதிகளில் குடிநீர் பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

2. சுகாதாரமான கிராமங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், கிராமங்களை சுகாதாரமாகவும் தூய்மையாகவும் பராமரிக்கும் வகையில், 44 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பில் 12,524 கிராம ஊராட்சிகளுக்கும், குப்பைகளை எடுத்துச் செல்வதற்காக 17,638 மூன்று சக்கர மிதி வண்டிகள் வழங்கப்படும். இதன்படி, மக்கள் தொகை 3,000–க்கு குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு தலா ஒரு வண்டியும், மக்கள் தொகை 3,001 முதல் 10,000 வரை உள்ள கிராம ஊராட்சிகளுக்கு தலா இரண்டு வண்டிகளும்; மக்கள் தொகை 10,000–த்திற்கு மேல் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு தலா மூன்று வண்டிகளும் வழங்கப்படும்.

3. கிராம ஊராட்சிகளின் கட்டமைப்புகளை வலுப்படுத்தும் வகையில், பழுதடைந்த 500 கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்களுக்கு பதிலாக பொதுமக்கள் வந்து செல்லவும், மன்றக் கூட்டங்கள் நடத்தவும், தளவாடப் பொருட்கள் வைக்கவும் ஏற்றவாறு

போதிய இட வசதியுடன் கூடிய புதிய ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. ஊரகப் பகுதிகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சாலைகள் நேரடி பங்கு வகிப்பதால், கிராமப் பகுதிகளிலுள்ள பழுதடைந்த 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்பட்டு, மேம்பாடு செய்யப்படும். மேலும், இச்சாலைகளை நீண்டகாலம் பயன்படுத்திடும் வகையில், தேவையான வடிகால் கட்டமைப்புகளும் ஏற்படுத்தப்படும்.

5. ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களில், ஊட்டச்சத்து, முன்பருவக் கல்வி, சுகாதார கல்வி, நோய்தடுப்பு, உடல்நல பரிசோதனை போன்றவற்றை பொது சுகாதார துறைகளுடன் ஒருங்கிணைத்து செயல்படுவதை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து உறுதி செய்து வருகிறது. இம்முயற்சிக்கு மேலும் வலுவூட்டும் வகையிலும், 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள சின்னஞ்சிறு குழந்தைகள், கருவுற்றிருக்கும் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்கள் ஆகியோருக்கு சுகாதாரமான சூழ்நிலையினை அளிக்கும் வகையிலும் 3,000 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் 195 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களான சுகாதார வளாகங்கள், நீர்த்தேக்கத் தொட்டிகள், அங்கன்வாடி கட்டடங்கள், நூலகங்கள் போன்றவற்றைப் பராமரித்திட மிகுந்த அக்கறையுடனும், பொறுப்புடனும் செயல்பட்டு வரும் எனது தலைமையிலான அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் 557 கோடியே 97 லட்சம் ரூபாய் செலவில் 92,031 ஊரகச் சொத்துக்களை சீரமைத்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, நடப்பு நிதியாண்டில், ஊரகப் பகுதிகளிலுள்ள 40,680 ஊரகச் சொத்துக்கள் 200 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

7. கிராமப் பகுதிகளை தூய்மைப்படுத்தும் வகையில், பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார்ச் சாலைகளை அமைக்க உத்தரவிடப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் 5,710 கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் 717 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தும் வகையில், இந்த ஆண்டு 175 கோடி ரூபாய் மதிப்பில் 1,600 கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் அமைக்கப்படும்.

8. அரசு சேவைகளான பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், வரிகளை செலுத்துவதற்கான வசதிகள் மற்றும் பல்வேறு வகையான சமூக பாதுகாப்பு உதவிகள் பெறுவதற்கான வசதிகள், ஊரக வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை வழங்கும் சேவை மையங்களாக கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் திகழ வேண்டும்

என்பதே எனது தலைமையிலான அரசின் முக்கிய நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடையும் வகையில், 4,460 கிராம ஊராட்சி சேவை மையங்கள் 648 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். இதே போன்று, 150 வட்டார ஊராட்சி சேவை மையங்கள் 45 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

9. சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பானது, மகளிரை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக ஆற்றல் படுத்தும் ஒரு முக்கிய உயிர்நாடியாகும். கடந்த மூன்று ஆண்டுகளில், 2 லட்சத்து 37 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் 14,097 கோடி ரூபாய் கடன் உதவி பெற்று பயனடைந்துள்ளன. 2014–15 ஆம் ஆண்டில், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் பெற வழிவகை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 2.5 லட்சம் சுய உதவிக் குழுக்கள் பயனடையும்.

10. கடன் பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவதுடன் வங்கிக் கடன் திரும்ப செலுத்தும் பணிகளை நிர்வகிக்க சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளரின் சேவை அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பகுதிக்கும் தலா நான்கு சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களை நியமிக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, 2014–2015 ஆம் ஆண்டில் 2000 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுய உதவிக் குழு உறுப்பினர்களிலிருந்து தேர்வு செய்யப்படும் இந்த ஒருங்கிணைப்பாளர்களுக்கு மாதாந்திர மதிப்பு ஊதியமாக 2,000 ரூபாய் வழங்கப்படும். இவர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் வங்கிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டு கல்வி கடன் வசதி, வங்கிக் கடனை திரும்பச் செலுத்துதல் மற்றும் காப்பீடு பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

11. சமுதாய அமைப்பான, கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உரிய அதிகாரம் பெற்று, அவற்றை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதை எனது தலைமையிலான அரசு குறிக்கோளாய் கொண்டுள்ளது. வறுமையை குறைக்கும் முயற்சியாக, சமுதாய முதலீட்டு நிதி 10 லட்சம் ரூபாய் ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் வழங்கப்படுகிறது. 2013–2014 ஆம் ஆண்டில், முதல் கட்டமாக அமைக்கப்பட்ட 2,323 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 232 கோடி ரூபாய் எனது அரசால் அனுமதிக்கப்பட்டது. 2014–2015 ஆம் ஆண்டில், இரண்டாம் கட்டமாக எடுக்கப்பட்டுள்ள 3,491 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும் தலா 10 லட்சம் ரூபாய் வீதம் 349 கோடியே 10 லட்சம் ரூபாய் வழங்கப்படும். இந்த நிதி ஆதாரங்கள் மூலம் 5.9 லட்சம் குடும்பங்கள் நேரடியாக பயன்பெறும்.

12. ஊரகப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், ஊரகப் பகுதிகளில் சிறிய அளவில் விவசாய நிலங்களை வைத்திருக்கும் தாழ்த்தப்பட்ட / பழங்குடியின, சிறு மற்றும் குறு விவசாயிகளின் கூடுதல் வருவாய்க்கு வழி ஏற்படுத்தித் தரும் வகையிலும், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் தமிழ்நாடு நீர்வள மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து 4,000 ஏக்கர் நிலப்பரப்பில் மரக் கன்றுகள் மற்றும் பழக் கன்றுகள் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் 62 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் 37.54 லட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்படும்.

13. விவசாய பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை பாதுகாக்க போதிய சேமிப்பு வசதிகள் ஏற்படுத்தும் வகையில், 2014–2015 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள 385 வட்டாரங்களில், ஒரு வட்டாரத்திற்கு ஒரு உணவு தானிய சேமிப்பு கிடங்கு என்ற விகிதத்தில், 385 உணவு தானிய சேமிப்பு கிடங்குகள் தலா 8 லட்சம் ரூபாய் வீதத்தில் 30 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், கிராமங்கள் மேம்படவும், கிராம மக்கள் வளம் பெறவும், அதன் மூலம் தமிழ்நாடு பல வகையில் முன்னேற்றம் அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 32. வேலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல் – 11.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜனநாயகத்தின் தூண்களுள் முக்கியத் தூணாக விளங்கிக் கொண்டிருக்கின்ற நீதித் துறை நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில், நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும், நீதிபதிகளுக்கு தேவையான குடியிருப்பு வசதிகளையும் எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தித் தருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக, 225 கோடியே 19 லட்சம் ரூபாய் நிதியினை எனது தலைமையிலான அரசு ஒதுக்கியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில், 18 நீதிமன்றங்கள் போதிய இடவசதி இன்றி இயங்கி வருவதைக் கருத்தில் கொண்டும், நீதிபதி மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டும், வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மேற்காணும் நீதிமன்றங்கள் போதுமான இடவசதியுடன் சிறப்பாக செயல்பட கட்டடம் ஒன்றும், நீதிபதிகளுக்கான குடியிருப்புகளும் 20 கோடியே 3 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

இதே போன்று, நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 8 நீதிமன்றங்கள் பழமை வாய்ந்த கட்டடத்திலும், பழுதடைந்த கட்டடத்திலும் செயல்படுவதால், அந்தக் கட்டடங்கள் நீதித் துறை அலுவலர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, மகளிர் நீதிமன்றம் உட்பட மாவட்டத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் உள்ளடக்கிய அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் தற்போதுள்ள நீதிமன்ற வளாகத்திலேயே 19 கோடியே 52 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

இதன் மூலம், நீதிபதிகள் மற்றும் நீதிமன்றங்களுக்கு வருகை புரியும் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கூடுதல் வசதி கிடைக்க வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 33. தேனி மாவட்டத்தில் மாவட்ட சிறைச்சாலை அமைத்தல் மற்றும் சிறைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குற்றவாளிகளை சிறையில் அடைத்து சீர்திருத்தி, மறுவாழ்வளித்து, விடுதலைக்குப் பின் அவர்கள் சமுதாயத்தின் அங்கமாக திகழ்வதற்கான பணியை செய்து கொண்டிருக்கும் சிறைத் துறையை மேம்படுத்துவதிலும், சிறைத் துறை பணியாளர்களுக்கும், சிறைவாசிகளுக்கும் கூடுதல் வசதிகளை செய்து கொடுப்பதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், தேனி மாவட்டத்தில் சிறைச்சாலைகள் ஏதும் இல்லாததால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சிறைவாசிகள் தற்போது மதுரை மத்திய சிறைக்கும், வளரிளம் சிறைவாசிகள் மதுரை மாவட்டம் மேலூரில் உள்ள பார்ஸ்டல் பள்ளிக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர். எனவே, இச்சிறைவாசிகளை தேனி மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளைக் களையவும், மதுரை மத்தியச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளியில் இட நெருக்கடியைக் குறைக்கவும், 14 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் 200 சிறைவாசிகள் தங்கும் வகையில், ‘பார்ஸ்டல்’ பள்ளியை உள்ளடக்கிய ஒரு மாவட்டச் சிறை அமைக்கப்படும்.

சிறைப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் அவசர கால நேர்வுகளில் பணிபுரிந்திட, சிறைக் களப் பணியாளர்கள் சிறை வளாகத்திலேயே வசிக்க வேண்டியது அவசியமாகும். எனவே, சிறைப் பணியாளர்களின் குடியிருப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆண்டுதோறும் 100 குடியிருப்புகள் கட்ட அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் தலா 100 குடியிருப்புகளை கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. அக்கொள்கை முடிவின் தொடர்ச்சியாக, 2014–2015 ஆம் ஆண்டில் 13 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் 100 குடியிருப்புகள் கட்டப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், சிறைவாசிகள் மற்றும் சிறைத் துறைப் பணியாளர்கள் கூடுதல் வசதி பெற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 34. மாநில தகவல் தரவு மையத்தை மேம்படுத்துதல், மாணவர்களுக்கு இணைய பதிவேற்று சேவைகள், தமிழ் இணைய வழிக் களஞ்சியம் அமைத்தல், அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் மூலம் இணைய தள சேவைகள் வழங்குதல் – 11.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''யாதும் ஊரே யாவருங் கேளிர்''என்ற புறநானூற்று வரிகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், அறிவியல் யுகத்தில் அளப்பரிய வளர்ச்சியினை பெற்று இருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பொதுமக்களுக்கான சேவைகளை விரைந்து வழங்கி வருகின்ற எனது தலைமையிலான அரசு, அதனை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முனைப்புடன் எடுத்து வருகிறது.

அந்த வகையில், நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாடு மாநில தரவு மையம், அதாவது Tamil Nadu State Data Centre தற்போது வணிகவரித் துறை, தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை மாநகராட்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட 15–க்கும் மேற்பட்ட அரசுத் துறைகள் மற்றும் திட்டங்களின் கணினி சார்ந்த தேவைகளை வழங்கி வருகிறது. இன்னும் பல அரசுத் துறைகள் தங்களது தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை அதிக அளவில் பொதுமக்களுக்கு அளித்திட முனைந்து வரும் இத்தருணத்தில், தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. அரசுத் துறைகளின் அதிகரித்து வரும் தகவல் உட்கட்டமைப்பு தேவைகளை கருத்தில் கொண்டு, 5,000 சதுர அடி பரப்பளவில் புதிய கட்டடம் ஒன்று கட்டி, அதில் 40 அடுக்குகளை, Racks அமைத்து 40 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் நிலை உயர்த்தப்படும்.

2. மின்ஆளுமைக்கான தகவல் தொழில்நுட்ப சேவைகளை தடையில்லாமல் வழங்குதல் அவசியமான ஒன்றாகும். ஆனால், இயற்கை சீற்றங்களான பூகம்பம், வெள்ளம் போன்றவை தரவு மைய பாதுகாப்பிற்கு சவாலாக உள்ளன. எனவே, இச்சேவைகளுக்கான தரவுகளை பேரிடர் மீட்பு மையம் தவிர மாநகரில் உள்ள வேறு ஒரு இடத்திலும் நகல் ஏற்றுவது அவசியமாகும். அரசின் மின்னாளுமை சேவைகளுக்கான தரவுகளை, மாநில தரவு மையத்திலிருந்து உடனுக்குடன் மற்றொரு இடத்தில் நகல் ஏற்றம் செய்யும் பொருட்டு, 1,250 சதுர அடி பரப்பளவில் ஒரு பேரிடர் தரவு மீட்பு மையம்,

அதாவது Near Line Disaster Recovery Centre 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**3.** தமிழக அரசு “tn.gov.in” என்ற இணைய வரம்பில், Domain Name-ல் அலுவல்சார் தொடர்புக்கான மின்அஞ்சல் முகவரிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இணைய பாதுகாப்பில் உள்ள சிக்கல்கள் மற்றும் அரசு துறை தகவல்களின் ரகசியத் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அரசுத் துறைகள் மற்றும் அரசு துறை அலுவலர்களின் அலுவல் சார்ந்த மின்னஞ்சல் முகவரிகளையும், மின்னஞ்சல்களையும் நிர்வகிக்க ஒரு திடமான, கட்டுறுதியான மின்னஞ்சல் தொகுப்பினை தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் செயல்படுத்துவது அவசியமாகிறது. சிறந்த, விரைவான, பாதுகாப்பான மற்றும் செயல்திறன் கொண்ட மின்னஞ்சல் தொடர்பினை பல்வேறு இயங்கு தள உதவியுடன் அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் மின்னஞ்சல் தொகுப்பு ஒன்று 1 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் செயல்படுத்தப்படும்.

**4.** தமிழ்நாடு முழுவதும், இதுவரை 20 லட்சத்துக்கும் மேற்பட்ட மடிக்கணினிகள் மாணவ மாணவியருக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இம்மடிக்கணினிகளை சிறந்த முறையில் உபயோகப்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்ப வளங்களை குறைந்த கட்டணத்தில் வழங்குவது அவசியமாகிறது. இளைஞர்களின் தொழில் முனையும் திறனை மேம்படுத்தும் வகையிலும், அவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையிலும், மாணவர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்களுக்கான மேகக் கணினி சார்ந்த சேவைகள், அதாவது Cloud Services மற்றும் இணையப் பதிவேற்ற சேவைகள், அதாவது Web-hosting Services ஆகியவற்றை குறைந்த கட்டணத்தில் வழங்கும் திட்டம் 50 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

**5.** உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்கள், வல்லுநர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து இணைய வழி பங்காற்றி தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், தமிழர், தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தின் சாதனைகளை உள்ளடக்கிய தமிழ் மொழி, கலை மற்றும் பண்பாட்டுக்கான விரிவான இணையவழி களஞ்சியம் ஒன்று தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால் உருவாக்கப்படும். முதற்கட்டமாக இதற்கு 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

**6.** தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம், உயர் தர கேபிள் டிவி சேவையினை உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக பொதுமக்களுக்கு மிகக் குறைந்த மாத சந்தா தொகையான 70 ரூபாய்க்கு வழங்கி வருகிறது. அரசு கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் வாயிலாக மாநிலம் முழுவதும் அதிவேக அகண்ட அலைவரிசை

சேவைகள், அதாவது Broadband Services மற்றும் இதர இணையதள சேவைகள், அதாவது Internet Services ஆகியவற்றையும் குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டி.வி. இனி வழங்கும். அகண்ட அலைவரிசை உரிமங்கள் பெற்று உள்ளவர்களுடன் இணைந்து வழங்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், தகவல் தொழில்நுட்பத்தின் கூடுதல் பயனை பொதுமக்களும், அரசுத் துறைகளும் அடைய வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 35. புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்குதல் – 11.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் சட்ட திட்டங்களை நிறைவேற்றும் முக்கிய கருவியாகவும், மக்களை நாடிச் சென்று உதவிகள் புரியும் ஆபத்பாந்தவனாகவும், அரசாங்கத்தின் ஆணிவேராகவும், நிர்வாகத்தின் முதுகெலும்பாகவும், மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிப்பதுமான வருவாய்த் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தும் முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

பொதுமக்களின் பயண நேரத்தைக் குறைக்கும் வகையிலும், காலதாமதமின்றி வருவாய்த் துறையின் சேவை மக்களை விரைந்து அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், புதிய கோட்டங்களை உருவாக்குதல், புதிய வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தல் போன்ற எண்ணற்ற நடவடிக்கைகளை கடந்த மூன்று ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, வருவாய்த் துறையின் சேவை மக்களுக்கு விரைந்து கிடைத்திடும் வகையில், நடப்பு ஆண்டில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அம்பத்தூர் மற்றும் பூந்தமல்லி வட்டங்களை சீரமைத்து ஆவடியில் ஒரு புதிய வட்டமும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம் வட்டத்தினைப் பிரித்து வாலாஜபாத்தில் ஒரு புதிய வட்டமும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திண்டிவனம் வட்டத்தினைப் பிரித்து மரக்காணத்தில் ஒரு புதிய வட்டமும், கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் வட்டத்தினைப் பிரித்து புவனகிரியில் ஒரு புதிய வட்டமும், சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் வட்டத்தினைப் பிரித்து பெத்தநாயக்கன் பாளையத்தில் ஒரு புதிய வட்டமும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் வட்டத்தினைப் பிரித்து சேந்தமங்கலத்தில் ஒரு புதிய வட்டமும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி மற்றும் போச்சம்பள்ளி ஆகிய வட்டங்களைச் சீரமைத்து பர்கூரில் ஒரு புதிய வட்டமும், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள போளூர், ஆரணி மற்றும் வந்தவாசி வட்டங்களைச் சீரமைத்து சேத்துப்பட்டில் ஒரு புதிய வட்டமும் மற்றும் செய்யாறு வட்டத்தினைப் பிரித்து வெம்பாக்கத்தில் ஒரு புதிய வட்டமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இலுப்பூர் மற்றும் குளத்தூர் வட்டங்களைச் சீரமைத்து விராலிமலையில் ஒரு புதிய வட்டமும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை வட்டத்தினைப் பிரித்து காளையார்கோயிலில் ஒரு புதிய வட்டமும், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ராமநாதபுரம் மற்றும் கடலாடி ஆகிய வட்டங்களைச் சீரமைத்து கீழக்கரையில் ஒரு புதிய

வட்டமும், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசி, ராஜபாளையம் மற்றும் சாத்தூர் ஆகிய வட்டங்களைச் சீரமைத்து வெம்பக்கோட்டையில் ஒரு புதிய வட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோயில் வட்டத்தினைப் பிரித்து திருவேங்கடத்தில் ஒரு புதிய வட்டமும் மற்றும் தென்காசி, சங்கரன்கோயில், சிவகிரி மற்றும் செங்கோட்டை ஆகிய வட்டங்களைச் சீரமைத்து கடையநல்லூரில் ஒரு புதிய வட்டமும் என மொத்தம் **15** புதிய வட்டங்கள் **45** கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் **254** வட்டங்களைச் சேர்த்து மொத்தம் **269** வட்டங்கள் செயல்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த அறிவிப்பின் மூலம், பொதுமக்களுக்கு, வருவாய்த் துறையினரின் சேவை விரைந்து கிடைக்கவும், வருவாய்த் துறையினர் தங்கள் சேவையை எளிதாகவும், விரைவாகவும், திறம்படவும் பொதுமக்களுக்கு ஆற்றவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 36. உயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் காடு வளர்ப்புத் திட்டங்கள், சரணாலயங்கள் அமைத்தல், வனப் பணியாளர்கள் பயிற்சி மேம்பாடு மற்றும் காலிப் பணியிடங்கள் நிரப்புதல் – 11.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மரம் வளர வனம் பெருகும், வனம் பெருக மழை பொழியும், மழை பொழிய பயிர் வளரும், பயிர் வளர மக்கள் உயர்வர், மக்கள் உயர மாநிலம் உயரும் என்பதற்கேற்ப வனங்களைப் பாதுகாத்து, அதன் மூலம் மக்களையும், விலங்குகளையும், பறவைகளையும் காப்பதற்கான பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் சூழல் பாதுகாப்பு மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சியினை உறுதி செய்யவும், தமிழ்நாட்டை பசுமை மாநிலமாக்கவும், நடப்பு ஆண்டில் உயிர்ப்பன்மை பாதுகாப்பு, அடிப்படை இயற்கை வளங்களை பெருக்க தனியார் நிலங்களில் மரங்கள் வளர்த்தல் மற்றும் ஆளுமைத் திறன் மேம்படுத்துதல் போன்ற முக்கிய செயல்பாடுகளை உள்ளடக்கிய திட்டப்பணிகள் 110 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

வளமான சூழல் அமைப்பினை உறுதி செய்யும் வகையில், உயிர்ப்பன்மை பாதுகாப்பு, வனப் பணியாளர்கள் திறம்பட வனங்களைப் பாதுகாத்து மேம்படுத்திட உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தமிழ்நாட்டில் பசுமைப் பரப்பினை அதிகரித்தல், காடு வளர்ப்பு போன்ற பணிகள் 35 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு ஆண்டு மேற்கொள்ளப்படும்.

வனத் துறை களப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், கடந்த ஆண்டு முதல் அவர்களுக்கு மாதந்தோறும் 400 ரூபாய் இடர்படியினை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது. இயற்கை வளத்தின் சின்னமாக விளங்கும் வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாக்கும் பணியில் முறையான பீட் (Beat) பணியாளர்களுக்கு உறுதுணையாக மிகைப் பணியிடத் தோட்டக் காவலர்களும், மிகைப் பணியிட வேட்டைத் தடுப்புக் காவலர்களும் பணிபுரிந்து வருவதால், வனத் துறையின் களப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்படியின் பயன் இவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் 76 லட்சம் ரூபாய் கூடுதலாக செலவாகும். இதன் மூலம் மிகைப் பணியிடத்தில் பணிபுரிந்து வரும் 1,439 தோட்டக் காவலர்களும், 137 வேட்டைத் தடுப்புக் காவலர்களும் பயனடைவார்கள்.

உயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் தமிழ்நாடு தற்போது முன்னிலை வகிக்கும் மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் தற்போது 14 வன உயிரின சரணாலயங்களும், 5 தேசிய பூங்காக்களும், 14 பறவைகள் சரணாலயங்களும், 4 புலிகள் காப்பகங்களும், 4 யானைகள் காப்பகங்களும், 3 உயிர்க்கோள் காப்பகங்களும், ஒரு பாதுகாக்கப்பட்ட ஒதுக்குப் பகுதியும் உள்ளன. சுற்றுச் சூழலுடன் இணைந்த உயிர்ப் பன்மை செறிந்துள்ள பகுதிகளை 'பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மேலாண்மையின்' கீழ் கொண்டு வருவதன் மூலம் வன உயிரினங்களின் எண்ணிக்கை அதிகரிக்க உகந்த சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. எனவே, உயிரியல் முக்கியத்துவம் நிறைந்த பகுதிகளை வன உயிரின சரணாலயமாக ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் உயிர்ப் பன்மை செறிந்துள்ள பகுதிகளை உள்ளடக்கி தமிழ்நாட்டின் 15 ஆவது வன உயிரினச் சரணாலயமாக 'நெல்லை வன உயிரினச் சரணாலயம்' ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இடம் பெயர்ந்து வரும் பல்வேறு பறவையினங்களின் குளிர்கால புகலிடமாக மட்டுமின்றி, உயிர்ப் பன்மை செறிந்ததாகவும் விளங்கும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒசூடு ஏரிப் பகுதி தமிழ்நாட்டின் 15 ஆவது பறவைகள் சரணாலயமாக ஆக்கப்படும்.

வனத் துறையின் களப் பணியாளர்களுக்கு வன உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை, மனித–வன உயிரின மோதல்களைத் தடுத்தல், வனப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளில் திறம்பட பயிற்சி அளிக்கும் வகையில், ஆனைமலை புலிகள் காப்பகத்தில் அட்டகட்டி மற்றும் முதுமலை புலிகள் காப்பகத்தில் தெப்பக்காடு பகுதிகளிலுள்ள அடிப்படைப் பயிற்சி மையங்கள் 2 கோடி ரூபாய் செலவில் 'மேம்படுத்தப்பட்ட வன உயிரின மேலாண்மைப் பயிற்சி மையங்களாக' தரம் உயர்த்தப்படும். இப்பயிற்சி மையங்களை நிர்வகிக்க இரண்டு உதவி வனப் பாதுகாவலர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

வனத் துறை மற்றும் அதைச் சார்ந்த மூன்று வனக் கழகங்களில் வனவர், வனக் காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் ஆகிய பதவிகளில் காலியாக உள்ள சுமார் 650 காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் நேரடி நியமனம் மூலம் நடப்பாண்டில் நிரப்பப்படும். முதன் முறையாக வனத் துறையில் இப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் மகளிரும் தேர்வு செய்யப்பட உள்ளனர் என்பதை இந்த மாமன்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் திட்டங்கள் விலங்குகள் பாதுகாப்பிற்கும்; வருங்கால சந்ததியினரின் வளமான வாழ்விற்கும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 37. குறு, சிறு சாய மற்றும் சலவைப் பட்டறைகளை ஒருமுகப்படுத்த குழுமம் அமைத்தல் – 11.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர்கள் வாழ இன்றியமையாததாக விளங்குகின்ற காற்றிலும், நீரிலும் மாசுகள் கலக்காதவாறு காக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள எனது தலைமையிலான அரசு, அதே சமயத்தில் தமிழகத்தின் பெருமை வாய்ந்த ஜவுளித் தொழிலின் முக்கிய அங்கமாகவும், பல்லாயிரக் கணக்கானவர்களின் அடிப்படை வாழ்வாதாரமாகவும் அமைந்துள்ள சாயம் மற்றும் சலவை தொழிலை பாதுகாப்பதிலும் உறுதியாக உள்ளது.

நாமக்கல், ஈரோடு, சேலம், மற்றும் கரூர் மாவட்டங்களில் அமைந்துள்ள ஏறத்தாழ, 900 குறு மற்றும் சிறு சாய / சலவைப் பட்டறைகள் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை நேரடியாக வழங்குவதோடு மட்டுமல்லாமல் அது சார்ந்த நெசவுத் துறையிலும் லட்சக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பின் அடிப்படையாகவும் அமைகிறது.

மாறி வரும் சுற்றுச்சூழல் சட்டங்களின் தேவைக்கேற்ப பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பூஜ்ய திரவ வெளியேற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. எனது தலைமையிலான அரசின் வட்டியில்லா கடன் உதவி மூலம், திருப்பூரில் 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. ஆனால், குறு மற்றும் சிறு சாய / சலவைப் பட்டறைகளால் இத்தொழில் நுட்பத்தினை செயல்படுத்த இயலாமல், சுத்திகரிக்கப்படாத சாய கழிவு நீரினை நேரடியாக காவிரி, பவானி, அமராவதி மற்றும் பிற நீர்நிலைகளிலும், நிலத்திலும் வெளியேற்றுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது மட்டுமல்லாது, நீதிமன்ற உத்தரவுகளாலும், பெரும்பான்மையான சாய / சலவை பட்டறைகள் தங்களது தொழிலை தொடர முடியாத நிலையும், அதனால் தமிழகத்தின் ஜவுளித் தொழில் மிகுந்த பாதிப்புகளுக்கு உள்ளாகி பொருளாதார இழப்புகளும் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

எனது அரசின் நோக்கம் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல் "கட்டுப்பாட்டுடன் கூடிய நிலைத்த பொருளாதார வளர்ச்சியை" ஏற்படுத்துவதாகும். எனவே, குறு மற்றும் சிறு சாய / சலவை தொழிலுக்கும் மற்றும் அது சார்ந்த ஜவுளித் தொழிலுக்கும் புத்துணர்வு ஏற்படுத்தும் வகையில், இச்சாய / சலவைப் பட்டறைகள் இடம் பெயர உதவி செய்து, ஒரே இடத்தில் ஒருமுகப்படுத்தி தொழில் சார்ந்த வளர்ச்சிக் குழுமமாக உருவாக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தினால் நேரடியாக சுமார் 10,000 பேருக்கும், அது சார்ந்த நெசவுத் தொழில் மூலமாக சுமார் ஒரு லட்சம் பேருக்கும் வேலைவாய்ப்புகளை உறுதி செய்ய இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 700 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இத்திட்டச் செயல்பாட்டிற்கு தேவையான முதலீட்டை மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களைச் சார்ந்த திட்டங்களின் மூலமாக பெற நடவடிக்கை எடுக்கப்படும். எஞ்சிய நிதித் தேவையினை எனது தலைமையிலான அரசு வழங்கும்.

இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் தொடங்கப்பட்டு மூன்று ஆண்டுகளில் முடிக்கப்படும். இத்திட்டத்தினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆகியவை இணைந்து நடைமுறைப்படுத்தும்.

இதன் மூலம், சாய, சலவை மற்றும் நெசவுத் தொழில் வளர்ச்சி அடைவதோடு மட்டுமல்லாது, தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 7,000 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கவும், மாசு கட்டுப்பாட்டிற்குள் இருக்கவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

## 38. கட்டுமானத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்யும் பல்வேறு நலத் திட்டங்கள் – 12.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“உழைத்து வாழ்பவனே வணங்கத் தக்கவன். வாழ்த்துக்கு உரியவன். அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.” என்றார் பேரறிஞர் அண்ணா.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கு ஏற்ப, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை 1982 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இயற்றினார். இந்தச் சட்டத்தின்படி, கட்டுமானத் தொழில்களில் பணிபுரியும் அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் 1994 ஆம் ஆண்டு என்னால் உருவாக்கப்பட்டது.

கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தனி நபர் அல்லது நிறுவனம், தான் மேற்கொள்ள உள்ள கட்டடம் மற்றும் கட்டுமானப் பணியின் உத்தேச மொத்த மதிப்பீட்டில் 1 விழுக்காடு தொகையை பங்களிப்புத் தொகையாக வாரிய நிதிக்கு செலுத்த வேண்டும். இந்த நிதியிலிருந்து பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெற்று வருகின்றனர். கடந்த மூன்று ஆண்டு காலத்தில் மட்டும் 112 கோடியே 96 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய நலத்திட்ட உதவிகள் 3 லட்சத்து 85 ஆயிரத்து 244 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளன.

கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் சமூகப் பாதுகாப்பினை மேலும் மேம்படுத்தும் வகையில், 127 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பிலான கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தற்போது பணியிடத்தில் பணியின் போது நிகழும் விபத்தின் காரணமாக அல்லது பிற இடங்களில் நிகழும் விபத்துகளின் காரணமாக பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர் இறக்கும் நேர்வில், அவர்தம் நியமனதாரருக்கு 1 லட்சம் ரூபாய் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது. இதில் பணியில் ஈடுபட்டு இருக்கும் போது, பணியிடங்களில் விபத்து ஏற்பட்டு இறக்கும் தொழிலாளர்களுக்கான நிதி உதவி ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**2.** தமிழ்நாட்டை சார்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் மட்டுமே தற்போது தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்கிறார்கள். வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்வதற்கான நடைமுறைகளை வெளி மாநில தொழிலாளர்கள் பூர்த்தி செய்ய இயலாத நிலை உள்ளதால், அவர்களால் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்ள முடியவில்லை. இன்றைய சூழலில், பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்கள் கட்டுமானத் தொழிலில் அதிக அளவில் ஈடுபட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், வாரியத்தின் நலத்திட்ட உதவிகள் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலும், வெளி மாநிலத் தொழிலாளர்களால் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் மற்றும் வேலை அளிப்போரின் சான்றிதழ் ஆகியவற்றை மட்டும் பரிசீலித்து, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் அவர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவார்கள்.

**3.** கட்டுமானப் பணியிடங்களில் சுமை தூக்கிப் பொறி, போக்குவரத்து சாதனங்கள் அல்லது வாகனங்கள் ஆகியவற்றை இயக்குவதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மட்டுமே வேலை அளிப்போரால் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இதர கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இவ்வசதி இல்லை. எனவே, பாலங்கள், சாலைகள் மற்றும் கட்டடங்கள் கட்டும் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் ஆய்வக வசதி மற்றும் பல்வேறு பரிசோதனைகளுக்கான வசதிகளுடன் கூடிய **15** நகரும் மருத்துவமனைகள், பிற மாவட்டங்களில் **35** நகரும் மருத்துவமனைகள் என மொத்தம் **50** நகரும் மருத்துவமனைகள் **19** கோடியே **62** லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு நகரும் மருத்துவமனையிலும் ஓர் ஆண் மருத்துவர், ஒரு பெண் மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர், ஆய்வக நுட்புநர், உதவியாளர் போன்றவர்கள் அடங்கிய ஒரு மருத்துவக் குழு இருக்கும்.

**4.** தற்போது கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் அனைவருக்கும் அவர்கள் பணிபுரியும் இடங்களில் கல்வி வசதி அளிக்க இயலாத நிலை உள்ளது. பெரும்பாலான கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் அவர்களின் குழந்தைகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளது தான் இதற்குக் காரணம். எனவே, அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களில் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக, உரிய வாகன வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

**5.** கட்டுமானப் பணியிடத்தில் **50** அல்லது அதற்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணிபுரிந்தால், வேலை அளிப்பவரால் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்பட வேண்டும். குறைவான எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் இவ்வசதி கிடைப்பதில்லை. மேலும், பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலைக்காக அடிக்கடி இடம் பெயர்ந்து செல்வதால் அவர்களது சொந்த இருப்பிடங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள அங்கன்வாடி வசதிகளையும் அவர்களால் பெற இயலவில்லை. எனவே, கட்டுமானத் தொழிலாளர்களுடைய குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கட்டுமானப் பணிகள் அதிக அளவில் நடைபெறும் **50** இடங்களில் அங்கன்வாடி மையங்கள் துவங்கப்படும். ஒவ்வொரு அங்கன்வாடி மையமும் சுமார் **400** சதுர அடியில், **20** குழந்தைகளைப் பேணும் வகையில் பொதுப்பணித் துறையினரால் அமைக்கப்படும். இந்த அங்கன்வாடி மையங்களில் **6** மாதங்கள் முதல் **36** மாதங்கள் வரையுள்ள குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கப்படும். **5** வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பருப்பு வகைகள், தானியங்கள், எண்ணெய், காய்கறிகள் அடங்கிய சூடான, சத்தான, சமைத்த மதிய உணவு வழங்கப்படும். உணவுடன் திங்கள், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் ஒரு முட்டையும், செவ்வாய்க் கிழமையன்று கடலைப் பருப்பு அல்லது பச்சைப் பயிறு உணவும், வெள்ளிக் கிழமையன்று உருளைக்கிழங்கு சேர்த்த உணவும் வழங்கப்படும். அவர்களை பள்ளிக்குச் செல்ல தயார்படுத்த **2** முதல் **5** வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பாலர் பள்ளி வசதி செய்து தரப்படும். கூடுதலாக மருத்துவ பரிசோதனை, தடுப்பூசி, வைட்டமின் 'A' மாத்திரை, மருத்துவ மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவை குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு வழங்கப்படும். மேலும் தாய்–குழந்தை இணைப்பு மருத்துவ அட்டை பயனாளிகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு **2** கோடியே **51** லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

**6.** பொதுவாக, கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பவரால் பணி இடத்திற்கு அருகில் தற்காலிக இருப்பிட வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் தங்கும் இட வசதிகள் பாதுகாப்பு அற்றதாக உள்ளன. மேலும் சிறிய கட்டுமான நிறுவனங்கள் அதற்கான வசதிகளை செய்து கொடுப்பதே இல்லை. இந்த சிரமங்களைப் போக்கிடும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில், **5** இடங்களில் தலா **1,000** தொழிலாளர்கள் தங்கும் வகையிலும், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் தலா **500** தொழிலாளர்கள் தங்கும் வகையிலும் என மொத்தம் **7,000** தொழிலாளர்கள் தங்கும் வகையில் **9** இடங்களில் **105** கோடி ரூபாய்

செலவில் தூங்கும் அறைகள் அதாவது Dormitories தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் பொதுப்பணித் துறை மூலம் கட்டப்படும். இவை கட்டப்படும் வளாகங்களில் அம்மா உணவகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சலவை செய்யும் வசதி, குழந்தைகள் மற்றும் முதியோர் பாதுகாப்பு மையம், வங்கி தொடர்பு சேவை, படிப்பகம், சுகாதார மையம், பொழுதுபோக்கு மையம் ஆகியவை ஏற்படுத்தப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், கட்டுமானத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மேம்படுத்தப்படுவதுடன், அவர்கள் கூடுதல் வசதியினை பெறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 39. பட்டுக்கோட்டை நகராட்சியின் பொன் விழா ஆண்டையொட்டி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 25 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கீடு – 12.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பண்டைய சிற்பங்களுக்கும், பழமை வாய்ந்த கோயில்களுக்கும் பெயர் பெற்றதும், பெயரிலேயே வளத்தை பிரதிபலிப்பதும், தஞ்சாவூர் மாவட்டத்தின் தன்னிகரற்ற நகரமாக விளங்குவதும், காவேரி ஆற்றில் இருந்து பிரியும் கல்லணை கால்வாயில் அமைந்துள்ளதுமான பட்டுக்கோட்டை நகரம், 1.4.1965 அன்று நகராட்சியாக உருவாக்கப்பட்டு, பின்னர் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, இந்த ஆண்டு பொன் விழாவினை கொண்டாட இருக்கிறது.

வரலாற்றுப் பாரம்பரியமும், சிறப்பும் கொண்ட இந்த பட்டுக்கோட்டை நகரம் 21.83 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், அமைந்துள்ளது. இந்த நகராட்சியில், 33 வார்டுகள், 73 கிலோ மீட்டர் சாலைகள், 2,883 தெரு விளக்குகள், 5 பூங்காக்கள், 21 ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகள், பாலிடெக்னிக் மற்றும் அரசு மருத்துவமனை ஆகியவை உள்ளன.

பட்டுக்கோட்டை நகராட்சி தொடங்கப் பெற்று 49 ஆண்டுகள் முடிவடைந்து, பொன்விழா ஆண்டான 50 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. பட்டுக்கோட்டை நகராட்சி பொன் விழா காணும் இத்தருணத்தில், அதன் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்திட அரசிடம் நிதி கோரி பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையர் அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும் இது குறித்து என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பட்டுக்கோட்டை நகராட்சி தனது பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது என்பது பெருமைக்குரிய அம்சமாகும். இந்தப் பெருமைக்கு உரிய நிகழ்ச்சியை நினைவு கூரும் வகையில், பட்டுக்கோட்டை நகராட்சியின் குடிநீர் அபிவிருத்தி, சாலை மற்றும் வடிகால் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, குளங்களை சீரமைத்தல், பேருந்து நிலைய மேம்பாடு, அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சிறப்பு உதவித் தொகையாக 25 கோடி ரூபாயினை எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், பட்டுக்கோட்டை நகராட்சியைச் சார்ந்த மக்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 40. புதிதாக 106 திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டம் விரிவாக்கம், திருக்கோயிலில் பணிபுரியும் தொகுப்பூதியப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்தல், திருக்கோயில்களில் திருப்பணி செய்ய உதவித் தொகை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் – 12.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத் திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களை பாதுகாத்து பராமரிப்பதிலும், வழிபாடுகளை நடத்துவதிலும், அன்னதானம் உட்பட இறையன்பர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இறையன்பர்களின் வசதிகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் உள்ள தொன்மையான ஓவியங்களை பழமை மாறாது புதுப்பிக்கும் வகையில், தொல்லியல் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்று எனது தலைமையிலான அரசால் அமைக்கப்பட்டது. இந்தக் குழு அளித்த மதிப்பீட்டின்படி, திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில் 5 நிலை ராஜகோபுரத்தில் உள்ள பழமையான சுவரோவியங்களை 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்துப் பராமரிக்கப்படும்.

2. 2002 ஆம் ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்ட திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம் தற்போது 518 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம், ஆன்றோர்கள், சான்றோர்கள், இறையன்பர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதை அடுத்து, ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் 13.9.2012 அன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்களுக்கு பெரும் பயனளிக்கும் இத்திட்டம், நடப்பு ஆண்டில் 3 கோடியே 87 லட்சம் ரூபாய் செலவில் மேலும் 106 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

3. இந்து சமய திருக்கோயில்களை ஆகம விதியின்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். இதன்படி, இதுவரை இல்லாத அளவுக்கு, கடந்த மூன்று ஆண்டு காலத்தில், 5351 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது.

நடப்பு ஆண்டில் மேலும் 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்படும். இதற்கென அரசு மானியமாக 6 கோடி ரூபாய் வழங்கப்படும்.

4. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அமையப் பெற்றுள்ள திருக்கோயில்கள் சரியான பராமரிப்பின்றி சிதிலம் அடைந்து இருப்பதை அறிந்த எனது தலைமையிலான அரசு, கடந்த 3 ஆண்டுகளில், ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளிலுள்ள 1,630 திருக்கோயில்களை சீரமைக்க, ஒரு திருக்கோயிலுக்கு 50,000 ரூபாய் வீதம் 8 கோடியே 15 லட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கி, அதன் மூலம் அத்திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/– ரூபாய் வீதம் 5 கோடியே 3 லட்சம் ரூபாய் நிதியுதவி செய்யப்படும்.

5. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்கள் நிதி வசதியின்மையால் திருப்பணிகள் மேற்கொள்ளப்படாது சிதிலம் அடைந்துள்ளதை அறிந்த எனது தலைமையிலான அரசு, திருப்பணிக்கான உதவியை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தியதோடு, கடந்த மூன்று ஆண்டு காலத்தில் 1,262 திருக்கோயில்களுக்கு 6 கோடியே 31 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/– ரூபாய் வீதம் 5 கோடியே 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

6. அன்னதானம் அருந்தும் பக்தர்கள் வசதிக்கென அன்னதானக் கூடம் இல்லாத திருக்கோயில்களில் சமையல் அறையுடன் கூடிய அன்னதானக் கூடம் அமைத்தல், அங்கு பக்தர்கள் வசதியுடன் அமர்ந்து உணவருந்த தேவையான மேஜை நாற்காலிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருதல் ஆகியவற்றை நிறைவேற்றும் வகையில், கடந்த 3 ஆண்டுகளில் 23 அன்னதானக் கூடங்கள் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 29 அன்னதானக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் 16 திருக்கோயில்களில் 3 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அன்னதானக் கூடங்கள் கட்டப்படும்.

7. திருக்கோயில்களில் ஒரு கால பூஜையேனும் நடைபெற வேண்டும் என்ற நோக்கில் ஒரு கால பூஜைத் திட்டத்தை சீரமைத்து இன்று 11,931 கிராமப்புறத் திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள சிறு சிறு திருக்கோயில்கள் உட்பட சிறு சிறு

கிராமப்புறத் திருக்கோயில்களிலும், நாள்தோறும் முறையாக பூஜை நடைபெறுவதற்கு தேவையான பூஜை உபகரணங்கள் இல்லை என்பது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, கிராமப்புறங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள திருக்கோயில்கள் உள்ளிட்ட 10,000 சிறு சிறுத் திருக்கோயில்களுக்கு முறையான பூஜை செய்திட ஏதுவாக, பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கு விளக்கு ஆகியவை 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும்.

8. வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புனரமைத்து புதுப்பிக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்து கடந்த மூன்று ஆண்டுகளில் 186 திருக்கோயில்களுக்கு 67 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. இவ்வாண்டு மேலும் 68 தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புனரமைத்து புதுப்பிக்க 22 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. பஞ்சபூத தலங்களில் அக்னித் தலமாக விளங்கும் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகை புரியும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி சுமார் 500 பக்தர்கள் தங்கும் வகையில் பக்தர்கள் தங்கும் விடுதி 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

10. பழம் பெருமை வாய்ந்ததும், 12 ஜோதிர்லிங்க தலங்களில் ஒன்றாக விளங்குவதுமான ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்கி வழிபடுவதற்கும், சுற்றுலாப் பயணிகள் தங்கி செல்லவும் போதுமான தங்கும் வசதி இத்தலத்தில் இல்லை என்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி சுமார் 500 பக்தர்கள் தங்கும் வகையில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தங்கும் விடுதி அமைக்கப்படும்.

11. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பகோணம் நகரில் அமைந்துள்ள மகாமகத் திருக்குளத்தில் மகாமகப் பெருவிழா நடைபெறுவது வழக்கம். இப்பெருவிழா 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் நாள் கொடியேற்றத்துடன் தொடங்கி பிப்ரவரி 22 ஆம் நாள் நிறைவு பெறும். இம்மகாமகப் பெருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகர் பகுதியில் அமைந்துள்ள 86 திருக்கோயில்களில் நல்ல நிலையில் உள்ள 17 திருக்கோயில்கள் தவிர எஞ்சிய 69 திருக்கோயில்கள் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செப்பனிட்டுப் பாதுகாக்கப்படும்.

12. திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம் என்னால் துவக்கி வைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அன்னதானம் வழங்கும்

பணிகளில் சமையல் செய்பவர், உதவியாளர், துப்புரவாளர் என்ற நிலைகளில் 673 நபர்கள் தினக் கூலி அடிப்படையிலும், 147 நபர்கள் தொகுப்பூதிய அடிப்படையிலும் மொத்தம் 820 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில், அந்தந்த திருக்கோயில்களுக்கு உரிய சம்பள விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்து அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்படும். இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 7 கோடியே 89 லட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

13. கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தில் 490 இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் உள்ளன. இத்திருக்கோயில்களில் மொத்தம் 869 பணியிடங்கள் உள்ளன. இப்பணியிடங்களில் 65 பணியிடங்களுக்கு முதல்நிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கான சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. எஞ்சிய 804 பணியிடங்கள் சில்லரை செலவின பணியிடங்கள் என வரையறை செய்யப்பட்டுள்ளது. இச்சில்லரை செலவினப் பணியிடங்களில் 356 பணியாளர்கள் மட்டும் சாந்தி அதாவது அர்ச்சகர், காவலர், தவில், வாத்தியம், கொத்தன், சுருதி, மாலைக்கட்டு போன்ற அத்தியாவசிய பணியிடங்களில் சம்பள விகிதத்தில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் 294 சில்லரை செலவின பணியிடங்களில் மேற்கண்ட பதவிகளில் தினக்கூலி 40/– ரூபாய் என்ற அடிப்படையில் பணிபுரிகின்றனர். இவர்களது பணி, தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில் ஊதிய விகித முறையில் வரன்முறை செய்யப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 46 லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். மேலும், காலியாக உள்ள 154 பணியிடங்கள் தகுதி உடையோரைக் கொண்டு ஊதிய விகித அடிப்படையில் உடனடியாக நிரப்பப்படும்.

14. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் ஆண்டு வருமான அடிப்படையில் பல்வேறு நிலைகளில் உள்ள திருக்கோயில்களில் பல ஆண்டுகளாக ஏற்பட்ட காலிப் பணியிடங்களில் தினக் கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக 8,184 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்கள் நீண்ட காலமாக தங்களுடைய வாழ்வாதாரத்தை சீரமைத்திட தங்கள் பணியினை ஊதிய விகித அடிப்படையில் வரன்முறைப்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்களது குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தினக் கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் 8,184 பணியாளர்களுக்கு தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டு அவர்களது பணி வரன்முறை செய்யப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 44 கோடியே 14 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகளினால், திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்கள் கூடுதல் வசதியைப் பெறவும், திருக்கோயில் பணியாளர்கள் கூடுதல் சலுகைகளை பெறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******

## 41. அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளையும் பராமரிக்கும் வகையில் 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம் அறிமுகம், பயிற்சி டாக்டர்களுக்கான உதவித் தொகை அதிகரிப்பு, ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் – 12.8.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏழை எளிய மக்களுக்கு, தரமான மருத்துவச் சேவை, தங்கு தடையின்றி கிடைத்திடவும், அனைத்து மக்களும் நோயற்ற வாழ்க்கை வாழவும் தேவையான திட்டங்களை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1) தாய் சேய் நலப் பிரிவுகளை மேம்படுத்தும் வகையில், மதுரை மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தாய் சேய் நலப் பிரிவுகள் 50 கோடி ரூபாய் செலவில், மேன்மைமிகு மையங்களாக மேம்படுத்தப்படும் என என்னால் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில் திருச்சி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசு ராணியார் மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றில் தலா 20 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 60 கோடி ரூபாய் மதிப்பில் மூன்று மேன்மைமிகு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், மேற்படி மருத்துவமனைகளின் மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பிரிவுகள் வலுப்படுத்தப்படுவதோடு, 200 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு, நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும். மேலும், கூடுதலாக சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

2) திருத்தி அமைக்கப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மாதவிடாய் சுகாதாரத் திட்டம், சீரமைக்கப்பட்ட மற்றும் உயர்த்தப்பட்ட நிதி உதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், நடமாடும் மருத்துவமனைத் திட்டம் என்ற வரிசையில், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 1,000 ரூபாய் மதிப்புடைய "'அம்மா' குழந்தை நல பரிசு பெட்டகம்", அதாவது Amma Baby Care Kit வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பெட்டகம், குழந்தையை பாதுகாப்பாக பராமரிப்பதற்குத் தேவையான பராமரிப்புத் துண்டு, குழந்தை உடை, குழந்தை படுக்கை, குழந்தை பாதுகாப்பு வலை, குழந்தை நாப்கின், 100 மில்லி லிட்டர் அளவு கொண்ட

எண்ணெய் டப்பா, பிளாஸ்டிக் குப்பியில் 60 மில்லி லிட்டர் ஷாம்பூ, சோப்புப் பெட்டி, சோப்பு, நக வெட்டி, கிலுகிலுப்பை, பொம்மை, சுத்தமான கைகளுடன் குழந்தையை பராமரிக்க பிளாஸ்டிக் டப்பாவில் 250 மில்லி லிட்டர் அளவு கை கழுவும் திரவம், பிரசவித்த தாய்க்கு 100 கிராம் எடையுள்ள சோப்பு, பிரசவித்த தாயின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், தாய்ப்பாலை அதிகரிக்கவும் 'சௌபாக்கியா' சுண்டிலேகியம், தாய் மற்றும் பச்சிளம் குழந்தையைப் பராமரிக்க தேவையான பொருட்களை வைத்துக் கொள்ள ஒரு பெட்டகம் என 16 பொருட்களை உள்ளடக்கியதாகும். நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கு 67 கோடி ரூபாய் செலவு ஏற்படும். இதனால் 6.7 லட்சம் குழந்தைகள் பயன் பெறுவர்.

3) ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைக்கு இணையான சிகிச்சை அரசு மருத்துவமனைகளில் கிடைக்கப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில், அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில், தனியார் அமைப்புகளுடன் இணைந்து டயாலிசிஸ் (Dialysis), டயாக்னோசிஸ் (Diagnosis), டயாபிடிஸ் (Diabetes) மையங்கள் நிறுவப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மையங்களில் கூடுதலாக MRI மற்றும் C.T. ஸ்கேன்கள் நிறுவப்படும்.

4) சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு கூடுதல் வசதிகள் செய்து தரும் பொருட்டு, புற நோயாளி பிரிவு, முடக்கியியல் பிரிவு, சிறு நீரகவியல் அறுவை சிகிச்சை பிரிவு மற்றும் சிறு நீரகவியல் மருத்துவப் பிரிவு ஆகியவற்றிற்கு 50 கோடி ரூபாய் செலவில் அடுக்கு மாடிக் கட்டடம் கட்டப்படும்.

5) நிர்வாக வசதிக்காகவும், மக்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைக்கவும் ஏற்கெனவே உள்ள பெரிய வட்டங்களை பிரித்து, புதிய வட்டங்களை அரசு உருவாக்கி வருகிறது. பல புதிய வட்டங்களில் தற்போது அரசு வட்ட மருத்துவமனை இல்லை. அரசு வட்ட மருத்துவமனை இல்லாத புதிய வட்டங்களில், புதிய அரசு மருத்துவமனைகளை படிப்படியாக ஏற்படுத்தும் வகையில், முதற்கட்டமாக நடப்பாண்டில் 10 வட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 25 கோடி ரூபாய் செலவில் வட்ட மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6) அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத 15 மாவட்டங்களில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற இலக்கை எய்தும் வகையில், மருத்துவர்கள்,

பணியாளர்களை நியமிக்கவும்; உபகரணங்களை வாங்கவும்; மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கெனவும் 97 கோடியே 40 லட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மாவட்ட தலைமை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தும் வகையில், 32 கோடியே 81 லட்சம் ரூபாய் வழங்கப்படும். இதுவன்றி, மேலும் 12 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 31 கோடியே 65 லட்சம் ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

7) தமிழ்நாட்டில் தற்போது 17 மாவட்டங்களில் 19 அரசு மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. கரூர் மாவட்டத்தில் எந்த ஒரு அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரியும் இல்லாததைக் கருத்தில் கொண்டு, கரூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களும், மாணவ, மாணவியரும் பயன்பெறும் வகையில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்.

8) அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கும் அவர்களுடன் வரும் உடனாளர்களுக்கும், நல்ல குடி தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக, நடப்பாண்டில் 45 மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள், 30 மாவட்ட தலைமை மருத்துவமனைகள், 240 வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் என மொத்தம் 315 அரசு மருத்துவமனைகளுக்கு 40 கோடி ரூபாய் செலவில் எதிர் சவ்வூடு பரவல் தண்ணீர் உபகரணம், அதாவது Reverse Osmosis Water Plant நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9) ஏழை நோயாளிகள், அரசு மருத்துவமனைகளில் உயரிய மருத்துவ வசதி பெற வேண்டும் என்பதற்காக அரசு மருத்துவமனைகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, நடப்பாண்டில், மணப்பாறை, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, வாலாஜா, திருப்பத்தூர், காரைக்குடி, அருப்புக்கோட்டை, பரமக்குடி, மேட்டுப்பாளையம், ஆத்தூர் மற்றும் செய்யார் ஆகிய 12 அரசு மருத்துவமனைகளுக்கு எக்ஸ்ரே படத்தை பாதுகாத்து அனுப்பும் வசதியுடன் கூடிய டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள் 13 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

இதே போன்று, பொள்ளாச்சி, கடலூர், பென்னாகரம், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், பத்மநாபபுரம், கரூர், கிருஷ்ணகிரி, உசிலம்பட்டி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், மேட்டூர் அணை, காரைக்குடி, கும்பகோணம், உதகமண்டலம், பெரியகுளம், திருவள்ளூர், தென்காசி, திருப்பூர், செய்யார், மன்னார்குடி, மணப்பாறை, கோவில்பட்டி, கள்ளக்குறிச்சி, விருதுநகர், வேலூர் மற்றும் அரியலூர் ஆகிய 31 அரசு மருத்துவமனைகளுக்கு C-Arm எக்ஸ்ரே கருவி

மற்றும் முடநீக்கியல் அறுவை சிகிச்சைக்கான கருவிகள் 9 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவிலும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10) ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 படுக்கைகள் கொண்ட ஓர் அரசு மருத்துவமனை அமைக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில், 131 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் 122 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 18 கோடியே 52 லட்சம் ரூபாய் செலவில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

11) கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, அவர்கள் வாழும் பகுதிகளிலேயே மருத்துவ வசதிகள் கிடைக்கப் பெற வேண்டும் என்பதன் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில், 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 134 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 21 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் மேலும் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

12) மருத்துவ பட்டமேற்படிப்பு மாணவர்கள் மற்றும் செவிலிய மாணவியர்கள், அவர்கள் தங்கி படிக்க வசதியாக, சென்னை மருத்துவக் கல்லூரியில் 6 கோடி ரூபாய் செலவில் நடப்பாண்டில் புதிய விடுதிகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

13) அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு துல்லியமான பரிசோதனை முடிவுகள் அறிந்து சிகிச்சை தர வேண்டும் என்பதற்காக, MRI ஸ்கேன், C.T. ஸ்கேன் போன்ற நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் 5 கோடி ரூபாய் செலவில் புதியதாக எம்.ஆர்.ஐ. ஸ்கேன் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

14) அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரியும் பயிற்சி மருத்துவர்கள், முதுநிலைப் பட்டம் பயிலும் மருத்துவர்கள், முதுநிலை பட்டயம் பயிலும் மருத்துவர்கள், உயர்தர சிறப்பு படிப்பு பயிலும் மருத்துவர்கள், நரம்பு அறுவை சிகிச்சை முதுநிலை பட்டம் பயிலும் மருத்துவர்கள் என 4,088 பயிற்சி மருத்துவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக் கால உதவித் தொகை உயர்த்தித் தரப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களின் கோரிக்கையினை ஏற்று, பயிற்சி மருத்துவர்களுக்கான உதவித் தொகை 8,500 ரூபாயிலிருந்து 13,000 ரூபாயாகவும்,

முதுநிலைப் பட்டம் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை முதல் ஆண்டிற்கு 18,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும், இரண்டாம் ஆண்டிற்கு 19,000 ரூபாயிலிருந்து 26,000 ரூபாயாகவும், மூன்றாம் ஆண்டிற்கு 20,000 ரூபாயிலிருந்து 27,000 ரூபாயாகவும், முதுநிலை பட்டயம் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை முதல் ஆண்டிற்கு 18,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும், இரண்டாம் ஆண்டிற்கு 19,000 ரூபாயிலிருந்து 26,000 ரூபாயாகவும், உயர்தர சிறப்பு படிப்பு பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை முதல் ஆண்டிற்கு 21,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், இரண்டாம் ஆண்டிற்கு 22,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், மூன்றாம் ஆண்டிற்கு 23,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், நரம்பு அறுவை சிகிச்சை முதுநிலை பட்டம் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை நான்காம் ஆண்டிற்கு 21,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், ஐந்தாம் ஆண்டிற்கு 22,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், ஆறாம் ஆண்டிற்கு 30,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது தவிர, பயிற்சி மருத்துவர்களுக்கு ஆண்டு உதவித் தொகை உயர்வு 400 ரூபாய் எனவும், முதுநிலை மருத்துவர்களுக்கு 700 ரூபாய் எனவும் நிர்ணயம் செய்யப்படும். இதன் மூலம் அரசுக்கு 28 கோடியே 74 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகள் மேலும் சிறந்து விளங்கவும், பொதுமக்கள் குறிப்பாக ஏழை எளிய மக்கள் சிறப்பான உயர் தர மருத்துவ சேவையை அரசு மருத்துவமனைகளில் பெறவும், பயிற்சி மருத்துவர்கள் கூடுதல் உதவித் தொகை பெறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******